ஸ்ரீ



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:


# ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ

| முழக்கம்-14 | பாஞ்சஜன்யம் பிப்ரவரி-2011-141 | ஒலி 2 |
| --- | --- | --- |


## இந்துக்கோயில்களை நிர்வகிக்க தனி வாரியம் வேண்டும்

மக்கள் வாழ்வில் சமய உணர்வை, முறையாக வளரச் செய்ய அமைந்தவைகளே, திருக்கோயில்கள். இவை இயல், இசை, நாடகம் என்று கிளர்ந்த மூவகை கூறுகள் மூலம் இறைவனைத் தொழு வதற்கு அமைக்கப்பட்ட திருத்தலங்களாகும். திருக் கோயில்களின் உண்மைப் பயனை, மக்கள் உணரவில்லையானால் நாட்டில் அன்பு, பக்தி, ஞானம், வைராக்கியம் முதலிய நற்பண்புகள் மறைந்து எவ்வழி யேனும் பொருளை சேர்ப்பதே வாழ்வின் குறிக்கோளாகவும் வஞ்சனை, சூது, அநீதி, இவைகளையே பெறுவதற்குரிய வழிகளாகவும் கொண்டு மனிதப் பண்பாடே அழிந்து போகும் நிலை தோன்றலாம். இத்தகைய நிலை தோன்றாமல் காக்கவல்லவைகளே திருக்கோயில்கள். தமிழ் நாட்டை நினைத்தவுடன் மனதில் தோன்றுவது கலையழகு கொண்ட கூடங்களும், வானளாவி உயர்ந்து நிற்கும் கோபுரங்களும் ஆகும்.

மக்கள் நலனில், நாட்டம் கொண்ட மாமன்னர்கள் திருக்கோயில்களை நிர்மாணம் செய்து, சமய, சமுதாய, பண்பாட்டு கேந்திரங்களாக அவற்றை அமைத்தார்கள். தெய்வீக மணமும், இறையுணர்வும் ஒருசேரப்பட்ட புண்ணிய பூமி தமிழகம். ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'', ''கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' போன்ற முது மொழிகள் இந்தக் கருத்தைத் தெளிவு படுத்துகிறது.

1927இல் நீதிக் கட்சியின் ஆட்சி காலத்தில் சென்னை, ஹிந்து சமய கட்டளைகள் சட்டம் நிறைவேற்றப்பட்டு, ''சமயக் கட்டளைகள் போர்டு'' ஒன்றும் அமைக்கப்பட்டது. காலப் போக்கில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன. 1959இல் ஹிந்து சமய ஆலயங்கள் மற்றும் அறக்கட்டளைகள் சட்டம் இயற்றப்பட்டது. அறநிலைய போர்டிலிருந்து அறநிலைய இலாகா தொடங்கியது. சமயத்தில் நம்பிக்கையில்லாத, பற்று இல்லாத ஆட்சியாளர்கள் அரசியல்வாதிகளின் கூடாரங்களாக கோயில்கள் மாற்றம் பெற்றன. மாவட்டம், வட்டம் போன்ற அரசியல் சார்புடைய உறுப்பினர்களை அறங்காவலர்களாக்கி ஆலயச் சொத்துக்களை அபகரித்துக் கொண்டார்கள், கொண்டிருக் கிறார்கள்.

அரசியல் சாசனத்தின் 26ஆவது பிரிவின்கீழ் முகம் மதியர், கிறிஸ்துவ மதத்தினர் தர்ம ஸ்தாபனங்களை நிறுவி அதை அவர்களே நிர்வகிக்கும் பூரண சுதந்திரத்தை அனுபவித்து வருகின்றனர். அவைகளின் நிர்வாகம் சொத்து, வருமானம், செலவு என்பன போன்றவைகளில் அரசாங்கம் தலையிட முடியாது. சமயசார்பற்ற அரசாங்கத்தின் செல்லப் பிள்ளைகளாக அவர்கள் இருந்து வருகிறார்கள்.

இன்று, ஆலய அர்ச்சகர்கள் மற்றும் உள்துறை அலுவலர்கள் மிகவும் குறைந்த வருவாயிலேயே வாழ்க்கை நடத்துகிறார்கள். அரசு அலுவலர்களுக்குப் பல ஆயிரக்கணக்கில் சம்பளமாக வழங்கப் படுகிறது. இத்துடன் கோயில் தணிக்கை இலாகா ஊழியர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் ஆலய

நிதியிலிருந்து சம்பளம் வழங்கப் படுகிறது. திருக்கோயிலின் ஆண்டு வருமானத்தில் 11 சதவிகிதம் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பப்படுகிறது. 4 சதவிகிதம் தணிக்கை அதிகாரிகளுக்கு உரிய கட்டணமாக செலுத்தப்படுகிறது. மேலும் அவ்வப்போது ஆணையர் பிறப் பிக்கும் உத்தரவின்படி கணிசமான தொகை சில திருக்கோயில் களுக்கு உதவி நிதியாகத் தரப்படுகிறது. ஆணையரின் மேற் பார்வையின் கீழ் நிர்வகிக்கப் படும் பொது நல நிதிக்கு உயர் வருமானம் உள்ள திருக்கோயில் களிலிருந்து நிதி உதவி அளிக்கப் படுகிறது. இதுதவிர திருவரங்கம் போன்ற திருக்கோயிலில் ஆண்டுக்கு 50 லட்சம் ரூபாய் நிகர் நிதியாகக் கிடைக்கின்றது. இது வங்கிகளில் நிரந்தர வைப்பு நிதியாக வைக்கப்படுகின்றது. திருவரங்கத்தில் நடைபெறும் அனைத்து விழாக்களுக்கான செலவினங்கள் உபயதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நித்ய பூஜை கட்டளை என்ற பெயரில் ஒரு குறிப்பிட்ட அளவு அமுது படிகளுக்கு சில நாட்களில் பத்திற்கும் மேற்பட்ட உபயதாரர்கள் பணம் செலுத்தி வருகின்றனர்.

பாமரமக்கள் முதல் செல்வந்தர்கள் வரை கோயில் நலனுக்காகவும், ஆலயத்தின் பூஜைகள் மற்றும் விழாக்கள் சிறப்புடன் நடைபெறவும், திருப்பணிகள் செய்யவும், உண்டியலில் காணிக்கையாக செலுத்துகிறார்கள். பொதுமக்களால் ஆலய நலனுக்காக செலுத்தப்படும் தொகையினை ஆட்சியில் அமர்ந்துள்ள அரசியல்வாதிகளின் சுயவிளம்பரத்திற்காகவும், சமயசார்பற்ற பணிகளுக்காகவும் செலவு செய்கிறார்கள். உதாரணத்திற்கு செந்தமிழ் மாநாடு நடைபெறுவதற்கு பலகோடி ரூபாய்கள் அனைத்து தேவஸ்தானத்திலிருந்தும் வசூலிக்கப்பட்டது திருவரங்கத்தில். ஆழ்வார்கள் விழா என்ற பெயரில் கடந்த 13.11.2010 அன்று நடைபெற்ற விழா ஒரு தி.மு.க கட்சிவிழா போலக் காட்சியளித்தது. ***(இராமாநுசரைவிட விஞ்சிய சிந்தனை படைத்தவர் கருணாநிதி என்று புகழாரம் சூட்டப்பட்டது. ஆழ்வார்கள் விக்ரஹங்கள் எழுந்தருளியிருக்கும் இந்தத் திருக்கோயிலில் கட்சி மகாநாடு***

***போல ஆழ்வார்கள் படத்திறப்பு நடைபெற்றது. இதற்கெல்லாம் திருக்கோயில் பணம் விரயம் செய்யப்பட்டது. அண்ணா பிறந்த நாளில் அன்னதானம் செய்ய வேண்டும் என்றால் அதை அறிவாலயங்களில் செய்ய வேண்டும், அதைவிட்டுவிட்டு திருக்கோயில்களில் சமபந்தி போஜனம் செய்வது ஏன்? பாவம் மந்திரிகளும், மாவட்ட ஆட்சி யாளரும்! 10 மணிக்கு சமயபுரத்தில் சாப்பாடு, 12 மணிக்கு மலைக்கோட்டை விநாயகர் கோயிலில் சாப்பாடு, 1 மணிக்கு அரங்கநாதர் கோயிலில் சாப்பாடு. அவர் எப்படிச் சாப்பிடுவாரோ?)***

அரசியல்வாதிகளின் பிறந்த நாட்களில் அன்னதானம், சமபந்தி போஜனம், இலவசத் திருமணங்கள் ஆகியவற்றிற்கும் செல வழிக்கப்படுகிறது. பக்தர்களின் காணிக்கைகளை தன்னிச் சையாக செலவு செய்வது சட்டவிரோதமானது. 1983இல் ஆலய பணத்தை தன்னிச்சையாக செலவு செய்ய உதவும் சட்டம் ஒன்றினை இயற்றி முந்தைய சட்டம் திருத்தப்பட்டது. இதற்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஆளும் கட்சி உறுப்பினர்களே அறங் காவலர்களாக இருப்பதால் சட்டத்தை எதிர்க்கவோ, இதனால் ஏற்படும் பாதிப்புகளையோ எடுத்துக் கூறவில்லை. பல்லாயிரக் கணக்கான மக்கள் பக்தியுடன் வந்து தரிசனம் செய்வதற்கு நுழைவுக் கட்டணம், விசேஷ தரிசன கட்டணம் என்று பல வழிகளில் வசூல் செய்கிறார்கள். அதுவும் முறையாக வசூலிக்கப்படுவதில்லை. திருவிழாக்காலங்களில் அர்ச்சனை கட்டணம் வசூல் செய்கிறார்கள். ஆனால் அர்ச்சனை செய்வதில்லை. ஒருசில ஆலயங்கள் தவிர, பெரும்பாலான ஆலயங்களில் பக்தியில்லாத, ஸம்பிரதாய விதி முறைகள் தெரியாத வர்கள்தான் பணிபுரிகிறார்கள். இவர்கள் ஆலயங்களை முறையாக பராமரிப்பதற்கும், வழிபாடுகளையும் முறையாகச் செய்வதற்கும் முயற்சிகளை மேற்கொள்வதில்லை. கோயில் சொத்துக்கள் தனியார் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி யிருக்கின்றன. கோயில் நிலங்களில் பயிரிடும் குத்தகைதாரர் களிடமிருந்து குத்தகைகள் ஒழுங்காக வசூல் செய்யப்படுவதில்லை. கோயில்களுக்குச் சொந்தமான இடங்கள், நிலங்கள் ஆக்கிரமிக்கப்

பட்டுள்ளன. ஆக்கிரமிப்புக்கு உடந்தையாக இருப்பவர்களே ஆலய நிர்வாகத்தினர்தான்.

கட்டிடங்கள் கட்டுவது, நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வது போன்றவைகளை அனுமதித்து விட்டுப் பெயருக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டு அந்தச்செயலை அவர்கள் கண்டு கொள்வதில்லை. அரசியல் செல்வாக்கு பெற்றவர்கள், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் திருக்கோயில் அலுவலர்களின் பலவீனம் ஆகியவை இதற்குத் துணை போகின்றது. நாட்டில் அரசியலையே தொழிலாகக் கொண்டுள்ள ஒரு சில மனிதர்கள் கோயில் நிலங்களில் குடியிருப்போருக்கு அவர்கள் பெயரி லேயே பட்டா தரவேண்டும் என்றும் அவ்வப்போது போராட்டம் நடத்தி வருகிறார்கள். இவர்கள் சர்ச்சுகளுக்கும், மசூதிகளுக்கும் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றனவே அவற்றை பட்டா போட்டு நலிவுற்றோருக்குத் தந்திட போராட்டம் நடத்துவார்களா? மன்னர்களும், பெருநிலக் கிழார்களும், படைத்தலைவர்களும், அரசியரும் கோயில்களை நல்ல நிலைமையில் பராமரிக்கப் படவேண்டும் என்பதற்காக அளித்த நிலத்தை ஆக்ரமிப்பாளருக்கு பட்டா செய்து கொடுப்ப தற்காகக் கொடுக்கவில்லை. மதச்சார்பற்ற அரசு அனைத்து மதத்தினரின் நிலங்களையும் பட்டா செய்து கொடுக்கும்போதுதான் அது உண்மையான மதச்சார்பற்ற அரசாகும். ஆனால் நம் நாட்டின் தலைவிதி மதச் சார்பின்மை என்றால் ‘‘இந்துக்களை ஒடுக்கு, இந்துக்களின் உரிமைகளில் தலையிடு, இந்துக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை பட்டா போட்டுக்கொடு, இந்துக் கோயில்களை இடி’’ என்பது பொருளாகும்.

ஆலயங்களுக்குச் சொந்தமான கடைகள் மிகவும் குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. கடை வைத்திருப்பவர்கள், அதில் ஒருபகுதியை இவர் கொடுக்கும் வாடகையைவிட பத்து மடங்கு அதிக வாடகைக்கு விடுகிறார்கள். கடையைக் காலி செய்யும் பொழுது அதை அடுத்தவருக்கு ஒப்படைக்கும் பொழுது பல

லட்சங்கள் பேரம் பேசப்படுகிறது. ரூ.5,000/- பெறுமான மாத வாடகை உள்ள கடைகளை ரூ.500/- மற்றும் அதற்கு குறைந்த வாடகைக்கு வழங்கி, கையூட்டு பெறுகிறார்கள். இது அனைவரும் அறிந்த உண்மை.

ஆலயங்களுக்குத் திருப்பணி செய்வது அந்தந்த பகுதி களில் உள்ள ஆலயத்தின்பால் பற்றுள்ள பக்தர்களின் முயற்சி யால் நடைபெற்று வருகிறது. இதிலும் அறநிலையத்துறை, அக்கறை எடுத்துக் கொள்ளாததோடு மட்டுமன்றி திருப்பணி செய்பவர் களுக்குப் பல துன்பங்களைக் கொடுத்து வருகிறது. திருப்பணி செய்ய முன்வருபவர்களுக்கு சட்ட விதிமுறைகளும், அதிகாரிகளின் மெத்தனமும் முட்டுக்கட்டையாக இருக்கின்றன. மேலும், வேலைகளை அதிகாரப் பூர்வமான ஒப்பந்தக்காரர் களுக்கு வழங்க வேண்டும் என்று கூறுகிறார்கள். அவர்களிடம் ஒப்படைக்கும் பொழுது வேலையின் தரம் குறைகிறது. பொதுமக்கள் அவர்களை அணுகி விபரம் கேட்டால் நாங்கள் 10%, 20% அதிகாரிகளுக்குப் பணமாகக் கொடுக்கவேண்டும் என்று கூறுகிறார்கள். இது உண்மை. ஆனால் நாம் அரசாங்கத்திடம் முறையிடும்போது இவற்றை நிரூபிக்க முடியுமா என்று சவால் விடுகிறார்கள். இதுதான் பல முறைகேடுகளுக்கு அடித்தளமாக அமைகிறது.

பிற மதத்தவர்கள் தத்தம் நிறுவனங்களை சுயமாக நிர்வகித்துக் கொள்ள அனுமதிக்கும் அரசாங்கம் இந்துக்களின் ஆலயங்களை மட்டும் அறநிலையத்துறையின் கட்டுப்பாட் டின் கீழ் வைத்துள்ளது ஏன்? ஆகவே, தனித்து இயங்கும் வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும். அண்டை மாநில மாநில ஆந்திராவில் இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## அரங்கநாதசுவாமி கோயிலின் சொத்து மற்றும் வருமானம் பற்றிய ஓர் கண்ணோட்டம்.

நஞ்சை -402 ஏக்கர், 51 சென்ட், 2. புஞ்சை - 1139 ஏக்கர், 90 சென்ட், 3. கடை, கட்டிடம் - 68, 4. மனை -182. வருட வருமானம்- 1. நஞ்சை - ரூ. 3,33,378, 2. புஞ்சை- ரூ. 64,635, 3.

கடை, கட்டிடம்-ரூ. 9,07,319, 4. மனை- ரூ. 78, 898. உண்டியல் மூலம்-2010இல் பெறப்பட்ட வருமானம். மாதந்தோறும் திறப்பின்படி ரூ. 2,89,20,128. அரசு வரிகள் நித்தியபடி ஏறுபடி பூஜை செலவினம், பணியாளர் ஊதியம், மின்கட்டணம், இலாகா கட்டணம் அங்கீகரிக்கப்பட்ட திட்டப் பதிவேட்டின்படியும், விதிகளின்படியும் செலவு செய்யப்படுகிறது.

## புதைக்கப்பட்ட உண்மைகளும், மறுக்கப்பட்ட உரிமைகளும்.

1200 ஆண்டு காலமாகவும், 800 ஆண்டு காலமாகவும், நடைபெற்று வந்த சில முறைமைகளையும் மரபுகளையும், மரியாதைகளையும் 2010ஆம் ஆண்டு திருக்கோயில் நிர்வாகம் அதற்குரிய நபர்களுக்கு அளிக்க மறுத்ததோடு மட்டுமல்லாமல் ஒருவருக்கு வழங்கப்படவேண்டிய ‘‘இயற்கை நீதி’’ (Principle of Natural Justice) எனப்படும் அடிப்படை நீதிக் கோட்பாடுகளைக் கூட கடைபிடிக்கத் தவறிவிட்டது. திருவரங்கம் கோயிலில் நடைமுறையில் இருந்து வரும் மரபுகளை மாற்றுவதற்கு 1959ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தின் படியும், இந்திய அரசியல் சாசனப் பிரிவுகள் 25, 26இன்படியும் பல்வேறு உயர்நீதி மன்றங்கள் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளின் அடிப்படை யிலும் அறங்காவலர் குழுவிற்கு அதிகாரம் இல்லை. அவசர கதியில் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம் சட்டப்படி செல்லாதேயாகிலும் இன்று அதிகார வர்க்கத்தின் ஆணவப்போக்கால் மரபுகள் மீறப்பட்டு மரியாதைக்குரியவர்கள் அவமானப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

ஆகம வழியில் அமைந்து மரபுகளைப் போற்றிக் காத்து உண்மை நம்பிக்கைகளை வளர்க்கும் ஒரு அமைப்பு ஆலயம். கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் அதன் நிர்வாஹத்தில் பங்கு கொள்ளத் தகுதியற்றவர்கள்.

நம்பாடுவான்-திருப்பாணாழ்வார் இவர்கள் சமூக நிலையில் கடைநிலையில் உள்ளவர்களை இறைவனிடம் தங்களை முழுவதுமான ஒப்படைத்தவர்கள். சுயநலத்தை அறவே ஒழித்து கட்டிவிட்டு அவன் ஒருவனையே நாடி நின்றவர்கள். திருப்பாணாழ் வாரை லோக சாரங்க முனிவர் தோள்களில் எற்றி கோயிலுக்கு வரச் செய்தான் திருவரங்கன்.

நம்பாடுவான் (பாடலை விரும்பி) அவன் கைசிக ஏகாத சியில் இறைவனை வணங்கிவிட்டு தான் பெற்ற புண்ணியத் தால் பிரம்ம ராக்ஷஸாக சபிக்கப்பட்ட சோமசர்மா என்ற அந்தணனின் குறை நீங்க காரணமாயிருந்தான் அனைவருக்கும் சமூக அமைப்பில் எவ்வளவு தாழ்ந்தவராயினும் இறையருள் உண்டு அவர்கள் வெறும் புண்ணியம், பாவம் செய்த அந்தண னைக் கூட உய்விக்கும் என்பதே அறியப்படவேண்டியது.

பெருமைக்குரியவர்கள் மதிக்கப்படவேண்டும் அரசனோ, அமைச்சரோ, அறிவாளியோ, அதிகாரிகளோ பெரிய வர்களோ மதிக்கப்படுவது சாதாரண மனிதனிலிருந்து விலகி வேறுபட்டு உயர்ந்து நிற்கும் தன்மையால் அவன் வகிக்கும் பதவியில் நேர்மையாகச் செயல்படுவதால் அதிலும் உலகோர்களுக்கு உண்மையை விளக்கும் செயல்களால் வாழையடி வாழையடியாக வழங்கப்படும் மரபின் உண்மையை உணராது மனம் போன போக்கில் தவறாக நடப்பது எவ்வளவு அநாகரீகமானது? மரியாதையை உணர்ந்து செயல்படுவது மனம். தேசியக் கொடிக்கு-அறிவற்ற ஒரு துணியை, நாட்டின் கௌரவமான சின்னமாக ஏற்று மதிப்பைத் தருகிறோம். உயர பறக்க விடுகிறோம். உண்மையைக் காட்டித்தரும் ஒரு மரபை உணரக்கூடுமானால் தங்கள் மனம் போனபடி செய்யத் தகுதியில்லத காரியங்களைச் செய்யத் துணிவார்களா? அதுவும் அறம் காக்க வேண்டியவர்கள் செய்யும் செயலா? வெட்கப்பட வேண்டிய விஷயம். அதுவும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆக்ஷேபிக்கப்பட்டு மாற்றார்களான ஆங்கிலேயர்களாலேயே நிலை நிறுத்தப் பட்ட ஒரு மரபைக்

குலைக்க தங்களுக்கு இல்லாத ஒரு அதிகாரத்தை அறங்காவலர்கள் செய்யத் துணிவது!

அறங்காவலர்கள் மரபை மீறமுடியாது. நிலைமை இப்படியிருக்க, இல்லாத உரிமையை இருப்பது போல் பாவித்து சுயநலவாதிகள் தங்கள் மனம் போன போக்கில் ஒரு தீர்மானித்தை நிறைவேற்றுவது, செயல்படுத்துவது அதுவும் மிராசுதார்களும், பாஞ்சஜன்யம் ஆசிரியரும் முறையிட்டும் அதை அலட்சியப்படுத்தி. இப்படி ஒரு அறங்காவலர் குழு இயற்றிய தீர்மானத்தை பின்வரும் அறங்காவலர் குழு இல்லை யாக்கமுடியும். ஆனால் தங்களுக்கு உரிமையில்லாத நிலத்தில் அத்துமீறுதல், கோயில்களின் அமைதியையும் வாழ்வையும் குலைக்கும். அதுதான் இவர்கள் நோக்கமோ? இப்படிப்பட்ட கொடுங்கோல் ஆட்சியை தட்டிக் கேட்பவர்கள் இல்லையா?

இராமாயணத்தில் ராவணனால் சிறை வைக்கப்பட்ட சீதை இலங்கையில் ராவணனுக்கு புத்திமதி சொல்லும் நல்லவர்களே இல்லையா என்று கேட்கிறாள். மதி மயக்கமும் பதவியில் உண்டான ஆணவமும் கொண்டவனுக்கு புத்திமதிகள் சொன்னால் அவன் உள்ளத்தில் அவை பதியாது. மஹாபாரதத்தில் துரியோதனன் சபையில் திரௌபதி மானபங்கப்படுத்தப் பட்டபோது பீஷ்மர், துரோணர் போன்ற மஹான்கள் அந்த அக்ரமத்தைக் கண்டிக்காததன் விளைவாக துரியோதனும், துச்சாதனனும் போரில் மாண்டு ஒழிந்தனர்.

இதுவே இன்றைய உண்மை நிலை, சாமான்யங்கள் உண்மை நிலையறியாது கோவில்களில் ஆண்டவ தரிசனம் என்ற பெயரில் நுழைவு சீட்டுக்கு பணம் கொடுத்து மற்றவர் களுக்கு முன்னால் சென்று தங்களது ஆசைகளையும், அல்லல்களையும் ஆண்டவனிடம் முறையிட துடிப்பவர்கள். ஆண்டவ தரிசனம் பொதுவானது. அவனுக்கும் இவர்களுக்கும் உள்ள உறவு இயல் பானது முறையாக ஒழுங்காக கிடைக்க வேண்டிய ஒன்று காசு

கொடுத்து விலைக்கு வாங்குதல் யார் பொருளை யார் யாருக்கு கொடுக்கிறார்கள். உரிமை வியாபாரமாக்கப் படுகிறது.

காலம் காலமாக பொது நலனையே மையமாகக் கொண்டு அரசர்களாலும், அறிவாளிகளாலும் ஆன்மிக வாதி களாலும் அறம் வளர்க்கப்பட்ட கோயில்கள் பலபல இன்னல் களையும் சந்தித்துள்ளன. கோயில்களின் செல்வச் செழிப்பை கொள்ளை யடிக்கும் கும்பல்கள், தங்கள் எண்ணங்களையே உயர்வாக எண்ணி கோயில்களில் முறையற்ற வழியில் புகுந்து குழப்பம் விளைவிக்கும் சுயநலவாதிகள்.

20.9.2010அன்று உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவர் போலவும், தன்னை சமுதாய சிந்தனையின் முழுவடிவாகக் எண்ணம் கொண்டுள்ள அரங்கநாத சுவாமி திருக்கோயில் இணை ஆணையர் கீழ்க்கண்ட கடிதம் ஒன்றை அரையர்களுக்கும் பட்டர் களுக்கும் எழுதியுள்ளார்.

> ‘‘திருக்கோயில் வழிபாடு செய்யும் இறைவனைத் தான் பல்லக்கில் தூக்கிக் கொண்டு செல்வது முறையாகும். அவ்வாறின்றி மனிதனை மனிதனே தூக்கிக் கொண்டு செல்வது தவிர்க்க வேண்டிய செயலவாகும். ஆலயத்தில் மனிதன் இறைவனை தான் வணங்கவேண்டும். ஆலய வளாகத்தில் பிரம்மரத மரியாதை நடைபெறும் நாட்களில் மனிதனை மனிதன் பல்லக்கில் தூக்கிக் கொண்டு வருவதும் அதைப் பார்க்கும் வேறொரு மனிதன் வணங் குவதும் ஏற்கத்தக்கதல்ல. அரசாங்கமே மனிதனை மனிதனை உட்கார வைத்து கையினால் இழுத்துக் கொண்டு செல்லும் கைரிக்ஷாவினை ஒழித்துவிட்டது. பல்லக்கில் தூக்கிச் செல்வது ரத்து செய்வது பழக்கம் வழக்கம் என்ற பெயரால் மனிதனுக்குள் மனிதன் உட்கார வைத்து கையினால் இழுத்துக் கொண்டு செல்லும் கைரிக்ஷாவினை ஒழித்து விட்டது. ஆலயத்திற்குள் பதவி, இனம், பால், மொழி என்ற

காரணமாக வேறுபாடு இருத்தல் கூடாது என்பது தங்களுக்கும் தெரிந்ததே. எனவே தங்களை பல்லக்கில் செல்வதை ரத்து செய்வது குறித்து தங்கள் கருத்தினை 15 நாட்களுக்குள் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது''.

**(ஒவ்வொருகோயிலிலும் ஒவ்வொரு பழக்க வழக்கம் நீண்ட காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. அது அந்த கோயிலின் தனித்தன்மையை வெளிப்படுத்துகிறது. இணை ஆணையரோ அல்லது அறங்காவலர் குழுத்தலைவரோ 'கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டத்தை' மேற்கோள் காட்டி திருக்கோயில் பழக்க வழக்கத்தை நிறுத்த முயலக்கூடாது. ஏனெனில் அவ்வாறாகிய சமுதாயச் சீர்திருத்தத்தை தாசிகள் ஒழிப்புச் சட்டம் போல், ஆலயப் பிரவேச சட்டம் போல் மாநிலச் சட்ட சபையில் சட்டம் இயற்றி கஜட்டில் அறிவித்த பிறகே நடை முறைப்படுத்த இயலும். அறங்காவலர் குழுவினருக்கு இத்தகைய அதிகாரம் வழங்கப்படவில்லை. நம் நாட்டில் வியாபாரம் செய்ய வந்த கிழக்கிந்தியக் கம்பெனியினர் நாட்டையே ஆள முற்பட்டதுபோல் அமைந்துள்ளது இந்தச் செய்கை. வரவு செலவு திட்டங்கள், குடிநீர் வசதி போன்ற செயல்களை ஒழுங்குபடுத்தவே அறங்காவல் குழுவிற்கு அதிகாரம் உண்டேஒழிய மரியாதைகளை ஒழித்து விடுவோம் என்று சொல்வதற்கு எந்த உரிமையும் இல்லை. நாட்டையாளும் மந்திரிகளும் உயர் அதிகாரிகளும் சட்டத்தை மதிக்காத இந்தக்கால கட்டத்தில் அரசியல் பின்னணி கொண்ட அறங்காவலர் குழுத்தலைவரும் அதன் உறுப்பினர்களும் இத்தகைய அதிகார வரம்பு மீறிய செயல்களைச் செய்வதில் எந்த வியப்பும் இல்லை.**

**ஆலயத்திற்குள் பதவி, இனம், பால், மொழி என்ற காரணமாக வேறுபாடு இருத்தல் கூடாது என்று எழுதியிருப்பது நகைப்பிற் குரியதாகும். நாளும் நடைபெற்று வரும் அத்து மீறல்கள் இவை. ''சாத்தான் வேதத்தை மேற்கோள் காட்டுவது போல்'' அமைந்துள்ளது இந்தச் சொற்றொடர். இன்னும் சொல்லிக்**

***கொண்டே போகலாம். அதிகார போதை தலைக்கேறியிருக்கும் இவர்களுக்கு என்ன நல்வார்த்தை சொன்னாலும் உள்ளத்தில் கொள்ளமாட்டார்கள். இவர்களை நீதிமன்றம்தான் தண்டிக்க வேண்டும். இந்த நாட்டில் ஒரு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கிற்கு உச்சநீதிமன்றம் வரையில் செல்லலாம். இதுபோல் ஆட்டம் போட்டு அதிகார வெறியுடனும், பணபலத்துடனும் கூடியோர் செய்த செயலை திருக்குறுங்குடி பக்கம்நின்றாரைப் பெயர்த்தெடுத்த வழக்கில் உயர்நீதிமன்றம் கண்டித்துள்ளதைக் கவனத்தில் கொள்ளத்தக்கது. )***

1) இந்தக் கடிதம் 20.9.2010 அன்று பட்டர்கள் மற்றும் அரையர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2) இதற்கான தங்கள் மறுப்பை அரையர்களும் பட்டர் களும் 7.10.2010 அன்று இணையாணையரிடம் கொடுத்து உள்ளனர்.

3) ஆனால் 27.9.2010 அன்றே அறங்காவலர் குழு தீர்மானம் ஒன்றினை அவசரகதியில் பிரம்ம ரத மரியாதை இந்த ஆண்டு முதல் நிறுத்தப்படுவதாக நிறைவேற்றியுள்ளது.

***(ஏன் இவ்வாறு அவசர கதியில் பிரம்மரதம் மரியாதை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, இதன் பின்னணியில் யாருடைய தூண்டுதல் இருந்தது என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு இன்றுவரை பதிலில்லை.)***

4)ஆகவே பட்டர்கள், மற்றும் அரையர்கள் தங்கள் பதிலை அளித்திட்ட போது அவர்களுடைய தரப்பு வாதத்தை கவனத்தில் கொள்ளாது அதற்கு முன்னதாகவே அதாவது 27.9.2010 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. விசாரணையில்லாமலேயே தீர்ப்பு முடிவு செய்யப்பட்டுள்ளது.

5) இது ‘‘இயற்கை நீதி’’ வழங்கப்படவேண்டும் என்னும்

கொள்கைக்கு மாறுபட்டது. 7.10.2010 அன்று இந்த இணை ஆணையர் உங்கள் உரிமை பறிக்கப்பட்டுவிட்டது, இந்த பதிலினால் எந்தப் பலனும் இல்லை என்று ஏன் சொல்லவில்லை?

6) ஆகவே நீதி செத்து விட்டது, உண்மை புதைக்கப் பட்டுவிட்டது.

7) மேலும் இவ்வாறு அறங்காவலர் குழு இயற்றிய தீர்மானத்தை மதுரை உயர்நீதி மன்றக் கிளையில் 11.11.2010அன்று தாக்கல் செய்தார்களே ஒழிய சம்பந்தப்பட்ட நபர்களுக்கு கொடுக்க வில்லை.

8) தினகரன் 15.10.2010 தேதியிட்ட நாளிதழில் பிரம்மரத மரியாதை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் செய்தி வெளிவந்துள்ளது.

9) 29.9.2010 அன்று இந்து சமய அறநிலையத்துறை ஆணையரிடம் பிரம்மரத மரியாதை நிறுத்துவது குறித்து அனுமதி கேட்டு இணையாணையர் கடிதம் எழுதியுள்ளார்.

10) ஆணையரிடமிருந்து இந்தக்கடிதத்தில் கேட்டுள்ள படி இணை ஆணையருக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 10.12.2010 அன்று பதில் பெறப்பட்டது. இதனால் மாண்புமிகு இணை யாணையர் தனது மேலதிகாரியின் உத்தரவை மதிக்கவில்லை என்று தெரிகிறது.

11) மேலும் 10.1.2011 அன்று இந்து சமய அறநிலையத் துறை ஆணையருக்கு கீழ்க்கண்ட கடிதம் அனுப்பப் பட்டுள்ளது.

1) என்னுடைய 6.12.2010 தேதியிட்ட **R.T.I.** கடிதத்தின் மூலம் கீழ்க்கண்ட கேள்வி கேட்கப்பட்டிருந்தது.

1) திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் இணை ஆணையர் திரு. சி. ஜெயராமன், 30-9-2010 அன்று அவருடைய கடித எண். ந.க. 555/ 1420/ டி 1 நாள்:

29.9.2010., பிரும்மரத மரியாதை குறித்து உங்களது அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளார்.

2) இந்தக் கடிதத்தின் மேல் ஆணையர் எடுத்த முடிவு திருவரங்கம் கோயில் இணைஆணையருக்கு எந்தத் தேதியில் அனுப்பப்பட்டுள்ளது? அவருடைய வேண்டுகோளுக்கு இணங்க அனுமதி வழங்கப் பட்டுள்ளதா? அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அதன் நகலைப் பெற விரும்புகிறேன்.

3) அதற்கு உங்கள் அலுவலகத்தில் இருந்து கீழ்க்கண்ட 10.12.2010 தேதியிட்ட பதில் பெறப்பட்டது.

**''மேற்கண்ட பொருள் தொடர்பாக பார்வையில் கண்டுள்ள குறிப்பில் கேட்கப்பட்ட விவரத்திற்கு கீழ்க் கண்டவாறு தகவல் தெரிவிக்கப்படுகிறது. பிரம்மரத மரியாதை தொடர்பாக அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.''**

ஆயினும் 18-11-2010 அன்று கைசிக புராண பிரம்மரதம் அதற்குரிய வேதவ்யாச லக்ஷ்மி நரசிம்ம பட்டருக்கு மறுக்கப் பட்டுள்ளது. இந்தச் செயல் மேற்குறிப்பட்டுள்ள உங்கள் விளக்கத்தின் அடிப்படையில் ஆணையை மீறிய செயலாக ஆணையரால் கொள்ளப்படுகிறதா? இல்லையா? இது குறித்து துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை ஏதேனும் எடுக்கப் பட்டுள்ளதா?

4) 21-12-2010 செவ்வாய்க்கிழமையன்று இராப்பத்து வேத பாராயணத்திற்குரிய பிரம்மரத மரியாதை குறித்து அட்வகேட் திரு. T.C.A. ஸ்ரீனிவாசன் M.A. B.L. மூலம் திருவரங்கம், திரு. பராசர திருவேங்கடபட்டர் மகன் பராசர ஸ்ரீசுதர்சன பட்டர் வாய்மொழி யாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ ஆணையரிடம் முறையீடு ஏதேனும் செய்தாரா? அவ்வாறு முறையீடு செய்யப்பட்டிருந்தால்

பிரம்மரதம் குறித்த ஆணையரின் உத்தரவு ஏதேனும் பிறப்பிக்கப் பட்டதா? அவ்வாறு பிறப்பிக்கப்பட்டதாக தினகரன் 22.12.2010 தேதியிட்ட நாளிதழில் செய்தி வெளிவந்துள்ளது. இது உண்மைக்குப் புறம்பான செய்தியா?

5) 27.9.2010 தேதியிட்ட அறங்காவலர் குழு தீர்மானத்தை முன்னிருத்தி, 18.11.2010 கைசிக பிரம்மரத மரியாதையை நிறுத்து வதற்கு அனுமதி கேட்ட இணையாணையரின் 29.9.2010 கடிதத் திற்கு அவ்வாறு அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்த ஆணையர் பின் நடைபெற்ற அதாவது 26 மற்றும் 27 டிசம்பர் 2010 தேதிகளில் நடைபெறாமல் தடுக்கப்பட்ட பிரம்ம ரத மரியாதையைப் பற்றி ஏன் முன்நடவடிக்கை எடுக்கவில்லை?

6) இதற்காக இணைஆணையர் மீது துறைத் தொடர்பான நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா?

7) இந்தச் செயல் Principle of Natural Justiceக்கு புறம்பான செயல் அல்லவா?இதன் மூலம் ஆணையர் சட்ட விதிகளுக்குப் புறம்பாக இயற்றப்பட்ட 27.9.2010 தேதியிட்ட அறங்காவலர் குழு தீர்மானத்தை ஏற்றுக் கொள்கிறார் என்று பொருள் படுமா? அப்படியாகில் தங்களுடைய 10.12.2010 தேதியிட்ட கடிதத்திற்கான பொருள் என்ன?

இந்தத் திருக்கோயில்களில் கல்வெட்டுகள் அழிக்கப் பட்டுள்ளன, கல்வெட்டுகள் மேல் மின்சாதனங்கள் பொருத்தப் பட்ட பலகைகள்மேல் ஆணியடித்து கல்வெட்டுகள் பாழ் படுத்தப்பட்டுள்ளன, கல்வெட்டுகளை மறைத்து கட்டிடங்கள் எழுப்பப்பட்டுள்ளன. கல்வெட்டுகளின்மேல் பல வண்ணக் கலவைகளில் திருமண்காப்புகள் தீட்டப்பட்டுள்ளன. இவை யனைத்தும் 1958ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த சட்ட எண் 24. The Ancient Monuments and Archaelogical Sites and Reamins Act, 1958 புறம்பான செயல்களாகும். இந்தக் கோயிலில்

மறுக்கப் பட்ட உரிமைகளில் ஒருசில வற்றையே இங்குக் குறிப்பிட்டு உள்ளேன். புதைக்கப்பட்ட உண்மைகள் ஏராளம் ஏராளம். அவற்றை அனைத்தையும் ஏடு படுத்தினால் 1000 பக்கங்களையும் தாண்டி விடும்.

உபயதாரர்களுக்கு இழைக்கப்படும் அவமரியாதை, திருப்பணி செய்வதற்கு தரப்படும் இடையூறுகள், தரிசனத்தின் போது ஸேவார்த் திகள் படும் துன்பம், கடவுளுக்கு முன் சமம் என்ற கொள்கைக்கு முரணாக கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக்கும் சிலரின் செவி சுடும் வார்த்தைகள், இணையாணையருக்கு அனுப்பப்படும் கடிதங்களை அவர் பார்ப்பதற்கு முன்பாகவே நாத்திகவாதிகளின் கையில் சென்று சேரும் அவலம், இணையாணையர் யோசனை கேட்கும் அவருடைய ''கிச்சன் கேபினேட்'', அவர்களுடைய சுயநலச் செயல்கள் போன்றவற்றை ஆதாரங்களோடு விரைவில் வெளியிடுவோம். திருவரங்கத்தில் அரங்கனின் சாம்ராஜ்யம் ஸ்ரீவைகுண்டத்திற்கு நிகரானது, தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திருநகரம் இன்று பொலிவிழந்து காணப்படுகிறது.

இவையெல்லாம் நீக்கப்படவேண்டுமானால் இந்துக் களிடையே ஒற்றுமை வேண்டும். மரபுமீறல்களைக் கண்டிக்கும் திறல் வேண்டும். ''நமக்கேன் வம்பு'' என்ற போக்கு ஒழிய வேண்டும். இவையெல்லாம் நடைமுறை சாத்தியங்களே. இவையெல்லாம் 'எம்பெருமான் சங்கல்பம்' என்பது போலி வாதம். நம்மைக் கொண்டு எம்பெருமான் தான் சொல்ல நினைப்பதை, செய்ய நினைப்பதை செய்ய முற்பட்டுள்ளான் என்று அவர்கள் ஏன் நினைக்கக்கூடாது? கோழைத்தனத்தை விட்டொழியுங்கள். கூரத் தாழ்வான் மற்றும் பிள்ளைலோகாசார்யர் வைபவத்தை மேடை யிலே சொல்லி முதலைக் கண்ணீர் விடும் பக்திமான்களே! என்று நீங்கள் திருந்துவீர்களோ, அந்தநாளே வைணவத்தின் மறு மலர்ச்சிக்கு வித்திட்ட நாளாகும். ✱✱✱



# ஹரிதாஸரின் இருசமயவிளக்கம்



*இதழ் 139இன் தொடர்ச்சி. விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜ தாஸர்.*

## 6-வது, ஸ்ரீமத் அஷ்டாக்ஷரப் பெரியதிருமந்திரப் பரிச்சேதம் தொடர்ச்சி

11. **ஏயதிரு மந்திரமே இகலோகத்(து)**
**இன்பமெல்லாம் ஈவதற்கும்**
**ஆயபர லோகத்தை அருள்வதற்கும்**
**பராபரனை அறிவித்தற்கும்**
**மேயபிற விக்கடலைக் கரையேற்று**
**வித்தற்கும் வெகுத்தமான**
**தீயசன னந்தோறும் செய்தவினை**
**தொலைப்பதற்கும் திரவுபாயம்;**

(இ.பொ.) இத்தன்மை பொருந்திய இந்தத் திருமந்திரமே இவ்வுலகில் இன்பமெல்லாம் கொடுப்பதற்கும், அவ்வுலகமாகிய பரலோகப் பயனைக் கொடுப்பதற்கும் பரவஸ்துவை அறிவதற்கும், தீயனவாம் பிறவிக்கடலைக் கடப்பதற்கும், பல பிறவிகள் தோறும் செய்த பாவங்களைத் தொலைப்பதற்கும் சிறந்த உபாயமாகும்.

12. **விரும்பிய எட்டெழுத்திருக்க வேறுசில**
**மந்திரம்ஏன்? விரதந்தானேன்?**
**அறம்பெற லாகியதீர்த் தமேன்? மரண**
**காலத்தந் தகனைக்கண்டால்**
**பெரும்பயமேன்? பூதலத்திற் பிறந்திறந்துத்**
**திரியுமிந்தப் பிராந்தேன்? பூண்ட**
**இரும்பின்விலங் கும்பொன்னின் விலங்குமிரண்டாம்**
**இன்பதுன் பந்தாமேன்?**

(இ.பொ.) தத்துவ ஞானிகளால் விரும்பப்பெற்ற இந்தத் திருஎட்டெழுத்திருக்க பிறமந்திரங்களால் என்ன பயனுண்டு? கடிய

விரதங்களால் என்ன பயனுண்டு? புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதாலும் என்ன பயனுண்டு? இந்த மந்திரத்தை மனனஞ் செய்வார் மரணகாலத்தில் எமனைக் கண்டு அஞ்சுவாரோ? பூமியில் பிறந்திறந்துழல்கின்ற துன்பம் இவர்களை அணுகாதன்றோ? இரும்பு விலங்கு போல்வதும் பொன்விலங்கு போல்வதுமான பாவ புண்ணியங்கள் இவர்களைப் பற்றுமோ?

இப்பாடலும் வேதத்தைப் பின்பற்றியது: ''கிம் தத்ர பஹுபிர் மந்த்ரை: கிம் தத்ர பஹுபிர்வ்ரதை: நமோ நாராயணா இதி மந்த்ரஸ் ஸர்வார்த்த ஸாதக:'' (நாரதீயம் அஷ்டாக்ஷரப்ரஹ்மவித்யை) ***(பல மந்திரங்களால் பயன் என்ன? பல விரதங்களால் பயன் என்ன? நமோ நாராயணாய என்னும் மந்திரமே எல்லாப் பயன்களையும் சாதித்துக் கொடுக்குமே?)*** என்றது காண்க.

**13. அந்தியகா லந்தன்னில் எட்டெழுத்தை**
**உச்சரித்தா லவர்கள்போய்வை**
**குந்தமெனும் திருநாட்டை யடைவர்சன**
**காதிமுனி குலங்களெல்லாம்**
**சந்ததமிம் மந்திரத்தை உச்சரித்தே**
**பரமபதந் தன்னைப்பெற்றார்**
**முந்தியவம் மந்திரமே மந்திரசா**
**லங்களுக்கு மூலமாகும்;**

(இ.பொ.) இவையொருபுறமிருக்க, கடைசிகாலத்தில் இந்தத் திருவஷ்டாக்ஷரத்தை உச்சரித்தவர்கள் தெளிவிசும்பாகிய திருநாட்டை அடைவார்கள், சனகாதி முனிக் குலத்திலுள்ள அனைவரும், எப்போதும் இந்த மந்திரத்தைப் பாராயணஞ் செய்தே நாராயணன் தன் பொற்பதம் பெற்றனர். இம் மந்திரமே மற்ற மந்திரங்கட்கெல்லாம் மூலமாகும்;

**14. இங்கிதுவே ரகச்சியத்திற் பரமரகச்**
**சியமாக எல்லாமோதும்**
**பொங்குபலன் இதனையொரு காலுரைக்கிற்**
**சித்திக்கும் புவனத்தென்றும்**
**கங்கையறச் செங்கையெடுத் திதுவேசந்**
**தியம்என்னத் தகும்வியாதன்**

**மங்கலவாய் மையையுரைத் தான் அவன்பெய**
**ராமிருதியினில் வழங்குமாறும்.**

(இ.பொ.) ஆகமமடந்தாய்: ''இம்மந்திரமே ரகசியங்களுக் கெல்லாம் மேலான ரகசியமாகும்; மாசற்ற மனத்துடன் ஒருமுறை இம்மந்திரத்தை உச்சரித்தால் இது எல்லாப்பயன்களையும் கொடுக்கும்; இதுவே (சத்தியமான) உண்மையான மந்திரமென்று கையையுயர்த்தி சத்தியம் செய்யலாம்'' என்று வியாசர் அருளியதாக அந்த வியாசஸ் மிருதி கூறும்.

'பொங்குபலன்'-என்றதனால், எல்லாப்பயனையும் அளிக்கும் என்றவாறு சங்கையற-ஐயமற; வடமொழித்தொடர். வியாதன்- வியாஸன் என்ற வடசொல், வியாதன் எனத் தத்பவமாகி வந்த தமிழ்ச் சொல்.

15. **மருவிட்ட பசுந்துளவ மாயனுக்கு**
**நிகரான வத்துஇல்லைத்**
**திருவட்டாக் கரத்துக்குச் சரியான**
**வேறொரு மந்திரமுமில்லைப்**
**பெருவட்ட வாரிதிசூழ் உலகத்தில்**
**என்றுமறைப் பிரித்துக்கண்ட**
**குருவிட்டமா யுரைத்தபஞ் சமவேதம்**
**தன்னிற் கூறுமன்னோ.**

(இ.பொ.) பசிய திருத்துழாய் மாலையணிந்த செங்கண் மாலுக்கு நிகரான வஸ்து இல்லை, திருஅஷ்டாக்ஷரத்துக் கொப்பான வேறொரு மந்திரமில்லை என்று, பெருவட்ட வடிவமுள்ள கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் வேதம் தனியே பிரித்துக் கூறியதைத் தன் ஞானக்கண்களால் கண்ட குருவாகிய வேதவியாசர் தாம் விருப்ப முடன் கூறியதை ஐந்தாம் வேதமாகிய மகாபாரதம் வகுத்துரைத்தது.

''மருவிட்ட பசுந்துளப மாயனுக்கு நிகரான வத்து இல்லை'' என்றதனால் -''ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம் உத்ருஜ்ய புஜமுச்சயதே ந அஸ்தி நாராயணாத் பர:'' (மகாபாரதம்) 'சத்தியம் சத்தியம் மீண்டும் சத்தியம் என்று மூன்றுமுறை கையை உயரத்தூக்கிச் சொல்வேன்; நாராயணனைக் காட்டிலும் உயர்ந்தவனில்லை என்று மகாபாரதத்தில் வியாசர் கூறியுள்ளதை அடியொற்றியது இப்பாடல்.

**16. இயற்கையிது வாதலினால் அச்சுதன்மா**
**முக்திபெற இச்சையாகி**
**மயக்கமில்லா முனிவோரும் செவிக்கின்றார்**
**எட்டெழுத்தே மகரந்தோய்**
**கயற்கண்ணாய்! ஆகையினாலே யன்றோ இப்**
**பெரியகலி காலத்தும்**
**தியக்கமற நீறணிந்த சிவபத்திச்**
**சன்னியா சியற்கடாமும்;**

(இ.பொ.) மகரமீனைப்போன்ற கண்களையுடைய ஆகம மடந்தாய்! உண்மையிதுவாதலால், அச்சுதனுடைய அருளால் அழிவில் பெரும் முத்தியைப் பெறுதற்கு ஆசையுற்ற முனிவர்களும் இந்த எட்டெழுத்துள்ள மநதிரத்தையே ஜபிக்கின்றனர்; இந்தக் கொடிய கலிகாலத்தில் சைவ சந்நியாசிகள் தாமும்;

இயற்கை - உண்மைநிலை. செவிக்கின்றார்-ஜெபித்தல் என்னும் வடமொழி செவித்தலாயிற்று, தியக்கமற-தயக்கமின்றி.

**17. ஆரொருவர் தங்களைவந்(து) அடியிறைஞ்சா**
**நிற்கின்றார் அவர்களெல்லாம்**
**பாரனந்து நின்றநெடு நாரணற்கென்**
**றென்றுசமர்ப் பணமுஞ்செய்து**
**சீரியலும் எட்டெழுத்தை எப்பொழுதும்**
**வாக்காரச் செவியாநின்றார்**
**ஏரணியா கமமயிலே! என்றுமறை**
**மான்மற் றினிதுசொல்வாள்.**

(இ.பொ.) அழகிய மயில் போன்ற சாயலையுடைய ஆகமப் பெண்ணே! மேற்பாடலிற் கூறப்பட்ட சைவசந்நியாசிகளை யாவரொருவர் அடிபணிகிறார்களோ, அவர்களது நமஸ்காரங்களைப் பூமி முதலான உலகங்களை அளந்த அந்த எம்பெருமானுக்கே சமர்ப்பிக்கின்றனர், இஃதல்லாமலும் அந்தச் சைவ சந்நியாசிகன் சிறந்த இத்திருவெட்டெழுத்தைத் தம் வாயால் பாராயணஞ் செய்கின்றனர்; என்று கூறி ஆரணவல்லி இன்னும் மொழிவாள்.

(தொடரும்)

# எறும்பியப்பாவின் விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம்

*இதழ் 139இன் தொடர்ச்சி. விளக்கவுரை: புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.*

**இதழ் 139இல் வெளியான மூலத்தின் தொடர்ச்சி:**

த்ருப்தன் மந்தாதிகாரியாகை யாலே ஆர்த்தனைப் போலே எல்லாம்விட்டால் அநர்த்தம் வருமென்று ஸர்வ பூர்வ குரு அபிப்ராய ஸித்தமாக ஸர்வ ரஹஸ்ய கோசரம். இருவர்க்கும் அதிகாராநுகுணமாக ப்ராரப்தானுபவ பேதத்தோபாதி அனுஷ்டாநபேதமுண்டு. (212) ''ஆர்த்தஸ்ய ஸத்யோ முக்திஸ்யாத் ஏதத் தேஹவிமோசநாந்'' () என்று ஆர்த்தனுக்கு ஸகல கர்மஸத்யோ முக்தியும், (213) ''த்ருப்தாநாம் அபிஜந்துநாம் தேஹாந்தர நிவாரணீ'' (பாஞ்சராத்ரம்) என்று, த்ருப்தனுக்கு அப்யுபகத ப்ராப்த அம்சம் அநுபவித்தபின்பு தேஹாந் தரத்தில் பலமாகவும், சொல்லா நிற்கிறதிறே. அதுபோலவே அதிகார அனுகுணமாக அனுஷ்டாந பேதமும் அங்கீகரிக்க வேணும். தீர்த்தாங்கீகார க்ரமமிருக்கும்படி; கீழ்ச் சொல்லப்பட்ட அதிகாரிகளை அநுவர்த்தித்து அவர், ஸ்வநைச்யத்தாலே மூவாறுமாஸம் பரி ஹரித்துக் கொண்டு, ''நீசனேன் நிறை வொன்றும் மிலேன்'' (திருவாய்.3-3-4) என்று கடக்கவர்த்திக்கச் செய்தேயும். அவரை பஹுஶ: பரார்த்து ஸதாசார்ய விக்ரஹத்தோபாதி புத்தி பண்ணி திருவடி விளக்கி, அவர் திருக்கையாலே(214) ''தந்யோஸ்மி க்ருதக் ருத்யோச்மி'' ( ) என்று ஸ்வீகரிக்க வேணும்.

---

**விளக்கவுரை:**

**அதிகாரிகள் வேறுபாட்டாலே வேறுபட்ட எண்ணமுடைய தான செய்யத் தகுந்த கைங்கர்ய விசேடங்களுக்கு அஞ்சவேண்டுமோ? காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும் என்று பக்தியின் பரவசத்தாலே உறுப்பாம் கரணங்கள் சிதைந்து, ஒன்றையும் அடைவுபட அநுட்டிக்க மாட்டாதே, ''என்நான் செய்கேன்'' என்று மேலான ஆர்த்தியை யுடையவரான அதிகாரிகளுக்கு திருக்கண்ணமங்கையாண்டானைப்**

**போல் செயல்பாட்டை முழுதும் விடுதலே சித்தாந்தம். பகவானை அடைவதில் ஆறியிருப்பவன் ஞானத்தில் குறைவுடைய அதிகாரி யாகையாலே ஆர்த்தனைப்போலே எல்லாம் விட்டால் குற்றம் வரும் என்று பூருவாசார்யர்கள் எல்லோருடைய அபிப்ராயமாக எல்லா ரகசிய நூற்களிலும் கூறப் பட்டுள்ளது.இந்த ஆர்த்தன் த்ருப்தன் என்னும் இருவருக்கும் அதிகாரத்துக்கு ஏற்றவாறு ப்ராரப்த கர்மாநுபவத்தில் வேறுபாடு எவ்வாறோ அவ்வாறே அநுஷ்டானத்திலும் வேறுபாடு உண்டு. (212) ''ஆர்த்தியை யுடையவன் தேகம் விழுந்தவுடன் உடனே முக்தி அடைகிறான்'' என்ற ஆர்த்தியையுடையவனுக்கு எல்லாக் கருமமும் அழிவதால் உடனே முக்தியும் (213)''த்ருப்த பிரபந்நர்க்கு அந்த தேகத்தின் முடிவில் மற்றொரு தேகம் விளையாதபடி முக்தியடையவர்'' என்று அனுபவித்தே தீரவேண்டிய பிராரப்த கர்மம் முடிந்த பின்னரே தேகத்தின் முடிவில் முக்தியாகிய பயன்விளையும் எனப் பிரமாணங் களிற் கூறப்படு கிறதல்லவா. அவைபோலே அதிகாரத்துக்கேற்றவாறு அநுட்டான வேறுபாடும் கொள்ளவேண்டும். இனி ஸ்ரீ பாத தீர்த்த அங்கீகார முறையைக் கூறுவம்; முன்னர்பூரண அதிகாரிகளாகக் கூறப்பட்ட அதிகாரிகளை ப்ரார்த்தித்து அவர் தம்முடைய தாழ்ச்சியை முன்னிட்டு மூன்றோ ஆறு மாத காலமோ ஸ்ரீபாத தீர்த்தம், கொடாமல் ''நீசனேன் நிறைவொன்றுமிலேன்'' என்று ஆழ்வார் கூறுகிறபடி இறாய்த்து நாளைத் தள்ளிக் கொண்டு வந்தாலும் அவரைப் பன்முறை பிரார்த்தித்துத் தனது ஆசாரியர் திருமேனியே என்று நினைத்து அவரது திருவடியை விளக்கி அவர் திருக்கையாலே (214) செய்ய வேண்டிய செயலைச் செய்ததால் தந்யனானேன் என்று கூறி அத்தீர்த்தத்தைப் பருக வேண்டும்.**

---

மூலம்:

ப்ரஸாதிக்கிற க்ரமமிருக்கும்படி என்னென்னில், விலக்ஷண னானதான் பரம விலக்ஷணரிடத்தில் ஸ்வீகரிக்குமதே க்ருத்யமாகவும், ப்ரஸாதிக்கை ஸ்வநைச்யத்துக்கநுசிதமாகவும் நினைத்து ஸ்ரீவைஷ் ணவர்கள் அபேக்ஷித்தாலும், ஸ்வஸம்பந்திகள் அபேக்ஷித்தாலும் நாமதாரிகள் அபேக்ஷித்தாலும் தம்முடைய ஸதாசாரிய ஸ்ரீபாத தீர்த்தத்தை அவர்களுக்குக் கொடுத்துவிடவேணும். அபேக்ஷித்ததே போருமென்று தான் அதிகாரியென்கிற அஹங்காரத்தாலே கேட்ட போதே சடக்கென அடிகளை நீட்டிக் கொடுக்கையும் தன்னடிகளைத்

தானே விளக்கிக் கொடுக்கையும் ஸ்வரூபஹாநி. அந்த தீர்த்தம் ஸ்வீகரிக்கையும் ஜ்ஞானமாந்த்ய ஹேது. தன்னையொருவன் அபேக்ஷித்தால், ஸ்வநைச்யத்தாலே தான் பரிஹரித்துக் கொண்டிருக் கையில் பலகாலம் அபேக்ஷித்து நிரஹங்காரனாய் அனுவர்த்தித்தா னாகில், ஸ்வாசார்ய விக்ரஹத்தை த்யாநித்துக் கொண்டு குருபரம்பரா பூர்வகமாக த்வயாநுஸந்தானம் பண்ணிக் கொண்டு ஸவிநயராய் ப்ரஸாதிக்குமது ஸ்வரூபப்ராப்தம்; மற்றுமுள்ளார்க்கு ஸ்வாசார்ய தீர்த்தங்கொடுக்கையே யுசிதம். இந்த தீர்த்தம் ஜாத்ய பிமாந ஸூந்ய ரான விலக்ஷண ஜந்மஜாத ஸ்ரீவைஷ்ணவரிடத்தில் அங்கீகாரமே முக்யம். (215) ''தஸ்மை தேயம் ததோக்ராஹ்யம்'' (பாரதம்) என்றும், ''தருவரேல் புனிதமன்றே'' (திருமாலை-41) என்னுமதுவே க்ராஹ்ய முமாய் பவித்ரமுமாய் இவனுடைய ஜாத்யபக்ரஷ நிவர்த்தகமுமாய் உஜ்ஜீவிப்பிக்கும்.

---

**விளக்கவுரை:**

**ஸ்ரீபாததீர்த்தம் தந்தருளுகிற முறைமையிருக்கும்படி என்? சிறந்த அதிகாரியான தான், மேம்பட்ட சிறந்தோரிடத்துத் தீர்த்தம் அங்கீகரிப்பதே செயலாகவும், தீர்த்தங் கொடுப்பது தன் தாழ்ச்சிக் கேற்றவாறு என நினைத்து, தன்னை ஸ்ரீவைஷ்ணவர்கள் விரும் பினாலும் தனது சீடர்கள் தீர்த்தம் வேண்டினாலும் இறைவன் பெயரையும் உருவத்தையும் உடைய சாதாரண அதிகாரிகள் வேண்டி னாலும் தம்முடைய ஆசாரிய ஸ்ரீபாததீர்த்தத்தை அவர்களுக்குத் தந்துவிட வேண்டும். அவர்கள் வேண்டினதே போருமென்று, தான் அதிகாரி யென்ற அகங்காரத்தால் கேட்டவுடன் சடக்கென காலை நீட்டிக் கொடுக்கையும், தன் காலைத் தானே விளக்கித் தீர்த்தங்கொடுக்கையும், தன் இயல்பிற்கு நேரே அழுக்கு. அத்தன்மையான தீர்த்தத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளுதலும் ஞானங் கெடுதற்குக் காரணமாம். தன்னை ஒருவன் ஸ்ரீபாத தீர்த்தம் கொடு என விரும்பினால், தன் தாழ்வை முன்னிட்டுக் கொடாமலிருக்க, பலகாலம் வேண்டி, அகங்காரமற்றவ னாய்ப் பிரார்த்தித்தானாகில், தனது ஆசாரியனது உருவத்தைத் தியானி த்துக் கொண்டு குருபரம்பரையை முன்னிட்டு த்வயத்தை உச்சரித்து அன்புடன் தருமதுவே ஸ்வரூபத்துக்குச் சேர்ந்ததாம். மற்றுள்ள திருநாம தாரி போன்ற அதிகாரி களுக்குத் தன் ஆசாரியரது தீர்த்தங்கொடுக்கையே உசிதம். இந்த ஸ்ரீபாத**

**தீர்த்தம் ஜாதியபிமாநமில்லாத சிறந்த குடியிற் பிறந்த ஸ்ரீவைஷ்ணவரிடத்தில் அங்கீகாரமே இன்றியமையாதது. (215) ''எவன் நாயினது புலாலைத் தின்றவனாயிருந்த போதிலும் அவன் என் பக்தனாயிருப்பானாயின், எப்போதும் என்னால் விரும்பத்தக்கவனாவான். அவனுக்கு ஞானத்தைக் கொடுத்தல் வேண்டும். அவனி டத்திலிருந்து ஞானத்தைப் பெறுதல் வேண்டும். அவன் என்னைப் போன்று பூசிக்கத் தக்கவனாகிறான்'' என்றும் தருவரேல் புனிதமன்றே எனத் தொண்டரடிப் பொடியாரும் கூறுவதாலே, அந்த ஸ்ரீபாத தீர்த்தமே பெறக்கூடியதாயும் பரிசுத்தமாய் இவனுடைய சாதியால் வந்தத் தாழ்வு நிவர்த்திக்கப் பட்டதாய் உய்வடைவிக்கும்.**

---

மூலம்:

மற்றையது ஜாத்யுசிதகர்மங்கள் போலே ஸாமாந்யமாயிருக்கும். ஆனால், உத்க்ருஷ்ட ஜந்மஜாதர் ஜ்ஞாநாதிகரனாலும் பரம ஹேதுவும் ப்ரம்சஸம்பாவனையுண்டாகையாலே, அபக்ருஷ்ட வைஷ்ணவரென்றும், (216) ''ச்வபசோபி மஹீபால விஷ்ணு பக்தோத் விஜாதிக:'' (பாகவதம்) என்றும் (217) ''பக்திரஷ்டவிதாஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சே பிவர்த்ததே-ஸவிப்ரேந்த்ரோ முநிஸ்ரீமாந் ஸயதிந் ஸ ச பண்டித:'' (காருடம்) என்றும் ச்வபசரானாலும் பகவத் பக்தராகில் த்விஜா திகராகவும் ஸ்ரீமாநாகவும் யதிகளாகவும் பண்டித ராகவும் சொல்லி, வர்ணாச்ரம ததநுரூபாநுஷ்டா நங்களாசரிக்கிற அஹங்கார ராஹித்ய ஜன்ம வ்ருத்தங்களுடையராய் பகவத் பக்தரான விலக்ஷணரே பூஜ்யரென்றும், ஜ்ஞாநாதிகளும் தீர்த்தாதிகளும் அபேக்ஷித்தால் அவருக்கே கொடுக்கவேணுமென்றும் க்ருபை பண்ணி ப்ரஸாதித்தாராகில் ஸ்வீகரிக்க வேணுமென்றும், பகவதபிப்ராய ஸித்தமாக வ்யாஸாதிகளும், ''பயிலும் திருவுடையார் யவரேலும் அவர் கண்டீர்'' (திருவாய் 3-7-1) என்றும், ''தருவரேல் புனிதம்'' (திரு மாலை-41) என்றும் ஆழ்வார்களும் அவரே பாவந தீர்த்த ப்ராஸாதகராகச் சொன்னார் களிறே. அபக்ருஷ்டஜந்மர் உத்தேச்யரானால் தத்வ்ருத்தங்களும் உத்தேச்யமாய் வாராதோ? அப்போது சாஸ்த்ரவிரோதமும் ஸ்வரூப விரோதமும் உபாய உபேய ப்ரச்யுதியும் ப்ரஸக்தமாமே? இதுக்கு தாத்பர்யம் அருளிச் செய்ய வேணுமென்ன? அநுவர்த்த நீயராகச் சொன்ன அதிகாரிகள்;

(தொடரும்)

# சார்ங்கவர்ஷம் 'வேதநாயகன் விஷ்ணுவே'

இதழ் 139இன் தொடர்ச்சி. ஆசிரியர்: இரும்பாநாடு ஸ்ரீ.உ.வே.சே.பத்மநாபன்.

அதற்கடுத்தபடியாக அதிகப்படியான ஸூக்தங்களைக் கொண்ட தேவதை விஶ்வே தேவர்கள். 67 ஸூக்தங்கள் விஶ்வே தேவர்களைக் குறிப்பவை. பல தேவர்களைக் கொண்ட ஒரு குழுவிற்கு விஶ்வே தேவர் என்று பெயர். இந்த வகையான ஸூக்தங்களில் பல்வேறு தேவர்கள் அவரவர்களுக்குரிய தனிப்பட்ட அடையாளங்களோடு துதிக்கப்படுவர். மேலும் பல பொதுவான கருத்துக்களும் புரிந்து கொள்ளக் கடினமான விஷயங்களும் கூட விஶ்வே தேவ ஸூக்தங்களில் வரும் சில மந்திரங்களில் காணப்படுகின்றன. விஶ்வே தேவ ஸூக்தத்தில் வரும் அபூர்வ மந்திரம் ஒன்று கீழ்க்கண்ட வாறு:

''*அருணோ மா ஸக்ருத்$_3$வ்ருக: பத$_2$ாயந்தம் த$_3$த$_3$ர்ஶஹி |*
*உஜ்ஜிஹீதே நிசாய்யா தஷ்டேவ ப்ருஷ்ட்யா மயீ வித்தம் மே*
*அஸ்ய ரோத$_3$ஸீ* ||'' (ரிக். 1-105-18)

இதன் பொருள்: ''ஒரு சமயம் என் பாதை வழியே நான் சென்று கொண்டிருந்தபோது சிவப்பு நிறமுள்ள ஒரு ஓநாய் என்னைக் கண்டது. கண்டவுடன் குனிந்து வேலை செய்யும் தச்சன் ஒருவன் தன் முதுகு வலியை நீக்க நிமிர்வது போல் நிமிர்ந்து என்மேல் பாய்ந்தது. வானமும் பூமியும் எனது இந்தத் துதியை அறியுங்கள்'' .

ஓநாயால் பாதிக்கப்பட்ட ஒரு ரிஷி கூறிய மந்திரம் இது. இம் மாதிரி மந்திரங்களும் விஶ்வே தேவ ஸூக்தங்களில் வருகின்றன.

அதற்கடுத்து அதிகப்படியான ஸூக்தங்களைக் கொண்ட தேவதை அஶ்வினி தேவர்கள். மொத்தம் 52 ஸூக்தங்கள் அஶ்வினி தேவர்களுக்கு உரியவை.

இந்த அஶ்வினி தேவர்கள் இரட்டையர்கள். இவர்களை ஆகாயத்தில் உள்ள தேவதையாக (த்$_3$யுஸ்த$_2$ானா தே$_2$வதா:) வகைப் படுத்தியுள்ளனர் நிருக்தக்காரர்கள்.

அஶ்வினிகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கமளிக்கிறது நிருக்த சாஸ்த்ரம்.

*''அஶ்விநௌ யத்$_3$ வ்யஶ்நுவாதே ஸர்வம்| ரஸே நாந்ய: ஜ்யோதி ஷாந்ய:| அஶ்வை ரஶ்விநாவித்யௌர்ணவாப$_4$:|| தத்கா வஶ்விநௌ| த்$_3$யாவாப்ருதி$_2$வ்யா வித்யேகே| அஹோ ராத்ரா வித்யேகே| ஸூர்யா சந்த்$_3$ர மஸாவித்யேகே| ராஜாநௌ புண்யக்ருதா வித்யைதி ஹாஸிகா:'' (யாஸ்க நிருக்தம்-12-1)*

இதன் பொருள்: ''அஶ்வினிகள் என்ற சொல் எல்லா வற்றையும் பரவி நிற்கிறார்கள் என்று பொருள். ஒருவன் ரஸத்தி னாலும் மற்றொருவன் ஒளியினாலும் பரவுகிறான். குதிரைகளில் செல் வதால் அஶ்வினீ என்றழைக்கப்படுவதாக ஔர்ணவாபர் கூறுகிறார். இந்த அஶ்விநிகள் யார்? பூமியும் வானமும் என்று சிலர் கூறுகிறார்கள். சிலர் இரவு, பகல் என்கிறார்கள். சிலர் சூரியனும் சந்திரனும் என்கிறார்கள். புண்யம் செய்த ராஜாக்கள் என்று இதிஹாஸங்கள் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள்.''

பல பேருடைய கருத்துக்களைச் சொல்லும் நிருக்த சாஸ்த்ரத்தால், அஶ்வினி தேவர்கள் யார் என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை என்பதே இதனால் விளங்குகிறது. ரிக்வேதத்தில் இவர்களைப் பற்றிய ஸூக்தங்களில் சொல்லப்படும் விஷயங்களை வைத்துப் பார்க்கின்றபொழுது இந்த அஶ்வினி தேவர்கள் மிகுந்த ஒளி யுள்ளவர்கள் என்று தெரிகிறது. இவர்களுக்கு 'நாஸத்யர்கள்', 'தஸ்ரர்கள்' என்ற பெயர்களும் உண்டு. 'நாஸத்யர்கள்' என்றால் அஸத்யமில்லாதவர்கள் அல்லது ஸத்யமானவர்கள் என்று பொருள். தஸ்ரர்கள் என்றால் மஹத்தான காரியங்களைச் செய்பவர்கள் என்று பொருள்.

இவர்களுக்கு அழகான தேர், குதிரைகள் எல்லாம் உண்டு. இதைத் தெரிவிக்கும் ரிக்வேத மந்திர பாகங்கள் பின்வருமாறு:

*த்ரிவந்து$_4$ரேண த்ரிவ்ருதா ரதே$_2$ந*
*த்ரிசக்ரேண ஸுவ்ருதா யாதமர்வாக்.*
(ரிக்.1-118-2)

இதன் பொருள்: ''மூன்று பீடங்கள் உள்ளதும், மூன்று சக்கரங்கள் உள்ளதும், மூன்று விதமாயுள்ளதும், நன்கு செல்வதுமான தேரில் நீங்கள் (அஶ்விநிகள்) வாருங்கள்.''

*ஆ ஶுப்$_4$ரா யாதமஶ்விநா ஸ் வச்வா கி$_3$ரோ*
*த$_3$ஸ்ரா ஜுஜுஷாணா யுவா கோ:*
*ஹவ்யாநிச ப்ரதிப்$_4$ருதா வீதம் ந:* (ரிக்-7-68-1)

இதன் பொருள்: ''ஒளிரும் அஶ்விநிகளே! அழகிய குதிரைகள் உள்ளவர்களே! மஹத்தான செயல் புரிபவர்களே! உங்கள் பக்தர்களின் துதிகளை ஏற்றுக் கொள்ளுங்கள்; உங்களுக்காக எங்களால் அளிக்கப் படும் அவிஸ்களை அருந்துங்கள்''.

அஶ்விநிகள் ஒளிமிகுந்த தேவர்கள் என்பதைக் கீழ்க்கண்ட மந்திரங்கள் மூலம் அறியலாம்.

*தா யஜ்ஞுமா ஶுசிபிஶ்சக்ரமாணா*
*ரத$_2$ஸ்ய ப$_4$ாநும் ருருசூ ரஜோபி$_4$:. . .* ரிக்-6-62-2)

இதன் பொருள்: ''ஒளிச் சுடர்களால் ப்ரகாசிக்கும் காந்தியோடு வேள்விக்கு வரும் அவர்கள் தங்கள் தேரின் அழகை ப்ரகாசிக்கச் செய்கிறார்கள்''.

*ஆ நூரம் யாத மஶ்விநா*
*ரதே$_2$ ந ஸூர்யத்வசா ।*
*பு$_4$ஜீ ஹிரண்ய பேஶஸா*
*கவீ க$_3$ம்பீ$_4$ர சேதஸா: ॥* (ரிக்-8-8-2)

இதன் பொருள்: ''அஶ்விநிகளே! தயாநிதிகளே! தங்க நிறமுள்ளவர்களே! கம்பீர அறிவுள்ள கவிகளே! சூரிய ஒளிபோல் ப்ரகாசமான விதானத்தையுடைய உங்கள் தேரில் வாருங்கள்''.

இப்படிப் பல மந்திரங்கள் அஶ்வினிகளின் ஒளியழகை வர்ணிக்கின்றன.

இவர்களுக்கு உரிய காலம் அர்த்தராத்ரிக்குப் பிறகு சூரியனின் உதயத்திற்கு முன் உள்ள காலம் என்று வகைப்படுத்தப் பட்டிருந் தாலும் (*தயோ: கால ஊர்த்$_4$வ மர்த$_4$ராத்ராத் ப்ரகாஶீ ப$_4$ாவஸ்யாநு விஷ்டம்ப$_4$ம்* - யாஸ்கநிருக்தம். 12-1) தினமும் மூன்று வேளை வழிபாடு இவர்களுக்கு உண்டு. இவர்கள் தினமும் பகலில் மூன்று முறையும் இரவில் மூன்று முறையும் தங்களின் தேரில் பயணம் செய்கிறார்கள். இதைக் கீழ்க்கண்ட மந்திரம் குறிப்பிடு கின்றது.

*த்ரய: பவயோ மது$_4$வாஹநே ரதே$_2$*
*ஸோமஸ்ய வேநா மநுவிஶ்வ இத்$_3$விது$_3$:* ।

*த்ரய: ஸ்கம்ப$_4$ாஸ: ஸ்கபி$_4$தாஸ*
*ஆரபே$_4$ த்ரிர்நக்தம் யாத$_2$ஸ்த்ரிர்வஶ்விநா தி$_3$வா॥*

இதன் பொருள்: ''எல்லோராலும் அறியப்பட்டதும் தேன் சுமந்து செல்வதும், ஸோமனுக்குப் பிரியமானவளை நோக்கிச் சென்றதும் மூன்று சக்கரங்களும், மூன்று தூண்களும் கொண்டது மான உங்கள் தேரில் அஶ்விநிகளே! நீங்கள் பகலில் மூன்று முறையும் இரவில் மூன்று முறையும் வருகிறீர்கள்''.

இந்த மந்திரத்தில் 'ஸோமனுக்குப் பிரியமானவளை' என்பதற்கு ஒரு காரணம் உண்டு. சூரியன் தன் மகளான சூரியை என்ற பெண்ணை ஸோமனுக்கு மணம் செய்து கொடுக்க நினைத்தான். ஸோமனும் அவளை விரும்பினான். ஆனால் சூரியை அஶ்வினி களின் தேரில் ஏறி அவர்களுக்கு மனைவியானாள். இவ்விபரம் ரிக் வேதத்தில் சொல்லப்படுகிறது.

சூரிய சந்திரர்கள் தான் அஶ்வினிகள் என்று சிலர் கூறும் கருத்துத் தவறானது.

*...... ரதே$_2$ ந ஸுவ்ருதா ந ஆக$_3$தம்*
*ஸாகம் ஸூர்யஸ்ய ரஶ்மிபி$_4$:* (ரிக் 1-47-7)

இதன் பொருள்: ''.......நன்கு செய்யப்பட்ட உங்களின் தேரில் சூரியனின் கிரணங்களோடு எங்களிடம் வாருங்கள்''.

*ஸஜோஷஸா உஷஸா ஸூர்யேண ச ஸோமம்*
*பிப$_3$த மஶ்விநா* (ரிக். 8-35-1)

இதன் பொருள்: ''அஶ்வினிகளே! உஷையோடும் சூரிய னோடும் இணைந்து ஸோமத்தைப் பருகுங்கள்''.

இம்மாதிரியான மந்திரங்கள் சூரியனையும் அஶ்வினி களையும் வேறுபடுத்திக் காட்டுகின்றன.

''ஸூர்ய ரஶ்மிபி:'' என்று கூறியதற்கும் ஒரு காரணம் உண்டு. ஒரே அளவுள்ள ஒளியையுடைய இரண்டு வஸ்துக்கள் ஒரே இடத்தி லிருந்தால், தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு எல்லாம் ஒரே ஒளி யாகவே தெரியும். எந்த ஒளி எதனுடையது என்று பிரித்துப் பார்க்க இயலாது. அதனால்தான் நம் கண்களுக்கு அருகில் ப்ரத்யக்ஷமாகத் தெரிகின்ற ஒளியிலேயே மற்ற ஒளிமண்டலங்களின் ஒளியும் சேர்ந்தி ருப்பதாக நினைத்துத் துதிக்க வேண்டியிருக்கிறது. (தொடரும்)

# மாறன்
# பாப்பாவினம்

**இதழ் 139இன் தொடர்ச்சி. டாக்டர். அருட்கவி அரங்க சீனிவாசன்.**

மாண்கவின்-சிறப்புற்ற உடலழகு. புறம்தருமாயினும்-எம்மைவிட்டு நீங்குமாயினும். புறம் தருமாயினும் புல்லேம் என்று கூட்டுக. படிந்தல்லதை-குளித்துவந்தால் அல்லாமல். ஒல்லேம்-உன்னை அணைய ஒப்பமாட்டோம். புல்லேம்-தழுவ மாட்டோம். பொதுவுண்ட-பொதுவாக அனுபவிக்கின்ற.

நின் மார்பு புல்லேம் என்று கூட்டுக.

**உலைவில் நீ ரழுவத்து உறுசிறை யவையின்**
**அலைகொழித்து அறைதொறும் அறைதொறும் மொத்துண்டு**
**அழுங்களுர் எய்திய ஆக்கைய தாகியும்**
**தன்னால் வளர்க்கத் தகுசினை யதன்கண்**
**மன்னாது அரவின் வயமீன் வைத்தகண்**
**வாங்கா துய்த்து வளர்புன லூரற்கு**
**ஏவலிற் பிழையா இன்னிசைப் பாணர்**
**புதுவது வாய்வழி பிழைத்துஇவண் போதரும்**
**அது நினைந்து அருவிருந்து அளித்தற்கு அந்தோ**
**மதுமகிழ் மார்பினன் வழுதிநன் னாட்டவர்**
**குடிஞையைக் காய்திறன் குறிப்பது மின்றால்**
**மாதோ மாணிழை மடவரல்**
**யாதோ கறிஇங் கினிதமைப் பதுவே. (47)**

(இதுவும்-மெய்யுவமப் போலி. இதன்-வேறுபாடும் காண்க. பகுதி-பரத்தையிற் பிரிதல். துறை-பாணனைப் பழித்தல். நேரிசை யாசிரியப்பா.)

பரத்தையிற் பிரிந்த தலைவன், தலைவியை மீண்டும் அடையும் பொருட்டுப் பாணனைத் தூதாக அனுப்பத் தலைவி அவனைப் பழித்துக் கூறுவது இத்துறை. உலைவில் நீர்அழுவம்-வற்றாத நீர்ப்பரப்பு. சிறையவையின்- கரைகளிலே. அழுங்குஅளுர்-

கேடுற்ற துன்பம். ஆக்கையது-உடலினது. சினை-முட்டை. மன்னாது-நிலைபெறாமல். அரவின்- அந்த முட்டைகளை உண்ண வரும் பாம்பினினிடத்து. உய்த்து- (பார்வை) செலுத்தி. வளர்-வளர்க்கின்ற. புனலூரன்-மருதநிலத் தலைவன். புகுவது வாய் வழி-புதுமையான தூதுச் செயலால். பிழைத்து-பரத்தையைத் துறந்து. இவண்-இங்கே. போதரும் அது- வருவது. மதுமகிர் மார்பினன் வழுதி-பாண்டியன். குடிஞை-வையை. காய்திறன்- வற்றச்செய்யும் ஆற்றல். குறிப்பது-நினைப்பது. இன்று- இல்லை. மாதோ-அசை.

மீன் முட்டையிட்டு அதைத் தன் பார்வையாலே குஞ்சாக்கும் ஏன்பது இலக்கிய மரபு. அவ்வாறு தன் முட்டையை நோக்கியிருக்கும் போது அலையால் மொத்துண்டாலும் பார்வையை மாற்றாது. ஆனால் பகையாகிய பாம்பு தென்பட்டால் முட்டைமேல் வைத்த பார் வையைத் தன் குஞ்சைக் காப்பதில் உள்ள அக்கறையால், பாம்பின்மேல் வைக்கும். அத்தகைய வளமுள்ள புனலூரன் எனத் தலைவன் குறிக்கப்படுகின்றான்.

இங்கு மீன் தலைவனையும், முட்டை, தலைவியையும், பாம்பு பரத்தையையும் குறிக்க வந்த உள்ளுறை உவமம். தலைவி மேல் வைக்க வேண்டிய அன்பைப் பரத்தைமேல் வைத்தான் என்பது குறிப்பு. இது உள்ளுறை உவமம்.

தலைவியின் கற்புத்திறம் ''குடிஞையைக் காய்திறம் குறிப் பதும் இன்று'' என்பதால் விளக்கப்படுகின்றது வற்றாக் குலக்கொடி எனப் பாராட்டப்பட்டவையையும் வற்றச் செய்யும் ஆற்றல் உடையவள் தலைவி. பரத்தையைச் சினந்து வசையால் ஒழிக்கும் ஆற்றல் உடையவள் ஆயினும், தலைவனுக்கு அது துன்பம் தருமே என்ற கற்புக் கடம்பூண்டு பொறுத்தாள் என்க. தன் ஏவலினின்றும் மாறாத இசைப் பாணனது புதுமையான சொல் வழிப் பட்டுத் தலைவியை இதுகாறும் மறந்து பரத்தை இல்லில் இருந்த தலைவன், பாணனது சொல்வழியினின்றும் தப்பித் தலைவி யிடம் வருவது அறிந்த தலைவி, தலைவனுக்கு இனிய அடிசில் ஆக்கத் தொடங் கியது கண்ட தோழி போன்ற அயலார் கூறுவதாக அமைந்த பாடல் இது.

**பன்மலர் கஞலிய பழுமரச் சோலையுள்**
**தன்நிழல் துணையாத் தளிர்த்தமௌ வலின்மலர்**

**விரிகதிர் தெறுதலின் வெம்மையுற்று உணங்க**
**முட்புறக் குடக்கனி முடப்பல வதன்அயல்**
**செங்கிடை மலர்கவின் சிறப்பவும் நிழற்றும்**
**ஒண்புனல் ஊரற்கு உறுபழி விளைக்கும்**
**யாம்ஏ திலம்ஏ திலம்என எங்கையர்**
**மாளிகை பயின்று மதங்கர் உற் றிலரால்**
**புவிப்பா வலர்புகழ் புரவலன் மதுர**
**கவிப்பா வலன்புகழ் கருணையங் கடவுள்**
**மதுமகிழ் மார்பினன் வண்குரு கூரன்**
**சதுமறைப் பொருளால் தருதமிழ் மறையினுள்**
**முதுமொழி உணரா மூடம தடைந்த**
**மனன் அக மலம்மிக மறுகுனர்**
**இனம்எனல் ஒன்றாய் இகழ்பொய்ம் மையனே.** (48)

(என்பது உருவுவமப் போலி. பகுதி-பரத்தையிற் பிரிதல். துறை-பாணனொடு வெகுளுதல். தோழி கூற்று. பா-நேரிசை யாசிரியப்பா.)

களுலிய-நெருங்க மலர்ந்த. பழுமரம்-பழுத்தமரம். மௌவல்-முல்லை. விரிகதிர்-சூரியன். தெளுதலின்-எரிப்பதால். உணங்க-வாடும்போது. முட்புறக் குடக்கனி-பலாப்பழம்-முடப்பலவு-வளைந்த பலாமரம். செங்கிடை-நெட்டிப்பூண்டு. நிழற்றும்-நிழல் செய்யும். புனலூரன்- தலைவன். ஏதிலம்-உறவு இல்லோம். எங்கையர்-பரத்தையர். மதங்கர்-பாணர். புரவலன்-அரசன். மகிழ்- மகிழம்பூ. தமிழ்மறை-திருவாய்மொழி. முதுமொழி-(தத்துவம்) மெய்ப்பொருள். மூடம்-அறியாமை. மனம் அகம்-மனத்தில். மலம்-குற்றம். மிக-மிகுதலால். மறுகுனர்-வருந்துபவர். இனம்-மூப்பு. இகழ்- இகழ வதற்கேற்ற.

நறிய முல்லைமலர் வெயிலால் வாடும்போது, அதற்கு நிழல் தாராமல், முடப்பலாமரம் பயன் அற்ற செங்கிடை (நெட்டிப்பூண்டு) க்கு நிழல்தரும புனலூரன் என்பது உள்ளுறை உவமம். முல்லை-தலைவி. முடப்பலா-தலைவன். செங்கிடை-பரத்தை என்று கொள்க. தலைவன் தலைவிக்கு அருள் செய்யாமல் பரத்தைக்கு அருள்கின் றான் என்பது குறிப்பு.

தலைவன் பரத்தையர் இல்லில் தங்கியிருக்கையில் அவர்கள் யாம் உனக்கு உறவு அல்லேம் அல்லேம் என்று கூறினாலும் அவர் மாளிகையிலேயே தங்கியிருப்பான். ஆதலால் அவனிடமிருந்து பாணன் தூதாகத் தன்னிடம் வந்திலன் எனக் கருதித் தலைவி பாணனைச் சினந்து கூறுவதாக அமைந்த பாடல் இது. திருவாய் மொழியின் நுட்பம் அறியாமல் மடமையடைந்த மனத்தில் குற்றங்கள் மிகும். அதனால் அந்த மனம் வருந்தும். அவ்வாறு வருந்துபவர்க்கு இனமாக இகழப்படுகின்ற பொய்யன் என்பது பாணனைக் குறித்த தலைவியின் வசைப் பேச்சு. மதங்கர் உற்றிலர்- இகழ்ச்சிக் குறிப்பு.

**ஒன்றாய்ப் பரந்த உறுவளி கறங்கலின்**
**மின்தாழ் பல்மீன் மிளிர்விசும்பு உழுசினை**
**சுமைமலிந்து ஒசிதரத் துணர்த்தமென் பூமுகை**
**பொறிச்சுரும்பு உளர்தொறும் உளர்தொறும் பொதும்பருள்**
**முறுக்குடைந்து இழிதரும் மொய்ந்நறுந் தேறல்**
**பரந்துபல் முகத்தவாய்ப் பவளக் கொடியொடும்**
**குரூஉக்கண் பரூஉத்தாள் குடம்புரை செருத்தல்**
**கயவாய் மேதி கட்கமு நீர்உண்டு**
**உயவால் வைந்நுதித் தொடர்நெறி மருப்பின்**
**புறக்காழ் வயிரப் பூங்கழை தடிந்துஉகு**
**நிறக்காழ் நித்திலம் நிரந்தரம் வரன்றுஅயல்**
**வெள்ளிடை நிவந்த மேதகு சுவலினை**
**உள்உயிர்ப் பேடையை உறையுளின் இருத்திப்**
**பாலுள் நீர் தெரித்துப் பருகும் ஒண் சேவல்**
**ஆலும்நீர்ச் சிறைபுக்கு ஆய்ந்து இரை கொணர்வல் என்று**
**இகந்துஅற லிடைப் படிந்து எழும் அயர் வுயிர்ப்பான்**
**வாலுக வைப்பென மறுகுபு குறுகிவீழ்ந்து**
**அன்மையில் தவக்குற்று அச்சப் பார்வையில்**
**புராதனப் பொய்கையுள் புகும்புன லூர!**
**பொருவரு தாமரைப் புதல்வனைப் பயந்த**
**திருமறு மார்பினன் திருவரங் கத்துள்**
**பொதுநலப் பெண்டிர் பொதுஉண் நின் மார்பம்**
**மல்லல் நீர்படிந் தல்லது**
**புல்லேம் தீண்டேல்எம் பொன்னடிப் போதே (49)**

**(தொடரும்)**

# தகவல் அறியும் உரிமைச் சட்டமும், அதிகார வர்க்கத்தின் அலட்சியப் போக்கும்

**ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.**

'தகவல் உரிமை' என்பது அடிப்படையான மனித உரிமை என்று இந்திய அரசியல் சாசன சட்டத்தில் உரிமை அளிக்கப்பட்டு உள்ளது. 'கருத்துக்களைத் தெரிவிப்பது அடிப்படை உரிமைகளில் ஒன்று' என்று அரசியல் சட்டத்தின் 19ஆவது பிரிவில் கூறப்பட்டு உள்ளது. இதை முன்நிறுத்திதான் தகவல் உரிமை சட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. ஜனநாயக நாட்டில் மக்களுக்கு மக்களின் பிரதிநிதியாகச் செயல்படும் அரசின் நடவடிக்கைகளை அறிய உரிமை உண்டு என்ற நோக்கத்தில் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அரசிடமிருந்து தகவல் உரிமை மூலம் மக்கள் தேவையான தகவல்களை பெற்றிட முடியும்.

பொது விவகாரத்திலிருந்து தனிப்பட்ட பிரச்சனைகள் வரை எத்தனையோ தகவல்கள் தேவைப்படுகின்றன. ஜனநாயகம் பலப்படு வதின் முக்கிய அம்சமே, அரசு நிர்வாகத்தின் எந்தவொரு துறையிலும் என்ன நடக்கிறது என்பதை 'ஜனநாயத்தின் உண்மை எஜமானர்கள்' என்று அவ்வப்போது (தேர்தல் நேரத்திலாவது) நினைவூட்டப்படு கின்ற மக்கள் தெரிந்து வைத்திருப்பதுதான். ஆனால் ஆட்சி எந்திரத் தால் விதவிதமான காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, தகவல்கள் மக்களுக்குத் தெரியாமலே மறைக்கப்படுவது என்பதுதான் இதுவரை அனுபவமாகி வந்திருக்கிறது. ஜனநாயக அரசியல் இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள், தன்னார்வ அமைப்புகள் ஆகியவற்றின் தொடர்ச்சியான முயற்சிகள், போராட்டங்களின் பயனாக தகவல் அறியும் உரிமை (RTI) இப்போது சட்டமாகியுள்ளது. இச்சட்டம் 2005ஆம் ஆண்டு ஜுன் 15இல் குடியரசுத் தலைவரால் கையெழுத்திடப்பட்டு, 120 நாட்களுக்குப் பின்னர் அக்டோபர் 12ஆம் நாளிலிருந்து தகவல் உரிமை சட்டம் 2005 நடைமுறைக்கு வந்துள்ளது. **பிரச்சனைகளுக்காக நிராயுதபாணியாகப் போராடிக்**

**கொண்டிருந்த மக்களுக்கு கிடைத்துள்ள இந்தச் சிறு ஆயுதத்தை சரியாகப் பயன்படுத்துவது அவசியம்.** பொது அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் ஒளிவு மறைவற்ற வெளிப்படையான செயல் பாட்டை உறுதி செய்தல், லஞ்சம், ஊழலை ஒழித்தல் அரசும் அதன் அங்கங்களும் மக்களிடம் பொறுப்புடன் நடக்கச் செய்தல்- போன்றவை தகவல் உரிமைச் சட்டத்தின் நோக்கமாகும்.

**தகவல் அளிப்பதற்கான கால அளவு:**

விண்ணப்பித்த 30 நாட்களுக்குள் பதிலளித்தாக வேண்டும். ஒருவரது உயிர் மற்றும் சுதந்திரம் காக்கும் தகவல்களாகளானால் 48 மணி நேரத்திற்குள் அளித்திட வேண்டும். மூன்றாம் நபரிடம் இருந்து உதாரணமாக ஒரு தனியார் தொழிற்சாலையிடமிருந்து தகவல் கோரப்பட்டால் அப்பதிலை பெற்றுத் தருவதற்கு தொழிற்துறை 40 நாட்கள் எடுத்துக் கொள்ளலாம். காலம் கடந்து அளிக்கப்படும் தகவலுக்கு கட்டணம் செலுத்த வேண்டாம்.

**மேல்முறையீடு:**

1)கோரப்பட்ட தகவல்கள் மறுக்கப்பட்டால் 2) கால தாம தமாக கிடைக்கப் பெற்றால் 3) தவறான தகவலாக இருந்தால் 4) பெறப்பட்ட தகவல் குறித்து அதிருப்தியிருந்தால் 5)அதிகாரி யிடமிருந்து கடிதம் பெறப்பட்ட அல்லது பதில் பெறாத பட்சத்தில் முன்பு அனுப்பிய விண்ணப்பத்தின் நகலுடன் 30 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட துறையில் குறிப்பிட்ட தகவல் அதிகாரிக்கு மேல் மட்டத்தில் உள்ள மேல்முறையீட்டு அதிகாரிக்கும் முறையீடு செய்யலாம். 6) அவரிடமிருந்து சரியான பதில் கிடைக்கப்பெறாத நிலையில் 95 நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட மத்திய, மாநில அரசுகளின் தகவல் ஆணையத்திடம் புகார் செய்யலாம்.

**மாநில தகவல் ஆணையத்தின் முகவரி:** தமிழ்நாடு தகவல் ஆணையம், புதிய எண். 378, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018. தொலைபேசி எண்: 044-24357580.

இவையெல்லாம் சட்ட விதிகளாய் அமைந்துள்ள போதிலும் நடைமுறையில் மனுதாரர் பல இடையூறுகளைச் சந்திக்க வேண்டி யுள்ளது. bureau'cracy என்று அழைக்கப்படும் அதிகார வர்க்கம்

இந்த சட்ட விதிகளை இந்நாள் வரை சரியாகப் புரிந்து கொண்டு செயல்படுவ தாகத் தெரியவில்லை.

திருவரங்கம் பெரியகோயில் இணைஆணையருக்கு அனுப்பி வைக்கப்படும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுக்களுக்கு உரிய பதில்கள் உரிய நேரத்தில் தரப்படுவதில்லை. 10.1.2011 அன்று இதுகாறும் எந்தெந்த மனுக்களுக்கு பதில் அளிக்கப் படவில்லை என்ற கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**From,** **Srirangam. Dt-10.1.2011**

**A.Krishnamachari,**
**214, East Uthara St,**
**Srirangam,**
**Trichy-6.**

**To,**

**Joint Commissioner/E.O,.**
**Arulmighu Aranganathaswamy Temple,**
**Srirangam,**
**Trichy-6.**

**Dear Sir,**

**As advised by you vide your letter No.** ***ந.க. 2177/1420/டி 1 நாள்: 21.12.2010*****. I remitted Rs. 2/- at the cash counter on 4.1.2011 vide receipt No. 028424. Till date I have not received the Board of Trustees resolution dt. 6.9.2010. You are taking your own sweet time in replying R.T.I. queries raised by me or do not reply my queries on R.T.I. or give vague replies without answering the main question or give irrelevant replies. I request you to go through the various rules formulated under R.T.I. and adhere to the time schedule etc. The following R.T.I. queries are pending with you.**

**I) My R.T.I. query dt 26.10.2010 and your reply** ***ந.க. 1676/1420/டி நாள்: 3.11.2010*****. and my letter dt 19.1.2010**

**wherein I had asked you to answer my queries with the proper answer Yes or No. You are bound to give a reply yes or no for the follow enqueries.**

1) தங்களுடைய 'கைரிக்ஷா ஒழிப்பு' திட்டத்தை மேற்கோள் காட்டி, பெரியபெருமாளால் வழங்கப் பட்டதான உயர்ந்ததான பிரம்மரதம் என்னும் மரியாதையை ஒழித்திடும் திட்டத்தை வெளிப்படுத்தி ஆலயத்திற்குள் பதவி, இனம், பால், மொழி என்ற காரணமாக வேறுபாடு இருத்தல் கூடாது என்ற சீரிய கொள்கையை சிந்தனையில் கொண்டு எழுதப்பட்ட கடித எண் ந.க. 555/1429/ டி 1 நாள்: 20.9.2010 எழுதுவதற்கு உந்துதலாக அமைந்த காரணம் யாது? ஏனெனில் சென்ற பல நூற்றாண்டுகளாக வழக்கத்திலிருந்து வரும் ஒரு மரியாதையை இந்தக் கோணத்தில் 2009வரை சிந்திக்காத நிர்வாகம் 2010 ஆம் ஆண்டில் இதுபற்றி சிந்திப்பானேன்?

1) யாரேனும் உங்களுக்கு இந்தக் காரணங்களைக் காட்டி பிரம்மரதம் நிறுத்தப்படவேண்டும் என்று அறிவுறுத்தி கடிதம் எழுதியுள்ளார்களா? யார் அவ்வாறு எழுதியது? அந்தக் கடிதத்தைப் பார்ப்பதற்கும், நகலெடுப்பதற்கும் 10 நாட்களுக்குள் அனுமதியளித்திட வேண்டுகிறேன்.

2) இது நிர்வாகமே எடுத்த முடிவு என்றால் இந்த சமதர்மக் கொள்கை கீழ்க் கண்ட விஷயங்களில் அமுல்படுத்த முடித்த நிர்வாகம் முன்வருமா?

a) உட்கார்ந்திருக்கும் ஸ்தலத்தார்களை மணியகாரரும்/ ஸ்தானீகரும் தண்டனிட்டு கோஷ்டிக்கு அழைப்பது நீங்கள் கொண்ட கொள்கைக்கு முரணானது. மனிதனான மணியகாரரும், ஸ்தானீகரும் மனிதர்களான ஸ்தலத்தாரைக் கோயிலில் வணங்குவது ஏன்?

b) இந்த ஊரில் நம்பெருமாளை திருவீதிகளில் பிராம்மணர்கள் மட்டும் சுமந்து செல்வது ஏன்? திருக்கோயில் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீபாதம் தாங்கிகள் திருவீதிகளில் நம்பெருமாளை சுமந்து செல்வதில்லை. அனைத்து இனத்தவரும் நம்பெருமாளை சுமந்து செல்ல அனுமதிக்கப்படுவார்களா? ஸ்ரீபாதம் தாங்கிகள் அனைவரும் பிராம்மணர்களாய் இருப்பது ஏன்?

c) கோயிலில் காப்பந்தம், அரைப்பந்தம், முழுப்பந்தம் போன்ற மரியாதை முறைகள் ஒழிக்கப்படுமா? மனிதர்களை அழைத்துவர எதற்குப் பந்தம்? ஏன் ஒரு மனிதன் பந்தம் பிடிக்க வேண்டும்? கோயிலெங்கும் மின்சார விளக்குகள் போடப்பட்ட பிறகு இவை ஏன்?

d) பெண்களுக்குத் தீர்த்தம், ஸ்ரீசடாரி, மஞ்சள் போன்றவைகள் கோஷ்டியின் போது விநியோகிக்கப்படுவதில்லை. H.R.&C.E. சட்ட விதிகளின்படி இது குற்றமாகும். இனிவரும் நாட்களில் அனைவருக்கும் இவை வழங்கப் படுமா? (Chapter II Rule 106/-1 பிரசாதம் அல்லது தீர்த்தம் வழங்குவதில் உள்ள வேற்றுமைகளை அகற்றுவது பற்றிய விதி)

e) சட்டை போட்டவர்களுக்குத் தீர்த்தம் ஸாதிப்பது இல்லை. ஏன்? உங்களுடைய வாதப்படி இறைவன்முன் அனைவரும் சமமல்லவா? இவை நிவர்த்தி செய்யப்படுமா?

f) வாரிசு உரிமை ஒழிக்கப்பட்ட பிறகு அவை எல்லாம் கோயிலுக்குச் சொந்தம் என்ற கொள்கைப்படி படிப்பு என்னும் நிகழ்ச்சி பல விழாக்களின் இறுதியில் ஆயனார் திருத்தாழ்வரை தாஸர் வம்சத்தவர்கள் இல்லை என்று நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் படிப்புத்தீர்த்தம் ஸாதிக்கப்படுகிறது. அவ்வாறு படிப்பைப் படிப்பதற்கு நிர்வாகத்தின் சார்பில் தென்கலையார் ஒருவர் நியமிக்கப்படுவாரா?

g) முத்தங்கி ஆண்டுக்கு 20 நாட்கள் சாற்றப்படுவதாக செய்தி வெளிவந்துள்ளது. அது உண்மையா? அவ்வாறிருப்பின் அனைத்து மக்களும் எவ்விதக் கட்டணமும் செலுத்தாமல் ஸேவிக்க அனுமதிக்கப்படுவார்களா? இறைவன் முன் அனைவரும் சமம் என்றால் ஏன் கட்டணம் செலுத்த வேண்டும்? அதேபோல் அனைத்து ஏகாதசி நாட்களிலும் ரத்னங்கி சாற்றப்படுமா?

h) திருக்கோயில் பணியாளர்கள் சங்கம் சிலநாட்களுக்கு முன்பு மனிதனை நாங்கள் சுமந்து செல்ல மாட்டோம் என்று ஸ்ரீபாதம் தாங்கிகள் உட்பட தீர்மானம் நிறைவேற்றி உங்களுக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது. அதன் நகலை 10 நாட்களுக்குள் எனக்குத் தந்திட வேண்டுகிறேன்.

**II) My R.T.I. letter 9.11.2010 and your reply** *ந.க.எண். 1900/1420/டி 1 நாள்: 17.11.2010.*

**(A) I am prepared to pay Rs. 1712 at the Devasthanam Office cash counter for which I need your confirmation. (Item 4 of your reply.)**

**(B) You are yet to give a proper reply for query 1**) 16-4-2003 அன்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு நீதியரசர் திரு. K.P.சிவசுப்ரமணியம் அவர்கள் ரிட் மனு 11463/2003 & W.P.M.P.No 14419/2003, அளித்த உத்திரவின்படி திருக் கோயிலில் நடைபெறும் விழாக்கள் மற்றும், தினப்படிகளில் அளிக்கப்படவேண்டிய மரியாதைகளை அச்சிட்டு அந்த மரியாதைக் குரியோர்க்கு தரப் படவேண்டும் என்ற உத்திரவு நிறைவேற்றப் பட்டதா? இது குறித்து உங்கள் அலுவலகக் கடிதம் 1336/ 1412 டி 3, 1-12-2003 கிடைக்கப்பெற்றதும், அதில் திருத்தங்கள் செய்து மேலாளரிடம் 4-12-2003 அன்று ஒப்புதலுக்கு நேரில் கொடுக்கப் பட்டது. அதன்பிறகு எந்தத் தகவலும் எனக்கு அனுப்பப்படவில்லை.

**(C)** 8) அனைத்து செயல்முறைத் திட்டம், பழக்க வழக்கங்கள், மரியாதைகள், வழக்குகள் பற்றிய பட்டியல் ஆண்டு தோறும் தயாரிக்கப்பட்டு வருகிறதா?.

9) மேலும் மரியாதைகளைப் பெற்றுக் கொள்ளும் ஒருவருக்கு என்னென்ன மரியாதைகள் அளிக்கப்படுகின்றன? அந்த மரியாதை எப்படி, எங்கு, ஆண்டில் எத்துணை முறை அளிக்கப்படுகிறது என்பதற்கான பட்டியல் தேவை?

**(As per R.T.I. Act the reply is overdue. Refer my reply dt 27.11.2010 on these matters.)**

**(III) For my R.T.I. query dt 22.11.2010 section 1 and 2 no reply received till date. The reply is overdue as per the provisions of R.T.I. Act.**

**(IV) Refer my R.T.I. 27.11.2010 Sections 1 and 2. Till date no reply revceived which is overdue.**

**(V)Refer my R.T.I. dt 6.12.2010. I am yet to receive your reply. The reply is overdue.**

**I hope that you will take necessary official action to give reply without getting a reminder from me. Every official is expected to respect the law of the land and faithfully discharge his duties. I hope you will not give me an opportunity to go the appeal commissioner to get to replies for the R.T.I. queries.**

**Yours Sincerely. A. Krishnamachari.**

---

மேல்முறையீடு செய்வதற்காக உருவாக்கப்பட்ட மாநில தகவல் ஆணையமும், நத்தை வேகத்தில் செயல் படும் ஒரு அரசு அமைப்பாகும். 11.6.2010 அன்று இந்து சமய அற நிலையத்துறை ஆணையருக்கு 12.6.1997ஆம் நாள் திருக்குறுங்குடி ஜீயர் மடத்தின் சார்பில் எழுதப்பட்ட கடிதத்தில் ஆணையர் என்ன குறிப்புகளை எழுதியுள்ளார் என்ற மனுவிற்கு தொடர்பில்லாத ஒரு பதிலை இந்து சமய அறநிலையத்துறை தந்தது. அதன்பின் 24.8.2010 அன்று தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்யப் பட்டது. பல நினைவூட்டுக் கடிதங்கள் அதன்பிறகு ஆணை யத்திற்கு அனுப்பப்பட்டன. மாநிலத் தகவல் ஆணையம் 7.1.2011 ஆம் நாள் மனுதாரராகிய என்னை விசாரணைக்கு 21.1.2011 அன்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்கு ஆவணங் களுடன் ஆணையரைச் சந்தித்திடுமாறு தகவல் அனுப்பியுள்ளனர். சட்டங்கள் இந்த நாட்டில் பல உள்ளன. ஆனால் அதை மதிக்க வேண்டிய அதிகாரிகளே அதை மதிப்பதில்லை. இன்று காவல்துறை ஆளுங்கட்சியின் ஓர் அங்கமாகச் செயல்படுகிறது. தேவஸ்தான அதிகாரிகள் தங்கள் மனம் போன போக்கில் சட்டத்திற்குப் புறம்பான புதுவிதிமுறைகளை உருவாக்கி பாரம்பரியத்தைக் குலைக்க முற்படு கின்றனர். இவர்களுடைய இந்தப் போக்கை ஒரு கட்டுக்குள் வைக்க வேண்டுமானால் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஒன்றே நமக்குக் கிடைத்துள்ள ஒரு சிறு ஆயுதமாகும். ஆனாலும் அதிகார வர்க்கத்தி டமிருந்து தகவல் பெறுவது எத்துணை கடினம் என்பதை **11.1.2011 தேதியிட்ட தினமணி நாளிதழில் வெளிவந்த திரு. நீதி செங் கோட்டையனின் கட்டுரை** வெளிப்படுத்தியுள்ளது. இதற்கு

கட்டுரையாசிரியர் **முதுகெலும்பில்லாத தகவல் ஆணையம் எதற்கு?** என்று தலைப்பிட்டுள்ளார்.

''பொதுமக்களை அரசாங்கத்தின் வாசற்படிகளில் தவம் கிடக்கும் மனுதாரராக இருப்பதை மாற்றி தமது உரிமைகளைத் தட்டிக்கேட்கும் மன்னர்களாக்கிய ஓர் அற்புதமான சட்டம் தான் 2005-இல் கொண்டு வரப்பட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைத் திறம்படச் செயல்படுத்தி அரசின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய வேண்டிய தகவல் உரிமை ஆணையங்களே அப்படியொரு புரட்சி ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் முனைப்பாக உள்ளன. அந்த வரிசையில் முதலிடத்தில் உள்ளது தமிழகத் தகவல் உரிமை ஆணையம்.

தமிழகத் தகவல் ஆணையத்தின் செயல்பாட்டில் நேர்மையோ, நியாயமோ இல்லை என்று தகவல் உரிமை ஆர்வலர்கள் தொடர்ந்து விமர்சித்தும், அந்த ஆணையம் தன்னைத் திருத்திக் கொள்ளாத நிலையில், இப்படிப்பட்ட ஓர் ஆணையம் தேவையா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. மாநிலத் தகவல் ஆணையங்களில் தலைமை ஆணையர் உள்பட 11 பேர்வரை அங்கம் வகிக்க தகவல் உரிமைச் சட்டம் அனுமதிக்கிறது. ஆனால், தமிழகத் தகவல் ஆணையத்தில் 4 பேர் தான் இருக்கிறார்கள். ஏன் இந்த நிலைமை?

தமிழகத்தில் உள்ள அனைத்துத் துறைகளிலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட லட்சக்கணக் கான மனுக்கள் தேங்கியுள்ளன. மக்களுடன் அதிகத் தொடர்புடைய வருவாய், காவல்துறைகளில் ஆயிரக்கணக்கான மனுக்கள் குவிந்துள்ளன. இதற்கு உடனுக்குடன் தீர்வு காண தகவல் ஆணையம் முனைப்புக் காட்டாதது ஏன்? வருவாய் அலுவலகங்களில் தாக்கல் செய்யப்படும் மனுக்களுக்குப் பதில் அளிப்பது அந்தந்த துணை வட்டாட்சியர்களுக்குக் கூடுதல் பொறுப்பாகவே அளிக்கப்படுகிறது. இதுவே மனுக்கள் தேக்கத்துக்கு காரணம் என்று துணை வட்டாட்சியர்கள் புலம்புகிறார்கள். இது ஏன் அரசின் செவிக்குக் கேட்கவில்லை?

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட 30 நாள்களுக்குள் சம்பந்தப்பட்ட துறை பதில் அளிக்க வேண்டும் என்பது விதி. ஆனால், இதைத் தமிழகத்தில் உள்ள எந்தத்

துறையும் பின்பற்றுவதில்லை. இதற்கு முழுக் காரணம் மாநிலத் தகவல் ஆணையமே. மனுதாரர்களுக்கு 30 நாள்களுக்குள் பதில் அளிக்காத அதிகாரிக்கு அதிகபட்சம் ரூ. 25,000 வரை அபராதம் விதிக்கச் சட்டம் அனுமதிக்கிறது. பெரும்பாலும் இதைத் தமிழகத் தகவல் ஆணையம் செய்வதில்லை. மாறாக, தவறு செய்யும் அதிகாரி களைத் தப்பிக்க வைக்கும் பணியை மிகுந்த சிரத்தையுடன் செய்து வருகிறது.

சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட காலத் துக்குள் பதில் கிடைக்காவிட்டால் மனுதாரர் மாநிலத் தகவல் ஆணையத்தில் மேல்முறையீடு செய்யலாம். மேல்முறையீட்டு மனுக்களைப் பெறும் தகவல் ஆணையம், சம்பந்தப்பட்ட துறையை அணுகி ஏன் தகவல் கொடுக்கவில்லை என்று வினவி, நியாயமான காரணம் சொல்லப்படாதபட்சத்தில் அபராதம் விதிக்க வேண்டும் என்பதுதான் நடைமுறை. தமிழகத்தைப் பொறுத்தவரை இந்த நடைமுறை தலைகீழாக உள்ளது. மேல்முறையீட்டு மனுக்களைப் பெறும் ஆணையம், தவறு செய்த அதிகாரிகளைத் துணிச்சலாகத் தண்டித்து, தகவலைப் பெற்றுத் தருவதை விடுத்து, அதிகாரிகளை அணுகி மனுதாரருக்குத் தகவல் கொடுங்கள் என்று கெஞ்சுகிறதாம். இவ்வாறு கெஞ்சுவது எதற்கு? மாநிலத் தகவல் ஆணையம் இப்படி நடந்து கொள்வதால் தான் தவறு செய்யும் அதிகாரிகள் துணிச்சலுடன் உலா வருகின்றனர். சில துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மனுதாரருக்கு அலுவலகக் கவரில் வெற்றுத்தாளை வைத்து அனுப்பி தாங்கள் தாமதிக்காமல் மனுதாரருக்குப் பதில் அளித்துவிட்டதாகப் பதில் கூறிவிடுகின்றனர்.

தகவல் ஆணைய அதிகாரிகளின் பணி நியமனத்தில் அரசியல் குறுக்கீடும், மக்கள் பிரச்னைகளின் வலியை அறிந்திராத, அக்கறையில்லாதவர்கள் நியமிக்கப்படுவதுமே ஆணையத்தின் மெத்தனச் செயல்பாட்டுக்குக் காரணம். எனவே, மக்கள் நலனில் அக்கறையுள்ள, தகவல் உரிமை ஆர்வலர் ஒருவரையும் தகவல் ஆணையராக நியமிக்கலாம். தில்லி அரசு சைலேஷ் பாபு என்ற தகவல் உரிமை ஆர்வலரைத் தகவல் ஆணையராக நியமித்துள்ளது. இந்த நடைமுறையைப் பின்பற்றுவது குறித்து தமிழக அரசும் பரிசீலிக்கலாமே?

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தச் செயலர், தகவல் ஆணையாளர்கள், பொதுத் தகவல் அலுவலர்கள், தகவல் உரிமை ஆர்வலர்கள், பொதுமக்கள் ஆகியோர் பங்கேற்று கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் கூட்டம் சென்னையில் 2008-இல் கூட்டப் பட்டது. இந்தக் கூட்டத்தைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், முதல்கூட்டத்திலேயே தகவல் அறியும் மனுக்கள் மீது எடுக்கப்படும் அலட்சிய நடவடிக்கை குறித்து பொதுமக்களும், தகவல் ஆர்வலர்களும் சரமாரியாக எழுப்பிய வினாக்களுக்கு அதிகாரிகளால் பதில் அளிக்க முடியவில்லை. இந்தக் கூட்டத்தை ஏன் கூட்டினோம் என்ற நிலைமைக்கு ஆளாகித் தொடர்ந்து கூட்டம் நடத்துவது கைவிடப்பட்டது. இந்தக் கூட்டத்தை மீண்டும் கூட்ட வேண்டும்.

மேல்முறை யீட்டு மனுக்களை கையாளும் விஷயத்தில் வெளிப்படைத்தன் மையை தகவல் ஆணையம் பின்பற்றுவதில்லை. இதில் உள்ள நியாயம் என்ன என்பது புரியவில்லை. சாதாரண மக்களின் மனுக்களுக்குக் கூட தகவல் ஆணையம் ஆங்கிலத்தில் தான் பதில் அளிக்கிறது. இது அவர்களைச் சிரமத்துக்கு ஆளாக்கி வருகிறது. இதனால் தமிழில் மனு தாக்கல் செய்பவர்களுக்கு தமிழிலும், ஆங்கிலத்தில் தாக்கல் செய்வோருக்கு ஆங்கிலத்திலும், கடிதத் தொடர்பு இருப்பதை ஆணையம் உறுதி செய்ய வேண்டும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் வந்து 5 ஆண்டுகள் ஆகியும் இச்சட்டம் குறித்து தமிழக மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு இல்லை. இப்படியொரு சட்டம் இருப்பதே 90 சதவீத மக்களுக்குத் தெரியவில்லை. அரசின் இலவசத் திட்டங்களை விளம்பரப்படுத்துவதுபோல் தகவல் அறியும் உரிமைச்சட்டம் குறித்தும் மாநிலத்தின் கடைக் கோடியில் வசிக்கும் குடிமகனும் அறியச் செய்திட வேண்டும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பள்ளிப்பாடங்களில் சேர்த்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதிகாரிகள் மனசாட்சிக்குக் கட்டுப்பட்டுச் செயல்படாமல் இருப்பதால்தான் தகவல் ஆணையம் அவசியமாகியுள்ளது. அதிகாரிகள் மக்கள் நலன் கருதி செயல்படுவதைத் தமிழக அரசு உறுதி செய்துவிட்டால் இந்தத் தகவல் அறியும் சட்டம் எதற்கு? ஆணையம் தான் எதற்கு? ✱✱✱

# திவ்யப்பிரபந்த உரைகளில் எடுத்தாளப்பட்ட பழமொழிகள்

இதழ் 139இன் தொடர்ச்சி ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.

**27) கரும்பு தின்னக்கூலிகொடுப்பாரைப் போலே.** (திருவாய்மொழி 9-1-8)

''வாழ்தல் கண்டீர் குணமிது அந்தோ மாயவன் அடிபரவி'' என்னும் சொற்றொடருக்கு நம்பிள்ளை வாழ்தல் கண்டீர் குணம் இது- அவன் குணங்களை நினைந்து வாழும் இதுவே கண்டீர் பொருத்த மாவது. அந்தோ-கரும்பு தின்னக்கூலி கொடுப்பாரைப் போலே, (அவன் குணானுபவத்தின் இனிமையைச் சொல்லி, அந்தோ, என்ற தற்குக் கருத்து அருளிச் செய்கிறார், 'கரும்பு தின்ன என்று தொடங்கி. கரும்பு அயிறற்குக் கூலி போலத் தாம் இன்புறுதற்கு உலகம் இன்புறுதல் பிறவாற்றான் இன்மையின் அதனையே காமுறுவர் என்று கூறினார்' என்பது பரிமேலழகர் உரை (திருக்குறள்-399) கரும்பு அயிலக் கூலி கொடுக்கும் குலத்தோன்றல் என்பது திருவெங்கை உலா.) இவர்களை யான் இரக்க வேண்டுவதே! என்றது வாழ்ச்சி உங்களதாக இருக்க இரந்து திரிவேன் நான் ஆவதே! என்றபடி.

இதற்கான 24ஆயிரப்படி விரிவுரையில் பெரியவாச்சான் பிள்ளை வாழ்தல் கண்டீர் குணமிது- அவன் குணங்களை அநு ஸந்தித்து வாழுமதே கிடிகோள் யுத்தம். (அந்தோ) கரும்பு தின்னக் கூலி கொடுப்பாரைப் போலே இவர்களை அபேக்ஷிக்க வேண்டுவதே எனக்கு.

**28) கள்ளர் அச்சம் காடுகொள்ளாது.** (திருவாய்மொழி 4-10-2)

நம்பிள்ளை ''நாடினீர் வணங்கும் தெய்வமும் உம்மையும் முன் படைத்தான்'' என்ற சொற்றொடருக்கு விரிவுரை அருளிச் செய்திடும்போது இந்தப் பழமொழியைக் குறிப்பிட்டுள்ளார். நீர் நாடி வணங்கும் தெய்வமும் இயல்பாகவே அமைந்தது ஓர் உயர்வு இல்லாமையாலே அவைதாம் இறாயாநிற்கச் செய்தே. வசன ஆபாசங்களாலும் யுக்தி ஆபாசங்களாலும் நீங்கள் பொரி புறந்தடவி வருந்திச் சேமம் சார்த்தி வைத்து அடைகின்ற தேவர்களையும்,

கள்ளரைத் தேடிப் பிடிக்குமாறு போலே தேடிப் பிடிக்க வேண்டி இருப்பவர்களாதலின், நாடி என்கிறார். ஆடு திருடின கள்ளர்களே அன்றோ இவர்கள்தாம்? (ஆடு திருடியது எங்கே? என்ன அணங்குக்கு என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார். ஆடு கட்டினவர்கள் என்றது, ஆட்டினைக் கட்டுவித்துக் கொண்டவர்கள் என்றபடி. திருவாய்மொழி 4-6-7ஆம் பாசுரம் -அணங்குக்கு அருமருந்து என்று அங்கு ஓர் ஆடும் கள்ளும் பராய்' என்ற பாசுரம் இங்கு நினைவு கூர்தல் தகும். பெரியவர்களுக்குத் தெரியாமல், சிறியவர்களைக் கொண்டு ஒன்று வாங்கினால் அவர்களைக் கள்ளர் என்று கூறப்படும் வழக்கு உண்டேயன்றோ?) அணங்குக்கு அருமருந்து என்று அங்கே ஆடு கட்டினவர்கள் ஆகையாலே தேடிப் பிடிக்க வேண்டுமே. கள்ளர் (ஆச்ரயிக்கிறவர்கள் தேடிப் பிடிக்கும்படி போகிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார். கள்ளர் அச்சம் என்று தொடங்கி கள்ளர்க்கு உண்டாகும் பயம் பெரிய காடும் இடம் போராது என்றபடி.) அச்சம் காடு கொள்ளாது என்று தன்னை அடைய வருகிறவர்களையும் தன்னைக் கட்ட வந்தவர்களாகக் கொண்டு போகிறபடி. நீர்-ராஜஸராயும் தாமஸராயும் உள்ள நீர் அன்றிக்கே நீர் என்று அவர்களோடு தமக்கு ஒட்டு அறச் சொல்லு கிறார் என்னலுமாம். ஆக நீர் நாடி வணங்கும் என்றதனால் உங்கள் நினைவு ஒழிய அவர்கள் பக்கல் ஓர் உயிர் இல்லை என்பதனைத் தெரிவித்தபடி.

**29) குளப்படியிலே கடலை மடுத்தாற்போல்.** (திருவாய்மொழி 4-5-5)

பெரியவாச்சான்பிள்ளை நல் வகை காட்டும் என்னும் சொற்றொடருக்கு விரிவுரை அருளிச் செய்திடும்போது இந்தப் பழமொழியை மேற்கோளாகக் கொண்டுள்ளார். அஞ்சாம் பாட்டில் தான் ஸர்வாதிகனாய் வைத்து அர்ஜுநனுக்கு ஸகல அர்த்தங்களையும் உபதேசித்தாற்போலே க்ரமத் தாலே தன்படிகளைக் காட்டக் கண்டு அனுபவித்து ப்ரதிபந்தகங்க ளெல்லாம் போம்படி திருவாய்மொழிபாடி நிரதிசயாநந்தியானேன் என்கிறார்.

(ஆற்ற)- அமைய, பொறுக்கப் பொறுக்க. (நல்லவகை காட்டும்) தன்குணசேஷ்டிதங்களை அனுபவிப்பித்தவன் தன்படி களை ஒருகாலேகாட்டில் குளப்படியிலே கடலை மடுத்தாற் போலே இவருடைய ஆச்ரயம் சிதிலமாம். ''இந்நின்ற நீர்மை இனியாமுறாமை'' என்ற போதே வீற்றிருந்தேழுலகை அனுபவிப்பித்தால் இவரைக் கிடையாதென்றிறே இவ்வளவும் கொண்டு போந்தது.)

**30) கைப்பட்ட வஸ்துவை கடலிலே புகட்டாற்போலே.** (திருநெடுந் தாண்டகம் 21)

''மை வண்ண நறுங்குஞ்சி'' என்று தொடங்கும் திருநெடுந் தாண்டகம் 21ஆம் பாட்டின் திரண்ட பொருளை அருளிச் செய்யும் போது பட்டர் அருளிச் செய்ததாகப் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக் யானத்தில் 21ஆம் பாசுரத்தின் திரண்ட பொருளைத் தந்துள்ளார். ''மை வண்ண நறுங்குஞ்சி குழல்பின் தாழ, மகரஞ்சேர் குழை இருபுறமும் இலங்கியாட, எய்வண்ண வெஞ்சிலையே துணையா வந்தார் காண்; வந்தபோது அமளி (ஆர்ப்பாட்டம்) இப்படியிருந்தது. இயற்கையான திருமேனியழகு சிறப்பாகச் செய்யப்பெற்ற திருவாபரண அழகு, வில்லேந்தி வந்ததாலே காணப்பட்ட, பிறரைக் காப்பதில் உள்ள துடிப்பு ஆகிய மூன்றும் சேர்ந்திருந்த பசுங்கூட்டு இவ்வாறு இருந்தது'' என்கிறாள். அல்லது (2) ''அவருடைய நீர்மையையும் அழகையும் பார்த்த பின்பும் கைப்பட்ட பொருளைக் கடலிலே தமுவ விடுவாரைப் போலே அவரைத் தேவர் என்று மேன்மை யுடையவராக நினைத்துப் போகவிட்டேன் தோழி'' என்கிறாள் என்றும் கொள்ளலாம்.

**31) காட்டிலே எரித்த நிலாப்போலே.**

இந்தப் பழமொழியை திருவாய்மொழி 3-10-8, 24ஆயிரப் படி, 36ஆறாயிரப்படி, திருவாய்மொழி 4-5-2, 24ஆயிரப்படி, திருவாய் மொழி 7-2-7 36ஆறாயிரப்படி, திருச்சந்தவிருத்தம் அவதாரிகை ஆகிய இடங்களில் பெரியவாச்சான்பிள்ளையும் நம்பிள்ளையும் மேற் கோளாகக் காட்டியுள்ளனர். ''அல்லி மலர் மகள் போக மயக்குகள்'' என்ற சொற்றொடருக்கு விரிவுரை அருளிச் செய்த நம்பிள்ளை கீழ்க்கண்டவாறு அருளிச் செய்துள்ளார். அல்லிமலர் மகள் போக மயக்குகள்- (எங்கும் அழகமர் சூழ் ஒளியன் என்றாதனை இடமாக்கிக் கொண்டு ரசோக்தியாகப் பொருள் அருளிச் செய்கிறார். இதனால் என்றது முதல் சொல்லுகிறது என்றது முடிய. நெஞ்சோடே என்றது, சிலேடை: மார்பிலே இருந்து கொண்டு என்பதும் மனத்தோடு என்பதும் பொருள்) இதனால் இவ்வழகு காட்டில் எறித்த நிலவு ஆகாதபடி நெஞ்சோடே அனுபவிப்பாரைச் சொல்லுகிறது.

இருபத்துநாலாயிரப்படி-(அல்லி மலர் இத்யாதி) இவ்வழகு காட்டில் எரித்த நிலாவாகாதபடி அனுபவிப்பார் உண்டு என்கிறது. புஷ்பத்தில் பரிமளம் ஒரு வடிவு கொண்டாற்போலேயிருக்கிற பிராட்டியோட்டைக் கலவியாலே பிறந்த.

திருவாய்மொழி 4-5-2 பேருரையில் நம்பிள்ளை இந்தப் பழமொழியை மேற்கோளாகக் காட்டியுள்ளார். ''செய்ய கோலத்தடங் கண்ணன்'' என்ற சொற்றொடருக்கும் இக்கண்ணழகும் இச்சேர்த்தியழகும் காட்டில் எறித்த நிலா ஆகாமல் தாமரைக் கண்ணனை விண்ணோர் பரவுந்தலைமகனை என்கிறபடியே அனுபவிக்கின்றவர்களை உடையவனை என்னுதல் என்று உரை கண்டுள்ளார்.

திருவாய்மொழி 7-2-7 ''கோலமா மலர்க்கண் பனிமல்க இருக்கும்'' காட்சிக்கு இனியனவாய்ப் பரந்து, சிரமஹரமான கண்கள் நீர் மல்க இரா நின்றாள். கண்ணும் கண்ணநீருமான அழகு, காட்டில் எறித்த நிலா ஆவதே! இக்கண்ண நீருக்குச் சாதனத்தைச் செய்து பல வேளையிலே இழப்பதே! என்னுடைக் கோமளக் கொழுந்து கலக்கப் பொறாத மிருதுத் தன்மையையுடையவள் பிரியப் பொறுக்குமோ? தசை முறுகினால் வைத்தியர்கள் முகம் பாராதவாறு போலே, மகள் அவஸ்தையைக் கண்டு தளர்ந்து பெரியபெருமாள் முகம் பாராமலே வார்த்தை சொல்லுகிறாள் என்று அருளிச் செய்வர் சீயர்.

திருச்சந்தவிருத்தம் அவதாரிகையில் பெரியவாச்சான் பிள்ளை இந்தப் பழமொழியை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

''இந்த ஆழ்வாருக்கு எம்பெருமான் இவரிடம் எந்தக் கைம் முதலையும் எதிர்பாராமல் மயர்வற மதிநலமருளினன் (திருவாய் 1-1-1) என்று நம்மாழ்வாருக்கு அருளியது போலே அஞ்ஞானம் முதலான குற்றங்களை நீக்கி ஞானபக்திகளை அருளி, தன்னுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தையும், அதிலுள்ள ஞானம் சக்தி முதலான கல்யாண குணங்களையும், இவ்விரண்டையும் வெளிப்படுத்தும் திவ்யமங்கள விக்ரஹத்தையும், அதற்கு அலங்காரமான கிரீடம் தொடங்கி காற்சிலம்பு வரையிலான திருவாபரணங்களையும், அனுபவிப்பவர்களுக்குத் திருவாபரணம் போலே தோற்றமளிக்குமம் சங்கம், ச்கரம் முதலான திவ்யாயுதங்களையும் இவையனைத்தும் காட்டிலெரித்த நிலவிபோலே வீணாகாதபடி இவற்றை யனுபவிக்கிற ஸ்ரீ, பூமி நீளை முதலான திவ்ய மஹிஷிகளையும் பெருமாளும் பெரியபிராட்டியாருமான சேர்த்தியே தங்களுக்கு தாரகபோஷக போச்யங்களாகவுடைய அநந்தன், கருடன், விஷ்வக்ஸேனர் முதலான நித்ய ஸூரிகளையும் முக்தாத்மாக்களையும் இவ்வனுபவத்தை வளர்க்கும் பரமபதத்தையும் நேரே காணும்படி செய்து. (தொடரும்)

**தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் இணைஆணையர் அளித்த பதில்.**

**மனுதாக்கல் செய்யப்பட்ட தேதி 6.12.2010. பதில் பெறப்பட்டது 20.12.2010.**

அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் ஸ்ரீரங்கம், ந.க.எண். 2308/1420/-டி 1/நாள் 20.12.10. பொருள்: தகவல் அறியும் உரிமை, 2005, திரு. ஏ. கிருஷ்ணமாசாரி, 214, கிழக்கு உத்தர வீதி, ஸ்ரீரங்கம்-தொடர்பாக. பார்வை: திரு. கிருஷ்ணமாசாரி, கடிதம் நாள். 6.12.2010. பார்வையில் காணும் குறிப்பில் கேட்கப்பட்ட விபரங்களுக்கு தகவல் தெரி விக்கப்படுகிறது.

**தகவல் 1.** 1. நஞ்சை -402 ஏக்கர், 51 சென்ட், 2. புஞ்சை - 1139 ஏக்கர், 90 சென்ட், 3. கடை, கட்டிடம் - 68, 4. மனை -182.

**தகவல் 2.** வருட வருமானம்- 1. நஞ்சை - ரூ. 3,33,378, 2. புஞ்சை - ரூ. 64,635, 3. கடை, கட்டிடம்-ரூ. 9,07,319, 4. மனை- ரூ. 78, 898.

**தகவல் 3.** உண்டியல் மூலம் - 2010இல் பெறப்பட்ட வருமானம். மாதந்தோறும் திறப்பின்படி ரூ. 2,89,20,128.

**தகவல் 4.** அரசு வரிகள் நித்தியபடி ஏறுபடி பூஜை செலவினம், பணியாளர் ஊதியம், மின்கட்டணம், இலாகா கட்டணம் அங்கீகரிக்கப்பட்ட திட்டப் பதிவேட்டின்படியும், விதிகளின்படியும் செலவு செய்யப் படுகிறது.

**தகவல் 5.** இந்து சமய அனைத்து தரப்பினரும் வித்தியாசம் பார்க்காமல் அரங்கநாதரை ஸேவிக்க தற்காலத்தில் பெருமளவில் வந்தவண்ணம் உள்ளனர். இருப்பினும் வைணவ சமய மேம்பாட்டிற்காக, ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ள நடைமுறைகளின்படி நிர்வகிக்கப்பட்டு வருகிறது. உலக அளவில் இத்திருக்கோயிலின் வரலாறு மற்றும் பெருமைகளை பறைசாற்றும் வகையில் இன்டர்நெட் வசதி செய்யப்பட்டுள்ளது. பிரத்யேகமாக தகவல் கூடம் அமைக்கப்பட்டு, திருக்கோயில் விபரம் தெரிவிக்கும் புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. திருக் கோயிலின் ரெங்கவிலாச மண்டபம் அருகே, திருக்கோயில் அமையப் பெற்றுள்ளதன் வரைபடம் வைக்கப்பட்டு, பிரகாரங்களின் பெயர் மற்றும் விபரங்கள் தெரிவிக்கப் பட்டுள்ளன. பல இடங்களில் அறிவிப்பு பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது.

**தகவல் 6.** நாச்சியார் பரிகலம் பணியாளர்கள் அனைவரும் அவர்களுக் குரிய முறையில் பணியாளர்கள் (பணியாளர்களுக்கு) உரிய விதிகளின்படி அவர்கள் அணிந்து கொள்ளும் ஆடைகள் சுத்தமாக இருக்க வேண்டும் என்று அவ்வப்பொழுது அறிவுறுத்தப்பட்டு, எத்துளி மற்றும் உள்துறை கண்காணிப்பாளர்களில் (கண்காணிப்பாளர்களால்) மேற்பார்வையிடப் படுகிறது.

**தகவல் 7.**

தற்போது பிரசாதம் என்பது சரியான சொல்லாக பயன்பாட்டில் உள்ளது. அதனை மாற்றும் உத்தேசமில்லை.

**தகவல் 8.**

திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் ''பாஞ்சராத்ர ஆகம'' முறைப்படி பூஜைகள் மரபு வழியாக நடந்து வருகிறது. அர்ச்சனைகள், (அர்ச்சகர்கள்?) மேற்படி ஆகமத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாக உள்ளனர்.

**தகவல் 9.**

இத்திருக்கோயில் வளாகத்திற்குள் விஷ ஜந்துகள் தீண்டி ஆபத்து ஏற்பட்டதாக, சமீபகாலத்தில் தகவல் ஏதுமில்லை. வைகுண்ட ஏகாதசி திருவிழாவிற்கு பெருமளவில் பக்தர்கள் வருவதோடு அன்றைய தினம் இரவு முழுவதும் கோயிலுக்குள் தங்க வேண்டிய சூழ்நிலையில் அவசர சிகிச்சை அவசியமானதாக உள்ளது. ஸ்ரீரங்கத்தில் தெற்கு கோபுர வாசல் அருகில் அரசு மருத்துவமனை பெரியளவில் திருக்கோயிலுக்குச் சொந்த மான இடத்தில் அமைந்துள்ளதால் நிரந்தரமாக மருத்துவ மையம் அமைக்க தேவையேற்படவில்லை. இதற்காக வைகுந்த ஏகாதசி திருவிழா காலத்தில் மட்டும் அரசு மருத்துவ பிரிவு திருக்கோயில் வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

**தகவல் 10.**

திருக்கோயிலுக்கு வெளியே உள்ள மண்டபங்கள் தனி நபர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தாலும் பெருமாள் எழுந்தருளும் சமயங்களில் அவர்கள் மண்டபத்தை காலி செய்து தருகி றார்கள். பல மண்டபங்கள் திருவிழா இல்லாத காலங்களில் பூட்டி பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மக்கள் எல்லோரும் எந்த அறிவிப்பு பலகை யின்றியும், இந்த திருநாளில், பெருமாள் இந்த மண்டபத்தில் எழுந்த ருளுவார் என்று பிசகின்றி தெரிந்து வைத்துள்ளார்கள். மேலும் தேவைப் படும் மண்டபங்களில் விபரம் எழுதி வைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக ஜீயபுரத்தில் ''ஸ்ரீரங்கம் ரங்கநாதசுவாமிக்கு சொந்தமான ஆஸ்தான மண்டபம்'' என்று எழுதி வைக்கப்பட்டுள்ளது. தகவல் அளிக்கும் அலுவலர் /மேலாளர்.

✱✱✱

இந்து சமய அறநிலையத்துறை ஆணையருக்கு 10.1.2011 அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட மனு.

1) என்னுடைய 6.12.2010 தேதியிட்ட **R.T.I.** கடிதத்தின் மூலம் கீழ்க்கண்ட கேள்வி கேட்கப்பட்டிருந்தது.

1) திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் இணை ஆணையர் திரு. சி. ஜெயராமன், 30-9-2010 அன்று அவருடைய கடித எண். ந.க. 555/ 1420/ டி 1 நாள்: 29.9.2010., பிரும்மரத மரியாதை குறித்து உங்களது அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளார்.

2) இந்தக் கடிதத்தின் மேல் ஆணையர் எடுத்த முடிவு திருவரங்கம் கோயில் இணைஆணையருக்கு எந்தத் தேதியில் அனுப்பப்பட்டுள்ளது? அவருடைய வேண்டுகோளுக்கு இணங்க அனுமதி வழங்கப் பட்டுள்ளதா? அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அதன் நகலைப் பெற விரும்புகிறேன்.

3) அதற்கு உங்கள் அலுவலகத்தில் இருந்து 10.12.2010 தேதியிட்ட பதில் பெறப்பட்டது.

***‘‘மேற்கண்ட பொருள் தொடர்பாக பார்வையில் கண்டுள்ள குறிப்பில் கேட்கப்பட்ட விவரத்திற்கு கீழ்க் கண்டவாறு தகவல் தெரிவிக்கப்படுகிறது. பிரம்மரத மரியாதை தொடர்பாக அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.’’***

ஆயினும் 18-11-2010 அன்று கைசிக புராண பிரம்மரதம் அதற்குரிய வேதவ்யாச லக்ஷ்மி நரசிம்ம பட்டருக்கு மறுக்கப் பட்டுள்ளது. இந்தச் செயல் மேற்குறிப்பட்டுள்ள உங்கள் விளக்கத்தின் அடிப்படையில் ஆணையை மீறிய செயலாக ஆணை யரால் கொள்ளப்படுகிறதா? இல்லையா? இது குறித்து துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா?

4) 21-12-2010 செவ்வாய்க்கிழமையன்று இராப்பத்து வேதபாராயணத்திற்குரிய பிரம்மரத மரியாதை குறித்து அட்வகேட் திரு. T.C.A. ஸ்ரீனிவாசன் M.A. B.L. மூலம் திருவரங்கம், திரு. பராசர

திருவேங்கடபட்டர் மகன் பராசர ஸ்ரீசுதர்சன பட்டர் வாய்மொழி யாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ ஆணையரிடம் முறையீடு ஏதேனும் செய்தாரா? அவ்வாறு முறையீடு செய்யப்பட்டிருந்தால் பிரம்மரதம் குறித்த ஆணையரின் உத்தரவு ஏதேனும் பிறப்பிக்கப் பட்டதா? அவ்வாறு பிறப்பிக்கப்பட்டதாக தினகரன் 22.12.2010 தேதியிட்ட நாளிதழில் செய்தி வெளிவந்துள்ளது. இது உண்மைக்குப் புறம்பான செய்தியா?

5) 27.9.2010 தேதியிட்ட அறங்காவலர் குழு தீர்மானத்தை முன்னிருத்தி, 18.11.2010 கைசிக பிரம்மரத மரியாதையை நிறுத்துவதற்கு அனுமதி கேட்ட இணையாணையரின் 29.9.2010 கடிதத்திற்கு அவ்வாறு அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்த ஆணையர் பின் நடைபெற்ற அதாவது 26 மற்றும் 27 டிசம்பர் 2010 தேதிகளில் நடைபெறாமல் தடுக்கப்பட்ட பிரம்ம ரத மரியாதையைப் பற்றி ஏன் முன்நடவடிக்கை எடுக்கவில்லை?

6) இதற்காக இணைஆணையர் மீது துறைத் தொடர்பான நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா?

7) இந்தச் செயல் Principle of Natural Justiceக்கு புறம்பான செயல் அல்லவா?இதன் மூலம் ஆணையர் சட்ட விதிகளுக்குப் புறம்பாக இயற்றப்பட்ட 27.9.2010 தேதியிட்ட அறங்காவலர் குழு தீர்மானத்தை ஏற்றுக் கொள்கிறார் என்று பொருள் படுமா? அப்படியாகில் தங்களுடைய 10.12.2010 தேதியிட்ட கடிதத் திற்கான பொருள் என்ன?

✱✱✱

**திருமலையில் தங்கத்தகடுகள் பதிக்க முற்பட்ட அறங் காவலர் குழுவின் செயலுக்கு ஆந்திர உயர்நீதிமன்றம் கண்டனம்.**

29.11.2010 அன்று மாண்புமிகு ஆந்திர உயர்நீதிமன்ற நீதிபதிகள் திரு. B. பிரகாஷ்ராவ் மற்றும் R. காந்தாராவ் ஆகியோர் அளித்த தீர்ப்பு.

இந்தத் தீர்ப்பில் மாண்புமிகு நீதிபதிகள் கல்வெட்டுகள் எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதைக் குறிப்பிட்டு திருமலை திருப்பதி அறங்காவலர் குழுவினருக்கு தமது கண்டனத் தைத் தெரிவித்துள்ளனர். இந்தத் தீர்ப்பில் மாண்புமிகு நீதிபதிகள் The

Ancient Monuments and Archaeological Sites and Remains Act, 1958. (No. 24 of 1958)இல் இருந்து சட்ட விதிகள் பலவற்றைக் குறிப்பிட்டு கல்வெட்டுகளின் முக்கியத்துவத்தை உணர்த்தியுள்ளன.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் கல்வெட்டுகள் சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை. அவை ''மணல்வீச்சு'' (Sandblast) முன்பு என்னும் செயல் மூலம் அழிக்கப்படுகின்றன. அழிக்கப்பட்டுள்ளன. இவையெல்லாவற்றிற்கும் மேலாக கல்வெட்டுகள் அமைந்துள்ள சுவற்றின் கட்டிடங்கள் எழுப்பப்பட்டு அவை மறைக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக அந்தந்தத் திருக்கோயில்களின் மரபுப்படி பெரிய அளவில் பலவண்ணங்களில் திருமண்காப்புகள் அழிக்க இயலாத பெயின்ட் கொண்டு தீட்டப்பட்டுள்ளன. கல்வெட்டுகள் அமைந்துள்ள சுவர்களில் இத்தகைய திருமண்காப்புகள் தீட்டப்படக் கூடாது. இது மேற்குறிப்பிடப்பட்டுள்ள 1958ஆம் ஆண்டு இயற்றப் பட்ட சட்ட விதிகளுக்கு முரணாகும். இதில் சம்ப்ரதாய அபிமானத் திற்கு இடமில்லை.

கல்வெட்டுகள் உயிர் உள்ளவை. அவை தாம் திருக் கோயில்களின் வரலாற்றை பறைசாற்றுகின்றன. கடந்த காலங்களில் பலர் பல தானங்கள் அளித்து அந்தந்தத் திருக்கோயிலைக் காப்பாற்ற முன்வரவில்லையென்றால் இன்று இந்தத் திருக்கோயில்களில் ஆராத னங்களும் விழாக்களும் நடைபெற வாய்ப்பில்லை. ஆகவே இத்தகைய கல்வெட்டுகளை அதிகார வர்க்கத்தின் ஆணவப் போக்கி னின்று மீட்டு அவை என்றென்றும் காட்சி தர உரிய முறையில் விஞ்ஞான ரீதியில் அவற்றைப் பாதுகாக்கவேண்டும். நம்முடைய க்ரந்தங்களை ஒருவர் எரிக்க முற்பட்டால் என்ன மனத்துயரை அடைவோமோ? அந்தத் துயரை கல்வெட்டுகளுக்கு ஊறு செய்யப் படும்போது நாம் கொள்ள வேண்டும்.

திருவரங்கம் பெரியகோயிலில் 700 கல்வெட்டுகளுக்கு மேல் காணப்படுகின்றன. பெரும்பாலான கல்வெட்டுகள் மேல் சிமென்ட் பூச்சுக்கள் அவற்றிலுள்ள சொற்றொடர்களை மறைக்கின்றன. பெரும் பாலான கல்வெட்டுகள் ஏன் எந்த கல்வெட்டும் அவற்றிற்கு உரிய முறையில் பராமரிக்கப்படுவதில்லை. அவரவர்களுக்கு உரிய மரியாதை கிடைக்கின்றதா? உரிய பிரசாதங்கள் அல்லது விட்டவன் விழுக்காடு ஒழுங்காக வந்து சேருகின்றதா? என்பதிலேயே அனை

வர்க்கும் நோக்கு. கல்வெட்டை நேசிப்பவர்கள் அல்லது பாது காக்க முற்படுபவர்கள் நூற்றில் ஒருவர்கூட இல்லை. அதிகார வர்க்கத் துக்கோ கடவுள் சிலையை வைத்து எவ்வளவு பணம் பண்ண லாம், எப்படி எல்லாம் நுழைவுச்சீட்டிற்கான கட்டணத்தை உயர்த்தி வருமானம் சேர்க்கலாம், எந்தக் கட்டிடத்தை இடிக்கலாம்? எந்தக் கட்டிடத்தைப் புதிதாகக் கட்டலாம்? என்பதிலேயே தங்கள் கவனத்தைச் செலுத்தி வருகின்றனர். கோயில் நிர்வாகத்திற்கு கல்வெட்டுகளின் முக்கியத் துவத்தைப் பற்றி எந்தக் கவலையும் இல்லை. கடவுளைக் காட்சிப் பொருளாக்கி இந்த ஆண்டு வருமானத்தை சென்ற ஆண்டைவிட எவ்வாறு 50 சதவிகிதம் உயர்த்தலாம்? என்பதிலேயே அவர்களுடைய எண்ணமெல்லாம் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது. இத்தகைய சூழலில் பாஞ்ச ஜன்யம் ஆசிரியர் கீழ்க்கண்ட 17.1.2011 தேதியிட்ட தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழான மனுவை திருவரங்கம் கோயில் இணைஆணையருக்கு அனுப்பியுள்ளார். இதன் நகல் Director General Archaeology Survey of India, janpath, New Delhi என்ற முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**"I request you to intimate me the action taken to restore the inscriptions which have been lost or disfigured or damaged or covered with plates or painted with Thirumanns and smeared with paint.**

**At the Ranganathaswamy Temple, many Inscriptions are permanently lost from the view of the visiting devotees and the research Scholars. The inscriptions that are found in the SriRanganatha Swamy Temple are not preserved as per the directions given in The Ancient Monuments and Archaelogical Sites and Remains Act, 1958. (No. 24 of 1958).**

**Paint is smeared on most of the inscriptions in the Rajamahendran Thiruchutru and Kulasekaran Thiruchutru. Reckless cement plastering is found over the inscriptions. Some inscriptions on the western side**

of the chandhana Mantapam have been totally erased. Thirumannkappu in multicolours have been painted over the inscriptions at all the walls where inscriptions are found. Office buildings have been constructed in the 5th prakara eastern side of Karthigai Gopura Vasal, thereby the inscriptions are hidden which is an offence.

Almost all the inscriptions at the Chakkara thazhwar Sannidhi walls and pillars are smeared with oil and ghee. No effort is taken to clean them periodically. Inscriptions on the tiers are covered with brassplates at the Nazhikettan Vasal. Doors of the Karthigai Gopura vasal which were provided by Koneri Raja (15th century) were removed and this entrance is without any door.

Shops are found obstructing the view of the inscriptions on the walls from the Karthigai Gopura vasal leading to Chakkarathazhwar Sannidhi i.e. western side of Karthikai Gopura vasal. There is no proper path provided to see & study the inscriptions on the walls of Azhwan Thiruchutru. Given below is the list of inscriptions which fall under these categories.

(1) Immediate action has to be taken to remove the switch boards obstructing the inscriptions found in the east wall of Rajamahendran thiruchutru and other places.

Inscription, A.R.No.55/1892-Switchboard is blocking its view.

(2) All the walls of Kulasekaran thiruchutru is smeared with either paint or chunnam. The following are the few of the inscriptions that are not visible.

a) A.R.No. 112/1938-39- East wall

b) A.R.No. 109, 110, 117/1947-48- North wall

c) A.R. No. 131/1947-48- West wall

d) A.R. No. 23/ 1948-49- South wall.

3) Covered by brass plates on the tiers of Nazhikettan vasal.

a) A.R. No. 168/1951-52.

b) A.R. No. 169/1951-52.

4) Inscriptions that are blocked by shops in the Akalangan thiruchutru western side of Karthikai Gopura vasal leading to Chakkarathazhwar Sannidhi.

a) A.R.No. 146/1938-39.

b) A.R.No. 335/1952-53.

5) Inscriptions that are on the west wall of Akalangan thiruchutru (Azhwan thiru chutru side.)

A.R. No. 117/1937-38.

6) Inscriptions that are totally erased in the Chanthana Mantapam-west wall-North end.

a) A.R. No. 72/1938-39.

b) A.R. No. 67/ 1938-39.

7) Doors of Karthikai Gopura vasal provided by Koneri Deva Maharaja- removed. They are to be fixed.

A.R. No. 115/1937-38 and A.R. No. 116/1937-38.

8) Defacing the inscriptions by fixing tender notices at the Naanmugan Gopura vasal.

A.R.No. 121/1937-38.

9) On the wall behind office of the Chairman Board of Trustees. The following inscriptions are found which are not visible now.

A.R.Nos. 267, 268, and 269/1930.

10) All the multicolor Tirumanns are to be removed from all the walls wherever inscriptions are found.

For your ready reference abstracts from the central act of 1958 is given below. You are hereby requested to intimate me the action proposed to be taken within 30 days.

**Your attention is drawn to the following sections of The Ancient Monuments and Archaelogical Sites and Remains Act, 1958. (No. 24 of 1958)**

2) In this Act, unless the context otherwise requires.-

2-a) "Ancient Monument" means any structure, erection or monument, or any tumulus or place of interment, or any cave, rock-sculpture, inscription or monolith which is of historical, archaeological or artistic interest and which has been in existence for not less than 100 years and includes-

2-b) Antiquity includes any coin, sculpture, manuscript, epigraph, or other work of art of craftsmanship.

(ii) any article, object or thing detached from a building or cave,

(iii) any article, object or thing illustrative of science, art, crafts, literature, religion, customs, morals, or politics in bygone ages.

(iv) any article, object or thing of historical interest, and

2-f) "maintain", with its grammactical variations and cognate expressions, includes the fencing, covering in, repairing, restoring and cleansing of a protected monument, and the doing of any act which may be necessary for the purpose of preserving a protected monument or of securing convenient access thereto;

(30) (1) WHOEVER-

(i) destroys, removes, inquires, alters, defaces, imperils, or misuse a protected monument, or

(iv) does any act in contravention of sub-section (1) of section 19, shall be punishable with imprisonment which may extend to three months, or with fine which may extend to five thousand rupees, or with both.

(32) Notwithstanding anything contained in the Code of Criminal Procedure, 1898, an offence under clause (i) or clause (iii) of sub-section (1) of section 30, shall be deemed to be a cognizable offence within the meaning of that Code.

Central Act 24 of 1958, provides that no unauthorized activity, which would affect or damage such inscriptions, is permissible without prior permission of the Central Government.

There are above 700 inscriptions/epigraphy on the

temple walls some in Tamil, Grantha Characters, Telugu, Canarese and Devanagari script dating back from 8th to 20th century AD. The inscriptions not only mirror the gifts of villages, jewels, money etc., made by the persons, but also reflect the socio-religious and economic insights of different time periods. The inscriptions differ from dynasty to dynasty and were signed by Chola, Pandya, Hoysala, Vijayanagara & Nayakka dynasties among others with the signs of Sun and half crescent Moon and the stars with a slogan "Aachandraarka taaram" signifying that the inscriptions shall remain as long as the Sun, Moon and stars exist in the universe.

Section 30 provides for penalties against whoever imperils a protected monument. Under Section 32, any violation or breach, as provided under Section 30, amounts to cognizable offence within the meaning of the Code of Criminal Procedure.

Having regard to the aforesaid provisions and a reading with other provisions as provided for, it contemplates a complete protection of antiquities and monuments. The definition of 'ancient monument' as mentioned above is wide enough and would take in an inscription or monolith, which has been existing for not less than 100 years. Admittedly, the inscriptions, are no doubt quite ancient in its existence and fall well within the definition of 'ancient monument' under Section 2 of the said Act. There is no dispute with regard to the fact that these inscriptions on the stones or stonewalls are in existence for more than 100 years and even the contents of the inscriptions also quite date back far beyond the prescribed period.

# தினமலரின் நேர்மையின்மை

**ஆசிரியர்:இரும்பாநாடு ஸ்ரீ.உ.வே. S.பத்மநாபன்.**

**பாஞ்சஜன்யம் ஆசிரியர் குறிப்பு:** ஒருவர் ஒரு நூலை மதிப்பீடு செய்யும்போது நடுநிலைமை பிறழாமல் விருப்பு வெறுப்புகளுக்கு இடங் கொடுக்காமல் அந்த நூலில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களை ஆராயவேண்டும். அ.ஹோ. மெத்தப்படித்தவராய் இருந்ததால் மட்டும் அவர் எழுதிய உண்மைக்குப் புறம்பான செய்திகளை அனைவரும் ஏற்றுக் கொள்ள முடியாது. நக்கீரன் இதழ்களில் இந்து மதத்தையும் கடவுள்களையும் வேதநெறி சார்ந்த கொள்கைகளையும் மிகவும் கீழ்த்தரமாகச் சித்தரித்து எழுதிய அ.ஹோவிற்கு உரிய பதிலைத்தான் திரு. பத்மநாபன் அவர்கள் தந்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்கு உரிய பொருளை அறிந்து கொள்ளாமல் தன் மனம் போன போக்கில் விமர்சனம் என்ற பெயரில் தினமலரில் திரு. ராமன் முத்துஸ்வாமி விமர்சித்துள்ளார். அதற்கான பதிலை நூலாசிரியரான இரும்பாநாடு. திரு. பத்மநாபன் எமக்கு எழுதி அனுப்பியுள்ளார்.

‘‘அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய தினமலர் நாளிதழ் பொறுப்பாசிரியர் அவர்களே.

தங்களது 2.1.2011 தேதியிட்ட நாளிதழில் ‘‘சார்ங்க வர்ஷம்’’ என்ற எனது நூல் புத்தக மதிப்புரைப் பகுதியில் விமர்சிக்கப்பட்டுள்ளது. **‘‘ராமன் முத்துஸ்வாமி’’** என்பவர் அந்த விமர்சனத்தை எழுதியுள்ளார். பொறுப்பாசிரியர் என்ற முறையில் தங்களுக்கும் எனது புத்தகத்தை விமர்சனம் செய்த நபர் என்ற முறையில் குறிப்பாக அவருக்கும் இந்தக் கடிதத்தின் மூலம் சில விஷயங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எனது புத்தகத்தை விமர்சித்த நபர் என் புத்தகத்தை முழுமையாகப் படிக்கவில்லை என்பது அவரது விமர்சனத்திலிருந்து தெரிகிறது.

எனது புத்தகத்தின் பக்கங்கள் 191 என்ற எழுதியிருப்பதே இதற்குச் சான்று. எனது புத்தகத்தின் பக்கங்கள் 175. ஒரு புத்தகத்தின் பக்கங்கள் மொத்தம் எத்தனை என்பதே சரியாகத் தெரியாமல் ஒருவர் அந்தப் புத்தகத்தை விமர்சிக்கிறார் என்றால் அவர் அப்புத்தகத்தைச் சரியாகப் படித்திருப்பாரா என்பதை நடுநிலையாளர்கள்தான் ஆயந்து சொல்ல வேண்டும்.

ஏதோ ஒருசில இடங்களை மட்டும் மேலெழுந்த வாரி யாகப் பார்த்துவிட்டு, மனதில் ஏதோ தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியை வைத்துக் கொண்டு, நடுநிலை தவறி விமர்சனம் என்ற பெயரில் ஏதேதோ பிதற்றியிருக்கிறார் ''ராமன் முத்துஸ்வாமி''. ''மாறா பண்டிதர்'' என்று இவரால் பஹு மானிக்கப்படும் ''அக்நிஹோத்ரம் நாமாநுஜா தாதா சாரியார்'' பல சந்தர்ப்பங்களில் ''இந்துமதம்'' என்ற பெயர்கொண்ட நம் மதத்தைப் பற்றியும் நமது ஸநாதாதர்மத்தின் அடிப்படையிலான பாரம்பரிய பண்பாட்டுக் கலாசார மரபுச் சடங்குகளைப் பற்றியும் எவ்வளவுதூரம் கேவலமாகக் கருத்துச் சொல்லமுடியுமோ அவ்வளவு தூரம் சொல்லியிருக்கிறார் என்பதை இந்த நாடே அறியும்.

''விஷ்ணு என்ற தெய்வமே இல்லை; வைணவம் கல்பிதம்'' என்று ஒரு காலத்தில் எழுதியவர் இந்த அக்நிஹோத்ரி. சேது சமுத்ரபிரச்சினை நடந்த நேரத்தில் ஸ்ரீராமன் தெய்வமே இல்லை என்று கூறியவர். ''இந்து'' என்றால் திருடன் என்ற கருத்தை வழிமொழிந்தவர். ஸ்ரீமத்ராமாநுஜரைப் பேட்டை ரவுடி என்றவர். இவர் நக்கீரனில் எழுதிய ''இந்துமதம் எங்கே போகிறது'' என்ற கட்டுரைத்தொடரில், சிவ நெறிக்கும், விஷ்ணு தன் பக்தையைக் கெடுத்துவிட்டார் என்று சொல்லி வைணவ நெறிக்கும் களங்கம் கற்பித்தார். இங்கு சொல்லப் பட்டது மிகக் குறைவே.

இப்படி இவர் நம் மதம் பற்றிக் கேவலமாகப் பேசியிருப்பதையும் எழுதியிருப்பதையும் சொல்லி மாளாது. இப்படிப்பட்டவரை ''மஹா பண்டிதர்'' என்கிறார் எனது புத்தகத்தை விமர்சித்த ''ராமன் முத்து ஸ்வாமி''. எனது புத்தகத்தை ''நடுத்தெருவில் பட்டப்பகலில் சாணி எறிந்து விளையாடுவது போல'' என்று விமர்சித்திருக்கும் இவருக்கு அக்நி ஹோத்ரி செய்ததெல்லாம் சந்தனம் இரைப்பதுபோல் தோன்று கிறது போலும்!

அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியர் ஒட்டு மொத்த இந்து மதத்தின் மீதே [சைவம், வைணவம் உட்பட] சேற்றை அல்ல .... சாணத்தை அல்ல .... நரகலையே அள்ளி வீசியிருக்கிறார். அவரை மரியாதைக்குரியவர் என்கிறார். ராமன் முத்துஸ்வாமி!

வயதுகருதிமதிக்க வேண்டுமாம்! தன்னைப் பெற்ற தாயை வயதான ஒருவன் பலாத்காரம் செய்ய முற்பட்டால், அவனது வயது கருதி, அவனை ஒன்றும் சொல்லாமலும், ஒன்றும் செய்யாமலும் இந்த 'ராமன் முத்துஸ்வாமி' சும்மா இருந்து விடுவார் போலும்!

மேலும் எனது புத்தகத்தில் 'வசைபாடப்பட்டோர் பட்டியல்' என்று சொல்லி அதில் சிலரைக் குறிப்பிட்டிருக்கிறார் இவர். நக்கீரன் ஆசிரியர் குழு அக்நிஹோத்ரியின் கருத்துக்களில் உள்ள பொருந் தாமையையும் பொய்மையையும் கண்டு கொள்ளாமல் அவர் மீது கொண்ட கண்மூடித்தனமான நம்பிக்கை மரியாதை இவற்றால் அவர் எழுதிக்கொடுத்ததை அப்படியே பிரசுரிந்துவிட்டார்கள். அதற்கு மறுப்பாக எழுதி நாம் அனுப்பியதை அவர்கள் பிரசுரிக்கவில்லை. தங்கள் பத்திரிக்கையில் பிரசுரிக்கத் தகுந்த கருத்துக்களை அக்நிஹோத்ரி எழுதிக் கொடுத்ததால் அதை பிரசுரித்துவிட்டார்கள். மேலும் மத விஷயங்களைத் குறிப்பாக இந்துமத விஷயங்களைக் கொச்சைப் படுத்து வதையே வழக்கமாகக் கொண்ட பத்திரிக்கை அது. இது நாடறிந்த உண்மைதானே! இதில் என்ன வசைபாடல் இருக்கிறது.

ஸ்ரீவைஷ்ணவத்தையே கேவலப்படுத்திய அக்நிஹோத்ரிக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தது அஹோபில மடம். இது கண்டிக்கத்தக்க விஷயமில்லையா? எனது புத்தகத்தில் எந்த ஒரு இடத்திலும் ஸ்ரீவேதாந்த தேசிகரை வசைபாடியதே கிடையாது. என் புத்தகத்தை ஒழுங்காகப் படித்தவர்களுக்கு அது புரியும். சிறந்த ஞான பக்தி வைராக்யத்துடன் கூடிய ஸ்ரீவைஷ்ணவ சிரோமணியான அவரது கொள்கைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் சிலர் அவரது பெயரைக் கெடுக்கிறார்கள் என்றுதான் எழுதியுள்ளேன். இது எப்படி அவரை வசைபாடுவது ஆகும்?

புத்தரைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் அவரை இன்றுள்ள சிலர் தவறாக அறிமுகப் படுத்துகிறார்கள் என்பதை வெளிநாட்டு

அறிக்கை களின் கருத்துக்களை மேயிருக்கிறேன். இது எப்படி வசை பாடுவது ஆகும்? உண்மையை உள்ளபடி சொன்னால் அதுவசை பாடுதல் என்பதுதான் ராமன் முத்துஸ்வாமியின் அகராதியில் உள்ளது போலும்!

என் புத்தகத்தில் சொல்லப்பட்ட ஒவ்வொரு கருத்தும் வலிமையான ஆதாரத்தின் அடிப்படையில் எழுதப்பட்டவை. எனது கருத்தில் பொருந்தாமை இருப்பதாகவும், வெறும் த்வேஷ உணர்வால் எழுதப்பட்டதாகவும் யாராவது உணர்ந்தால், தக்க ஆதாரத்தின் அடிப்படையில் எனது கருத்தை மறுக்கலாம். அதுதான் அறிவுள்ளோர் செய்கை. அதை விட்டுவிட்டு 'புத்தக விமர்சனம்' என்ற பெயரில் வெறுப்பு ணர்ச்சியோடு எழுதுவது பச்சைத்தனமான அயோக்யத்தனம்.

''அஸக்தாஸ் தத்பதம் கந்தும் ததோ நிந்தாம்

ப்ரகுர்வதே'' [முறைப்படி வாரம் செய்ய இயலாதவன் ப்ரதிவாதம் செய்பவனை நிந்திக்கிறான்] என்றபடி, எனது புத்தகத்தின் கருத்துக்களை ஆதாரத்தோடு மறுக்க வக்கில்லாததால் தான் எனது புத்தகத்தில் வெறும் வசைபாடியிருப்பதாகச் சொல்லி என்னை வசைபாடியிருக்கிறார் இந்த ''ராமன் முத்துஸ்வாமி''.

கடைசியாக ''கற்றறிந்தோர் இந்நூலை புறந்தள்ளுவது நிச்சயம்'' என்று ஒருவரி எழுதியுள்ளார். அது நூற்றுக்கு நூறு உண்மை. எப்படியெனில், நியாயத்திற்கும் புறம்பாகப் பேசுபவர்கள், நடப்பவர்கள் தான் இன்று பெரும்பாலும் கற்றறிந்தோர் என்ற பெயரில் நாட்டில் உலாவருகிறார்கள்!

நியாயத்தையும், உண்மையையும், தர்மத்தையும் நன்றாக உணர்ந்த ஒரு உண்மையான கல்வியாளன் யாராவது ஒருவர் இந்த நாட்டில் இருந்தால் கண்டிப்பாக என் புத்தகத்தை தலைமேல் வைத்துக் கொண்டாடுவான். அப்படிப்பட்ட நியாயமறிந்த கல்வியாளர்களும் சில பேர் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில்தான் எனது புத்தகம் எழுதப் பட்டது.

**ஸத்யமேவ ஜயதே!**

# செந்திறத்த தமிழோசை

*இதழ் 139ன் தொடர்ச்சி. ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்.*

கருணையென்னும் கடல் கருங்கடலை நோக்கிக் கிடந்ததே என்றானிறே-5.10.6.36. கருணையங்கடல் துயின்றனன் கருங்கடல் நோக்கி என்னும் படியிறே. 6-9-3-36.

**''கருணை அம் கடல் கிடந்தனன் கருங்கடல் நோக்கி**
**வருண மந்திரம் எண்ணினன் விதிமுறை வணங்கி''**

என்பது கம்பராமாயணம் வருணனை வழிபட வேண்டு படலம்.

**3)பித்தர் சொல்லிற்றும் பேதையர் சொல்லிற்றும்**
**பத்தர் சொல்லிற்றும் பன்னப் பெறுவரோ**-பாவை-28-6.

இது கம்பராமாயணம் பாயிரம் 8. சொல்லிற்றும் என்பதற்கு மாறாகச் சொன்னவும் என்பதும் பெறுவரே என்பதற்கு மாறாகப் பெறுபவோ என்பதும் பாடமாக உள்ளன.

**4) ஈக்கள் வண்டொடு மொய்ப்ப என்று ஆற்று வரவு களிலே சொல்லுவார்கள் ஆயிற்றுத் தமிழர்-பெரியதிருமொழி-1.1.10.**

**ஈக்கள் வண்டொடு மொய்ப்ப, வரம்புஇகந்து**
**ஊக்கமே மிகுந்து உள்தெளிவு இன்றியே**
**தேக்கு எறிந்து வருதலின்-தீம்புனல்**
**வாக்கு தேன்நுகர் மாக்களை மானுமே**

என்பது கம்பராமாயணம், ஆற்றுப்படலம்-10.

(மஞ்சுலாஞ்சோலை) மேகங்கள் உலாவும்படியான ஒக்கத்தை யுடைத்தான சோலை. (வண்டறை) என்கிறது-சோலைக்கு விசேஷணமாகவுமாம்; மாநீர்க்கு விசேஷணமாக வுமாம் ஜலத்தினுடைய ரஸ்யதையாலே ஈக்கள் வண்டொடு மொய்ப்ப என்று ஆற்று

வரவுகளிலே சொல்லுவர்களாயிற்றுத் தமிழர். (மங்கையார் வாள் கலிகன்றி) பகவத் ஸம்பந்ததை யுணர்ந்தவர்).

**நாலடியார்.**

நடுவண தெய்த இருதலையும் எய்தும் என்று தமிழர் சொல்லுகிறபடியே சொல்லுகிறாரன்று-சிறிய திருமடல் கண்ணி-4.

**வடுஇலா வையத்து மன்னிய மூன்றில்**
**நடுவணது எய்த, இருதலையும் எய்தும்**
**நடுவணது எய்தாதான், எய்தும், உலைப்பெய்து,**
**அடுவது போலும் துயர்.**

என்பது நாலடியார் அறப்பால், அதிகாரம் 12, பாட்டு 4.

**விளக்கக்குறிப்பு:** (ஆராரிவற்றினிடை அதனை யெய்துவார்) நடுவணது எய்த இருதலையும் எய்தும் (நாலடியார்-அறத்துப்பால்-அதிகாரம் 12) என்றவிடத்தில் தமிழ்ப்புலவர் ''அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று புருஷார்த்தங்களில் நடுவிலுள்ள பொருளை அடைந்தவர்கள். முதலாவது மூன்றாவது புருஷார்த்தங்களான அறத்தையும் இன்பத்தையும் அடைவார்கள் பொருள் இரண்டுக்கும் ஸாதனமாயிருப்பதால்'' என்று சொன்னார்.

''அவற்றினிடையதனை எய்துவார் சீரரிருகலையு மெய்துவர்'' என்னும் ஆழ்வாருடைய பாசுரம் கீழ் எடுக்கப்பட்ட தமிழர் பாட்டை சப்தத்தில் ஒத்ததேயாகிலும், அர்த்தம் அதுவன்று. இவருக்கு உத்தேச்யம் பொருளன்றாகையாலே, அவற்றினிடை-இம்மூன்று புருஷார்த்தத்தை. எய்துவர்-அடைபவர், சீரார் இருகலையும் எய்துவார்- (அதற்கு ஸாதனமாயிருக்கும்) சீர்மை மிக்க அறம் பொருள் என்னும் இரு புருஷார்த்தங்களையும் அடைந்தவரேயாவர் என்று இவருக்குக் கருத்து.

**பழமொழி நானூறு**

**தீநாள் திருவுடையாற்கில்லை**-பழமொழி நானூறு 235ஆம் பாட்டு. நம்பிள்ளை திருவாய்மொழி 4-3-4 பேருரையில் ''மாய்த்த லெண்ணி வாய்முலைதந்த'' என்று தொடங்கும் பாசுரத்தில் மாதவா என்ற சொற்றொடருக்கு கீழ்க்கண்டவாறு விரிவுரை அருளிச் செய்து உள்ளார்.

(மாதவா) ''தீநாள் திருவுடையார்க்கில்லை''என்கிறபடியே, இவ்வபாயங்களில் இவன் தப்பிற்று அவள் நெஞ்சோடே கடாக்ஷிக் கையிறே. ஓரபாயமுமில்லையேயாகிலும் பெரியபிராட்டியாரும் அவனுமான சேர்த்திக்கு மங்களாசாசனம் பண்ணுவார் தேட்டமாயிருக் குமிறே. ''வடிவாய்நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு'' என்னாநின்றார்களிறே பரிவர்.

தீநாள் திருவுடையார்க்கு இல் என்றது சிலேடை. செல்வத்தை யுடையவர்க்கு என்பதும் பெரியபிராட்டியாரையுடையார்க்கு என்பதும் பொருள்.

**இதுமன்னும் தீதென் றிசைந்ததூஉம் ஆவார்க்கு**
**அதுமன்னும் நல்லவே யாகும்-மதுமன்னம்**
**வீநாறு கானல் விரிதிரைத் தண்சேர்ப்ப**
**தீநாள் திருவுடையார்க்கு இல்.**

என்பது பழமொழி நானூறு-235ஆம் பாட்டு. நெஞ்சோடே இருந்து என்பதும் சிலேடை.

**''நெடும்பகை தற்செய்யத் தானே கெடும்''.**

திருவாய்மொழி 10-7-4 பேருரையில் ''என்கொல் அம்மான் திருவருள்கள்'' என்று தொடங்கும் பாசுரத்தில் ''நண்ணாவசுரர் நலியவே'' என்னும் சொற்றொடருக்கு ''நெடும்பகை தற்செய்யத் தானே கெடும்'' என்னுமாறு போலே, இவன் இவ்விடத்தினை விடாதே வசிக்க, அசுரக்கூட்டம் முடிந்து போயிற்று. உலகும் உயிரும் தானேயாய், ஞாலத்தூடே நடந்து உழக்கி, தென்கொள் திசைக்குத் திலதமாய் நின்ற திருமாலிருஞ்சோலை நங்கள் குன்றம் நண்ணா அரசர் நலியக் கைவிடான், நன்கு என் உடலம் கைவிடான் அம்மான் திருவருள்கள் என் கொல்? என்று கூட்டுக.

(திருமலையில் நிலை இவர்க்காக ஆகில், நண்ணா அசுரர் நலியுமாறு யாங்ஙனம்? என்ன, அதற்று விடை அருளிச் செய்கிறார். நெடும்பகை என்று தொடங்கி,

**''நெற்செய்யப் புற்றேய்ந்தாற் போல நெடும்பகை**
**தற்செய்யத் தானே கெடும்''** என்பது பழமொழி நானூறு-பாட்டு-83.

(தொடரும்)

**Book Review**

## "Breaking India"

**“SriVaishnava Sri”A.Krishnamachari,**

**The book titled "Breaking India" by Rajiv Malhotra and Aravindan Neelakandan exposes the myth of innocent minorities vis-a-vis violent Hindu majority in India. It also relooks at the Definitions of Majorities and Minorities and what secularism means in India ? - Pages 650, Price-Rs. 695, Courier Charges extra. Copies can be had from Srivaishnavasri, 214, East Uthara St, Srirangam, Trichy-6.**

This book breaks the myth of innocent minorities vis-a-vis aggresive (bordering on violence) of majority Hindus, as potrayed in the international media so often. This book is surely poised to bring out a paradigm shift in our understanding of the majority-minority power equation with the socio-political context of modern Independent India which is poised to become a global power in future. This book is a scientific study and well indited. The authors seek to redefine the definitions of minorities and their power position vis-a-vis the majoritiy Hindus in India. Their conclusions are: Hindus are really minorities in India, Christians and Muslims are powerful globally,while Hindus are not .

Hindus are minorities both at home turf and internationally .This book exposes the anomaly with far reaching consequences for every right thinking Indian. It will shock every minority Indian, as he / she will be exposed for the first time as the real nature of the poltical religions. This will also shock the political establishment to the core as the book blast their established definitions of minorities, by which every third rate politician in the country will swear, keeping always his focus on the vote bank. This book establishes the destabilisation and de nationalisation factors that are work, by well entrenched

forces that are at work within India, and hard wired with their global connections.

This book is a seminal book as it has brought out hitherto unknown factors which threaten the very idea of Bharat that is India. This book addresses itself to the questions with specific reference to the Dravidian and Dalit political identities and the role of christians of the western countries exploiting them.

The present Chief Minister of Tamilnadu M.Karunanidhi would very often talk of the Aryan Dravidan race differences and he would then blame the brahmins whom according to his theory are the descendants of the Aryan race, for all the superstitious behaviour and the social ills of the entire society. Such a thought had been sown in the minds of non-brahmins of South India for the past two centuries. The western thinkers introduced the notion of 'Aryan Christ' which became popular in Europe. The Aryan race theory was moulded by deep rooted European thinkers.

Indian mythological accounts were suitably modified and became a part of the Biblical stories. The Nasal Index based on Max Muller's speculation not only separated the population into Aryan and non-Aryan, it also classified those considered non-Aryan, and further sub classified those considered non-Aryan as distinct from the mainstream Hindu society. In order to divide people and fuel hatred the Dravidian race theory was invented by the Colonial administrators. Robert Caldwell an evangelist proposed a theory that the Dravidians were in India well before the arrival of Aryans and that the Dravidians were cheated by the Brahmins,who were identified as Aryans. It was Caldwell who transformed linguistics into ethnology and a 'conspiracy theory' was floated by him stating that cunning Aryan Brahmins exploited the innocent

Dravidians. Later on the so called Christian Tamil scholars went to the extent of branding Thiruvalluvar as a Christian and that Saiva Siddhantha was born out of Christian thoughts. According to them the Saiva Siddhantha was not part of Hinduism.The story of St. Thomas was concocted to suit the propaganda needs of the Christian evangelists. Dravidian academic activist network is vigorously working overtime in India and outside India especially in Srilanka. The deceased L.T.T.E. leader Velu Prabakaran went to the extent of declaring himself as a descendant of Ravana and he took a vow to eradicate the Aryan Sinhalese who according to him are the descendants of Rama for his action of invading SriLanka.

The media today has turned anti-Hindu. The programmes that are broadcasted aim in nurturing cultural disintegration. The minds of the younger generation are spoiled by showing vulgar and sexy programmes just to make quick money. In the name of secularism appeasement of minorities is going on a large scale. When a bolt in a window of a church is broken due to natural causes a hue and cry will be made by the media as if it is a great act of vandalism by Hindu outfits! At the same time when Hindus are murdered mercilessly by muslim extremists the media will not even report that incident. This is known as Indian brand of 'secularism'. The churches all over India have amassed greater wealth, grabbed thousands of acres of land and are controlling many educational institutions. With the support of political parties especially the rulling congress headed by the fugitive Antonia Maino (Sonia Gandhi) the evangelists are spreading their tentacles throughout India. They have a long range plan to convert Hindustan into Christustan in a few decades from now .

In support of colonialism, the ‘western thinkers’ developed a genre of literature in the West that became known as ‘atrocity literature’. This ‘atrocity literature’ is slowly feeding

India's fragementation. The Dravidian parties in the South made many efforts to call Ramayana as a racist epic. The readers would recall that in the 50's and 60's one actor known as M.R.Radha staged a drama called 'Keemayanam' wherein Ravana was shown as an embodiment of all virtues and Rama was depicted as an embodiment of all vices. Similarly one Pulavar Kuzhanthai of the D.K. movement wrote a book known as 'Ravana Kavyam' which was banned by the then Congress government in the 60's. However when the D.M.K.came to power in the year 1967 this 'Ravana Kavyam' was prescribed as a text book for M.A. Tamil Literature. Many human rights associations in India are receiving money from western countries just to nurture and propagate anti-Hindu feelings in the society.

The authors of the book "Breaking India' have gone into the various problems faced by the Hindu society and have described elaborately the true history and plight of the Hindus. The views of the authors are presented systematically for easy comprehension. The dan ger to the society posed by the Jihad committies which are active at various places has been brought out by the authors which gives many new facts. This book has to be read by all who want India to be saved from the clutches of global Christian evangelism and International muslim terrorism.This book is surely poised to bring out a paradigm shift in our understanding of who the minorities are and who the majorities are in India and who exercise influence over the others? Hindus are the real minorities in India, while Christians and Muslims are global majorities. The Hindus are minorities both at home turf politically and internationally. This book reverses the anomaly at least within India and there begins an era of knowledgeable books on Political Hinduism that will pave way for an enlightened Dharmic future for all mankind.

***

## எனது வாழ்க்கைப் பாதையின் கடந்த காலச் சுவடுகள்

*இதழ் 140இன் தொடர்ச்சி. ஆசிரியர்:ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.*

**மறக்கமுடியாத அந்த ஞாயிற்றுக்கிழமை!**

1963-68 கால கட்டத்தில் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் பணிபுரிந்த அனைவரும் நேரம் கருதாது, கடமை தவறாது பணி யாற்றி வந்தனர். Infrastructure எனப்படும் உள்கட்டமைப்பு வசதிகள் அதிக அளவில் அமைந்திராத காலமது. மண்ணெண் ணெய், டீசல், Furnace oil ஆகியவற்றை இறக்குமதி செய்யப் படும் கப்பல்கள் மூலமாகவோ அல்லது CORIL எனப்படும் Caltex எண்ணெய் சுத்திகரிப்புச் சாலையிலிருந்து குழாய்கள் மூலம் stor-age tankகளில் நிரப்பப்படும். அவ்வாறு நிரப்பப்பட்ட எண்ணெயை 1966ஆம் ஆண்டு வரை பர்மாஷெல் கம்பெனியால் பல ஆண்டுகளுக்கு முன் பொருத்தப்பட்ட டீசல் இன்ஜின்களைக் கொண்டுதான் லாரிகளில் நிரப்பிக் கொள்ள வேண்டும். பல நாட்கள் இந்த இன்ஜின்களை Start செய்வதற்காகப் பொருத்தப்பட்ட சக்தி வாய்ந்த பாட்டரிகள் செயல் இழந்துவிடும். அப்போதெல்லாம் எண்ணெய் நிரப்ப வரும் லாரிகள் ''ரத்ததானம்'' செய்வதுபோல ''பேட்டரி தானம்'' செய்ய வேண்டும். இந்தத் தானம் முறை வைத்து ஒவ்வொரு லாரியிடமிருந்து பெறப்படும். காலையில் Start செய்யப்பட்ட இன்ஜின், லாரிகளில் எண்ணெய் நிரப்பும் பணிமுடியும் வரை ஓடிக் கொண்டேயிருக்கும். அவ்வப் போது அதற்குத் தேவையான டீசல் எவ்விதக் கட்டணமும் செலுத்தப்படாமல் அதில் நிரப்பப்படும். இவ்வாறு உபயோகத்தில் கொள்ளப்படும் டீசலுக்கு own use என்ற தலைப்பில் கணக்கு எழுதி விடுவோம்.

ஞாயிற்றுக்கிழமையானால் அது ஒரு சோதனை நாள். அன்றைய தினம் ஒரு அதிகாரியே அனைத்துப் பணிகளையும் மேற்பார்வையிடவேண்டும். சோதனையாக அன்றைய தினம் 60க்கும் மேற்பட்ட oil wagonsகள் நிரப்பப்படவேண்டும். சுமார் 60 லாரிகள் நிரப்பப்பட வேண்டும். அவற்றிற்கான பில்களில்

கையெழுத்திட வேண்டும், ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு ஒன்றரை கிலோமீட்டர் நடந்தே செல்ல வேண்டும். உணவு உண்பதற்குக்கூட நேரம் கிடைக்காது. குடிநீர் வசதி இருக்காது. உணவு அருந்தியபிறகு மண்ணெண்ணெயில் தான் சில நாட்கள் கைகளை அலம்பிக்கொள்ள நேரிடும்.

ஒரு ஞாயிற்றுக் கிழமை Light Diesel Oil லாரி ஒன்றினை நிரப்பிக் கொண்டிருக்கும் போது எண்ணெய் ஓட்டத்தில் திடீர் அழுத்தம் ஏற்பட்டதால் லாரியின் மேலே பொருத்தப்பட்டிருந்த Hose எனப்படும் ரப்பர்குழாய் அந்த இடத்தினின்று விலகி என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ள முடியாதபடி கீழே நின்றிருந்த என் தலை முதல் கால்வரை Light Diesel Oilஐ வாரி இறைத்தது. எனக்குப் பூச்சாண்டி வேஷம் போடப்பட்டது. ஒரு தொழிலாளி எங்கேயோ சென்று ஒரு சலவை சோப் வாங்கி வந்தார். கையெழுத்துப் போடமுடியாத நிலையில் அனைத்து லாரிகளும் நின்று விட்டன. எங்கேயோ ஒரு மூலையில் ஒரு பீப்பாயில் சேமித்து வைக்கப்பட்டிருந்த மழை நீரில் பலமுறை உடம்பைத் தேய்த்துக் கழுவி எண்ணெயில் ஊறவைக்கப்பட்ட பேன்ட் சட்டையை வெயிலில் காய வைத்து அணிந்துகொண்டு 3 மணிநேர தாமதத்தில் என் பணிகளைத் தொடங்கினேன்.

**ஒரு ‘கறுப்பு ஆட்டை’க் கொன்றோம்.**

அன்று எண்ணெய் ‘குளியல்’ கண்ட எனக்கு அதன் நாற்றம் என் உடம்பைவிட்டுப் போவதற்கு சில நாட்கள் ஆயின. தாங்கமுடியாத கண்எரிச்சலால் அவதிப்பட்டேன். இதுபோன்ற பல ஆபத்துக்களை அன்றாடம் ஒருவர் எதிர் கொள்ளவேண்டும். Hose களில் உள்ளே உள்ள மெல்லிய எஃகுக் கம்பிகள் எண்ணெய் நிரப்பும் போது ஏற்படுகின்ற திடீர் அழுத்தத்தினால் ஒன்று திரண்டு அந்த ரப்பர் குழாயின் உள்ளே பந்து போல் அடைத்துக் கொண்டு நிற்கும். ***(இந்த ரப்பர் Hoseகள் டெண்டர் முறை மூலம் வாங்கப்படுபவை. இவற்றின் தரத்திற்கு காகிதத்தில் மட்டும் உத்தரவாதம் இருக்கும். பொதுத்துறை நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் இந்தத் தரக்குறைவு பற்றி யாரும் கண்டுகொள்வதில்லை/கவலை கொள்வதில்லை.)*** இதன் விளைவாக அந்த ரப்பர் குழாயில் எண்ணெய் ஓட்டம் தடைபடும்.

எண்ணெய் ஓட்டம் தடைபடுவதால் பம்ப்பின் அழுத்தம் அதிகரிக்கும். இதற்கு Back pressure என்று பெயர். ஏன் எண்ணெய், கப்பலுக்குள் செல்லவில்லை என்பதைக் கண்டறி வதற்கு பல மணி நேரங்கள் செலவழியும். கடும் வெய்யிலில் கந்தகத்துகள் மற்றும் நிலக்கரித் துகள்களின் நடுவே நடந்து சென்று ஒவ்வொரு வால்வையும் சோதனை செய்து அதன்பிறகு என்ன ஆயிற்று என்பதைக் கண்டறியவேண்டும்.

இவ்வாறு அடைப்பு ஏற்பட்ட ரப்பர்குழாய்களை எவ்வித தயக்கமுமின்றி நாலு துண்டாக வெட்டி கடலுக்குள் தூக்கி எறிய வேண்டும். இல்லாவிட்டால் இந்தக் ''கருப்புஆடு'' இன்னொருவர் உயிரை வாங்கிவிடும். ஒவ்வொரு வேலையைச் செய்யும் போதும் கவனத்தோடு செயல்பட்டால்தான் ஆபத்துக்களையும், விபத்துக் களையும் தடுக்க இயலும்.

என்னுடைய 34 வருட அனுபவத்தில் நான் எதிர் கொண்ட நடைமுறைச் சிக்கல்கள் அவற்றைக் களைந்த விதம் பற்றி இந்தக் கட்டுரைத் தொடரில் அதிக அளவில் எழுதவிரும்பவில்லை. ஏனெனில் அது வாசகர்களுக்குப் புரிந்து கொள்ள முடியாத குறிப்பு களாக மாறிவிடும். ஆனால் இந்தியன் ஆயில் நிறுவனம் என்போன்ற பழுத்த அனுபவவாதிகளைக் கொண்டு பெரும்பயன் பெறலாம். காரணம் அன்றையதினம் ஒவ்வொரு இன்னல்களுக்கும் நாங்களே தீர்வைக் கண்டுபிடித்து செயல்பட்டோம். பெரும்பாலான மேலதி காரிகள் Caltex, E.S.S.O. , Burma Shell போன்ற அந்நிய ஆதிக் கத்தின் கீழான எண்ணெய்க் கம்பெனிகளில் இருந்து வந்தவர்கள். அவர்களுக்கு எங்களைப் போன்ற பல்துறை அனுபவம் கிடையாது.

**என்னுடன் பணிபுரிந்த தொழிலாளர்களைப் பற்றிய சில நினைவுகள்**

என்னுடன் பணிபுரிந்த தொழிலாளிகளில் S. அப்பாராவ் என்பவன் திறமை படைத்தவன். 3 ஆட்கள் செய்யக்கூடிய வேலையை அவன் ஒருவனே தன் புத்தி கூர்மையால் எளிதாகச் செய்துவிடுவான். கப்பலில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யப்படும்போது எண்ணெயின் ஓட்டத்தை அதாவது ஒரு மணிக்கு 500 கிலோ லிட்டர் என்ற அளவில் குழாய்களில் சென்று கொண்டிருக்கும் போது மிக நேர்த்தியாக ஒரு எண்ணெய் டாங்கி

லிருந்து இன்னொரு எண்ணெய் டாங்கிற்கு Flying Switchover என்ற முறையில் மாற்றி விடுவான். இவ்வாறு செய்வதற்கு சம யோசித புத்தியும், விரைந்து செயல்படும் தன்மையும் தேவைப் படும். இதே போன்று நேரத்தை வீண் செய்யாது பயனுள்ள பணி ஏதேனும் செய்து கொண்டிருப்பார்கள் ஸ்ரீராமுலு, போத்தண்ணா, சிம்மாசலம் போன்றவர்கள்.

### ''தாத்தாளு-Gang''

ஆள்பற்றாக்குறையை சமாளிப்பதற்கு அந்த ஊர் கட்டுப் பாட்டின்படி வெளியிலே கூடாரமிட்டிருக்கும் ''தாத்தாளு'' என்ப வருடைய கட்டுப்பாட்டின்கீழ் உள்ள 60 லேபர்களிடமிருந்து தான் வேலைக்கு பணியாட்களை எடுத்துக் கொள்ள முடியும். வேறு இடத் திலிருந்தோ அல்லது வேறு ஊர்களிலிருந்தோ contract labour எனப்படும் இவர்களைப் பணியில் அமர்த்தமுடியாது. இந்தத் தாத்தாளு என்பவர் ஆந்திராவிற்கே உரிய கச்சத்தோடும் பனியன் cum சட்டையோடும் காணப்படுவார். குட்டையானவர். அதிகாரி களிடம் மரியாதையுடன் பழகுவார். இவ்வாறு அமர்த்தப்படும் வேலையாட்கள் தாங்கள் பெறும் கூலியின் ஒரு பாகத்தை கட்டக் காணிக்கையாக தாத்தாளுவிடம் தந்திட வேண்டும். தாத்தாளு கேங்கில் சேருவதற்கு 'பகடி' எனப்படும் கட்டணம் செலுத்தப் படவேண்டும். Coal jetty எனப்படும் பகுதியில் அனைத்து தற்காலிக வேலையாட்களும் தாத்தாளு கேங்கைச் சேர்ந்தவர் களாகவேயிருப்பார்கள். இதுபோல் துறைமுகத்தின் பல பகுதிகளில் பல 'லேபர்கேங்குகள்' காணப்படும்.

### மற்றைய அலுவலக நண்பர்களும், அவர்கள் மேற்கொண்டு வந்த பணிகளும்

அலுவலகத்தில் என்னுடன் பணிபுரிந்த திரு. மல்லேச்வர ராவ் ரயில்வேயில் கார்டாகப் பணிபுரிந்தவர். இவர்தான் Customs and Excise துறையுடன் தொடர்பு கொண்டு அவ்வப்போது அதற்குரிய கையெழுத்திடப்பட்ட ஆவணங்களைப் பெற்று வருவார். வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் பொருளுக்கு வரிகட்டியபிறகே உபயோகத்தில் கொள்ளமுடியும். இதுபற்றி முன்னமேயே குறிப்பிட்டுள்ளேன். Yellow bill of entry என்ற

ஆவணத்தின் மூலம் இறக்குமதி செய்வதற்கு அனுமதி பெற வேண்டும். எண்ணெய்ப் பொருள்கள் Storage Tankஐ வந்தடைந்த பிறகு இவ்வளவு கிலோ லிட்டர் எண்ணெய் வந்து சேர்ந்துள்ளது என்பதற்கு Outturn எனப்படும் வரவுச்சீட்டு தயாரிக்கப்பட வேண்டும். அதன்பிறகு அவ்வப்போது உபயோகத்தில் கொள் வதற்காக முன்கூட்டியே 3000 கி.லிட்டர் அல்லது 2000 கி.லிட்டருக்கு Customs அலுவலகத்தில் Green Bill of entry எனப்படும் ஆவணத்தைத் தயார் செய்து அதற்குரிய பல லட்சம் ரூபாய் வரியைச் செலுத்தியபிறகே விற்பனை செய்ய இயலும்.

1963-68 கால கட்டத்தில் இத்தகைய பெருந்தொகையை மும்பையிலிருந்து தலைமை அலுவலகம் விசாகப்பட்டினத்தி லுள்ள S.B.I. அலுவலகத்திற்கு அனுப்பும். அதன்பிறகு அந்தப் பணத்தை customs accountஇல் செலுத்த வேண்டும். இந்தச் செயல்களை எல்லாம் ஒழுங்கு படுத்துவது என்பது அத்துணை எளிதல்ல. பொறுமை, அதிகாரிகளிடமும், பிற அலுவலக ஊழியர் களிடமும் பணிந்து போகும் தன்மை, வேலை நேரம் முடிந்தபிறகும் வங்கி அதிகாரிகளிடம் காசோ லைக்குப் பணம் பெறுதல் போன்ற செயல்களைச் செய்யும் நபர் பணிவுடன் செயல்படுபவராக இருக்கவேண்டும். இவையனைத்தும் மல்லேச்வர ராவிடம் இருந்ததால் பல இன்னல்களைக் கடந்து எவ்விதத் தொய்வுமின்றி செயல்பட்டு வந்தோம். ஆனால் மல்லேச்வர ராவ் அடுத்த சில ஆண்டுகளில் அகால மரணம் அடைந்துவிட்டார்.

அச்சுதராம் என்பவருக்கு புனைபெயர் ‘‘பொட்டிவாடு’’ என்பதாகும். அதற்குத் தமிழில் ‘குள்ளன்’ என்று பொருளாகும். 1 மணி நேரத்திற்கு 6 சிகரெட்டுகளை ஊதித்தள்ளுபவன். ***(ஆந்திர பிராமணர்களிடையே புகைபிடிப்பது என்பது ஒரு இயல்பான நிகழ்ச்சி. அவர்கள் இதைத் தவறான செயலாகக் கொள்வதில்லை.)*** Supply and Distribution எனப்படும் மிக கடினமான பொறுப்புள்ள வேலையை மேற்கொண்டு வந்தவன் இவன். யாரிடமும் அளவிற்கு மீறி பேசமாட்டான். அனைத்து Installation Managerகளாலும் விரும்பப்படுபவன். அவனுடைய கையெழுத்து பெயருக்கேற்றார் போல அச்சுக்கோர்த்தது போல் இருக்கும். 1967ஆம் ஆண்டு இவன் ஒரு மாத விடுப்பில் சென்றிருந்தபோது இவனுடைய இந்தப்

பணியை வெற்றிகரமாக நான் செய்து முடித்தேன். S.I. ஷெரீப் என்பான் இவனுடைய உதவி யாளன். T.S. Ramaswamy பர்மா ஷெல்லில் பணியாற்றியவர். Accountant ஆகப் பணிபுரிந்து வந்தார். P.C.K. சாஸ்திரிக்கு 'ஸ்டோர்ஸ் சாஸ்திரி' என்று பெயர். கடப்பா சாஸ்திரி எனப்படும் K.V. சாஸ்திரி Oil accounting வேலையைச் செய்து வந்தார். K.ராமமூர்த்தி customs and excise வேலைகளைத் திறம் பட செய்து வந்தார். G.V.S. அவதானி காசாளர். நான் Gauger பதவியில் அமர்வதற்கு முன்பு அந்தப் பதவியில் இருந்தவர் S.மோசஸ். இவர் ஒவ்வொரு முறையும் பதவி உயர்வு பெறும்போது நானும் பதவி உயர்வு பெற்றுவந்தேன். மிகச் சிறந்த உழைப்பாளி. விசாகப் பட்டினத்திலேயே பிறந்து வளர்ந்து புகழ்பெற்ற A.V.N. கல்லூரியில் demonstrator ஆகப் பணிபுரிந்து வந்தவர். S.H. Krishna Rao என்பவர் மற்றொரு சூப்பர்வைசர். 1966ஆம்ஆண்டு ஜூன் மாதம் நான் சூப்பர்வைசராகப் பதவி உயர்வு பெற்றேன்.

## 1966-67ஆம் ஆண்டுகளில் இந்திராகாந்தி எதிர் கொண்ட இன்னல்கள்

லால்பகதூர் சாஸ்திரியின் அகால மரணத்திற்குப் பிறகு இந்தியப் பிரதமராகப் பதவி வகித்தவர் திருமதி இந்திராகாந்தி. தமது 48ஆவது வயதில் அவர் பாரதப் பிரதமரானார். 1984ஆம்ஆண்டு அக்டோபர் மாதம் அவருடைய பாதுகாப்புப்பணியில் ஈடுபட் டிருந்த சீக்கிய மதத்தைச் சார்ந்த காவலர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டவர். இவருடைய ஆட்சி காலத்தில் நாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகள் அரங்கேறி உள்ளன. நாட்டில் நிலவிய பஞ்சத்தின் விளைவாக அமெரிக்காவில் இருந்து கோதுமை P.L. (Public Law) 480 என்னும் திட்டத்தின்கீழ் இறக்குமதி செய்யப் பட்டது. மேற்கு வங்காளத்தில் நிலவியிருந்த உணவுப் பஞ்சத்தின் காரணமாக பெரும் கலகம் மூண்டது. அந்தக் கலகத்தை அடக்கு வதற்கு ராணுவத்தின் உதவி நாடப்பட்டது. உணவுத் தானியங் களை அதிக அளவில் உற்பத்தி செய்து வந்த மாநிலங்கள் அவற்றை தேவைப்படும் மற்றைய மாநிலங்களுக்கு விற்க மறுத்தன.

வடகிழக்குப் பகுதியில் நாகா இனத்து மக்களும், மிசோராம்

பகுதி மக்களும் தனிநாடு கோரி கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். தமிழ்நாட்டில் ஹிந்தி எதிர்ப்பு அரசியல் தீயாக எங்கும் பரவி அதில் குளிர் காய்ந்து வந்தனர் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். சண்டிகர் நகரை தலைநகராகக் கொண்ட பஞ்சாப் மாநிலம் உருவாக்கப்பட வேண்டும் என்று தீவிர கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர் பஞ்சாப் மொழிபேசும் மக்கள். மக்களவையில் பேசா மடந்தையாய் பணியாற்றி வந்த இந்திராகாந்தியை ராம்மனோகர் லோகியா என்னும் எதிர்க்கட்சித்தலைவர் "Goongi gudia" (Dumb doll) என்று வர்ணித்து வந்தார்.

## Indo American Educational foundation

இந்த இக்கட்டான சூழ்நிலையில் இந்திராகாந்தியின் அமெரிக்க விஜயம் நடைபெற்றது. பலருடைய எதிர்ப்புகளையும் மீறி அமெரிக்கா உணவுதானியங்களை இந்தியாவிற்கு அளித்ததன் மூலம் பெறப்பட்ட கோடிக்கணக்கான இந்திய ரூபாய்களைக் கொண்டு ***(இந்தியப் பொருளாதாரம் மிகச் சீர்கேடான நிலையில் அந்தக் காலகட்டத்தில் அமைந்திருந்தது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள் களுக்கு டாலர்களைக் கொண்டு பணம் செலுத்துவதற்கு இந்தியப் பொருளாதாரச் சூழல் இடம் கொடுக்க வில்லை.)*** வேண்டிய அளவு உணவு தானிங்களைக் கொடுத்து உதவிய அமெரிக்கா, அதன் வழிபெறப்பட்ட இந்திய ரூபாய் களைக் கொண்டு இந்திய நாட்டிலேயே Indo American Educational foundation என்றவொரு அமைப்பை உருவாக்குவதற்கு இரு நாடுகளும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து அறிஞர்களும் உயர் கல்வித்துறையைச் சார்ந்தோர்களும் போராட்டங்களை நிகழ்த்தினர். அதன் விளைவாக இந்த ஒப்பந்தத்தின் அமலாக்கம் கைவிடப் பட்டது. வியட்நாமில் அமெரிக்காவின் செயலை ஆதரித்துப்பேசிய இந்திராகாந்திக்கு உலகெங்கும் எதிர்ப்பலைகள் உருவாகின.

## I.M.F.இன் வழிகாட்டுதல்படி இந்தியப் பொருளாதாரக் கொள்கைகள் சீரமைக்கப்பட்டன.

இந்தியப் பொருளாதாரக்கொள்கை இன்டர்நேஷனல்

மானிடரி பன்ட் எனப்படும் I.M.F விதித்த விதிகளுக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டது. இதில் வேடிக்கையென்னவென்றால் லால்பகதூர் சாஸ்திரி பிரதமராய்ப் பணியாற்றிய போது I.M.F.இன் கோட்பாடுகளுக்கு ஏற்ப இந்தியப் பொருளாதாரக் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று எண்ணம் கொண்டார் அப்போது அதை எதிர்த்தவர் இந்த இந்திராகாந்தி அம்மையார்தான்.

## Indian Rupee was devalued

5.6.1966ஆம் நாள் இந்தியப் பொருளாதாரத்தை மேலும் சிதைவுறச் செய்யும் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி Johnsonஉடன் இந்திராகாந்தி செய்து கொண்ட ரகசிய ஒப்பந்தத்தின் விளைவாக இந்திய ரூபாய் நாணயத்தின் மதிப்பு 35 சதவிகிதம் குறைக்கப்பட்டது. நாடெங்கும் இந்தச் செயலுக்குப் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. பெருந் தலைவர் காமராசர் இந்தச் செயலுக்கு கண்டனம் தெரிவித்தோடு மட்டுமல்லாமல் அமெரிக்க ஏகாதிபத்யத்திற்கு இந்தியா தலை வணங்கி தன் தன்மானத்தை அடகு வைத்துவிட்டதற்கு ஒப்பாகும் என்று இந்தச் செயலைக் குறை கூறினார். ''ஒரு பெரிய மனிதரின் பெண்ணான இந்திராகாந்தியின் அற்பச்செயல் இது'' என்று அவர் வர்ணித்தார். பாரதப் பிரதமராக இந்திராகாந்தி பதவி ஏற்பதற்கு தாம் செய்த உதவி தவறு என்று மனம் வருந்தினார். திரு. C. சுப்ரமண்யம் மற்றும் திரு. அசோக்மேத்தா ஆகியோர் இந்திராகாந்தியால் புறக்கணிக்கப்பட்டனர்.

### குல்சாரிலால் நந்தா அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டார்.

பசுவதைச் சட்டம் கொண்டுவரக்கோரி சாதுக்கள் நிகழ்த்திய போராட்டத்தை சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தேன். இந்தப் போராட்டத்தின் விளைவாக டெல்லி முழுவதும் கலவரம் வெடித்தது. இதைக் காரணம்காட்டி உள்துறை மந்திரியான குல்சாரிலால் நந்தா பதவி நீக்கம் செய்யப்பட்டார். இந்திய ரூபாய் நாணயத்தின் மதிப்பு குறைக்கப்பட்டதற்கு காரணமாய் இருந்த நிதி அமைச்சர் திரு. சச்சின் சௌத்ரியும் பதவியை விட்டு விலக நேரிட்டது. இந்த நிலையில்தான் 1967ஆம்ஆண்டு பொதுத் தேர் தலில் காங்கிரஸ் பல தொகுதிகளில் தோல்வியைத் தழுவியது. 520 அங்கத்தினர்கள் கொண்ட மக்களவையில் காங்கிரஸ் கட்சி 283

இடங்களையே பெற முடிந்தது. ஆனால் இந்தத் தேர்தலில் S.K. பட்டீல், அட்டுல்ய கோஷ் போன்றோர் தோல்வியைத் தழுவியது இந்திராகாந்திக்கு மகிழ்ச்சியைத் தந்தது. 1967ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு அமைந்த மந்திரி சபையில் திரு. மொரார்ஜி தேசாய் துணைப் பிரதமராகப் பதவியேற்றார்.

**ஒரு பங்குனி உத்தர நாளில் ருக்மிணியுடன் விவாஹம் நடைபெற்றது**

1967ஆம்ஆண்டு மார்ச் 27ஆம் நாள் திருவிண்ணகரப்பன் ஸந்நிதியில் (பங்குனி உத்தர நாளன்று) எனக்கும்,சௌ. ருக்மிணிக்கும் விவாஹம் நடைபெற்றது. எங்கள் குடும்பத்திற்குக் குல தெய்வமாய் விளங்குபவர் ஒப்பார் இல்லதோர் அப்பனான திருவிண்ணகரப்பன். திருமணச் செலவு அனைத்தும் பிள்ளை வீட்டைச் சார்ந்தது. திருவிண்ணகரப்பன் திருக்கோயிலுக்கு அண்மையில் அமைந்துள்ள வில்லியவரம்பல் கிராமத்தில் கிராமக் கணக்குப் பிள்ளையாக வேலை பார்த்து வந்தார் என்னுடைய பெரியம்மா குமாரரான ஸ்ரீனிவாஸன். இவரைப் பற்றி நான் முன்னமேயே குறிப்பிட்டுள்ளேன். கல்யாணத்திற்கான மொத்த செலவு ஆயிரம் ரூபாய்தான். இதற்காக நான் வெளியில் கடன் வாங்கியது 450ரூபாய். இதை 9 தவணையில் மாதம் 50ரூபாய் வீதமாக செலுத்தி வந்தேன். அந்தக்கால கட்டத்தில் பெரிய பெரிய திருமண மண்டபங்கள் கிடையாது.

திருவிண்ணகரப்பன் ஸந்நிதித் தெருவில் அமைந்திருந்த ஒரு வீட்டை 2 நாள் வாடகைக்கு எடுத்துக் கொண்டோம். வாடகை ரூபாய் 50/- அங்கேயே சாப்பாட் டிற்கான வசதிகளையும் செய்துகொள்ள வேண்டும். திருவிண்ண கரைச் சுற்றி அமைந்துள்ள பல கிராமங்களில் தாருடன் கூடிய ஒரு வாழை மரம் அந்தக்கால கட்டத்தில் ரூபாய் மூன்றிற்குக் கிடைக்கும். கும்பகோணம் காய்கறிச்சந்தையில் மிக மலிவான விலையில் காய்கனிகள் விற்கப்படும். ஒரு தார் வாழையின் விலை 10ரூபாய்தான். அரிசி படி ஒன்றிற்கு 2ரூபாய். எண்ணெய் வகைகள் ஒருகிலோவிற்கு 2 ரூபாய். தேங்காய் எண்ணெய் மட்டும் 1 கிலோ 4 ரூபாய். தளிகை செய்வதற்கு உறவினர்களில் யாரேனும் குறைந்த சம்பளத்தில் வேலை செய்ய முன்வருவார்கள். மாப்பிள்ளை

அழைப்பு கிடையாது. திருவிண்ணகர் ஸந்நிதியில் திருவுண்ணாழி பிரதக்ஷிணத்தில் கல்யாண சடங்குகள் நடைபெறும். இப்போது உள்ளது போல் விரிவு படுத்தப்பட்ட வெளி மண்டபங்கள் கிடையாது. சனிக்கிழமை தவிர கோயிலில் கூட்டம் அதிக அளவில் காணப்படாது. ஒப்பிலியப்பன் ஸந்நிதித் தெருவில் வாசம் கொண்டிருந்த கீர்த்தி மூர்த்தி ஸ்ரீ.உ.வே. நவநீதம் ஸ்ரீராம தேசிகாசார்யர் ஸ்வாமி திருக்கோயிலுக்கு எழுந்தருளி எங்களை ஆசீர்வதித்தார். ருக்மிணிக்கு S.S.L.C. தேர்வு நடந்து கொண்டிருந்த போது தான் கணிதத்தேர்விற்கு முதல் நாள் விவாஹம் நடைபெற்றது. அப்போது எனக்கு வயது 28. ருக்மிணிக்கு வயது 17. 11 வயது வித்யாசத்தில் இந்தத் திருமணம் நடைபெற்றது. (ஆனால் இன்று இதை யாரும் ஏற்றுக் கொள்வதில்லை.) திருவாரூரில் புகழ்பெற்று விளங்கிய பட்டு சாஸ்திரிகள் என்பார் தான் பாலூரார் குடும் பங்களில் நடைபெறும் அனைத்து மங்கல, அமங்கல காரியங்களுக்கு ப்ருஹஸ்பதியாக இருந்து வைதிக காரியங்களைச் செவ்வனே நடத்திக் கொடுப்பார். இவர் ஸ்ரீவைஷ்ணவர்கள் இல்லங்களில் உணவு உட்கொள்ளமாட்டார். சங்கரமடம் போன்ற பொது இடங்களில் மட்டும்தான் உணவு உட்கொள்வார். இவர் உணவு உட்கொள்வதற்காக வேண்டிய அனைத்து மளிகைப் பொருள், காய்கறிகளையும் அவர் எங்கே தங்கியிருக்கிறாரோ அந்த இடத்தில் சேர்ப்பித்துவிடுவார்கள். பாலூரார் குடும்பங்களில் உள்ள அனைத்துப் பெண்களையும் ஆண்களையும் பெயர் சொல்லியே அழைத்திடுவார் இவர்.

**விசாகப்பட்டினத்தில் தனிக்குடித்தனம்**

விவாஹம் முடிந்த அடுத்த நாள் மன்னார்குடிக்குத் திரும்பி னோம். நான் உடனடியாக விசாகப்பட்டினத்திற்கு திரும்பி வந்து விட்டேன். 4 மாதங்கள் கழித்துதான் தனிக்குடித்தனம் வைக்கப் பட்டது. திருவாரூரைத் தாண்டி ரயிலில் பயணம் மேற்கொண்டிராத ருக்மிணி மொழி தெரியாத, 1000கி.மீட்டருக்கு அப்பால் உள்ள விசாகப்பட்டினத்திற்கு அழைத்து வரப்பட்டாள்.

**சிவசேனா கட்சியும், அவர்கள் தென்னிந்தியர்களுக்கு இழைத்த கொடுமைகளும்.**

பஞ்சாபில் எழுந்த கிளர்ச்சி போல மஹாராஷ்டிரத்தில் பால்

தாக்கரேயின் சிவசேனா 1967ஆம்ஆண்டு எழுச்சி பெற்றது. 'சம்யுக்த மகாராஷ்டிர சமிதி' என்ற ஓர் அமைப்பின் மறு வடிவமே சிவசேனா. புகழ்பெற்ற கார்ட்டூனிஸ்ட் ஆக விளங்கிய பால்தாக்கரே சிவசேனா கட்சியினைத் தொடங்கித் தென்னிந்தியர்கள் மும்பை மாநகரத்தில் இருந்து விரட்டப்படவேண்டும் என்றும், மஹாராஷ்டிரர்களுக்கே மும்பை மாநகர் சொந்தம் என்றும், மராத்தி மொழியே அனைத்து பள்ளிகளிலும் போதிக்கப்படவேண்டும் என்றும் கிளர்ச்சி செய்து வந்தனர். வேட்டி கட்டும் தென்னிந்தியர்களை ஒழித்துக் கட்டு வோம் என்பதே அவர்களுடைய முழக்கமாயிருந்தது.

தமிழர் களுக்கும் கன்னடியர்களுக்கும் சொந்தமான உணவு விடுதிகள் தாக்கப்பட்டன. மும்பையைச் சுற்றியிருந்த பஞ்சாலைகளில் மேலாதிக்கம் செலுத்தி வந்த கம்யூனிஸ்டுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. 'இந்தியாவின் வணிகத்தலைநகரம்' என்று அழைக்கப்படும் மும்பை மாநகர் சிவசேனையின் இத்தகைய செயல்களால் தத்தளித்துக் கொண்டிருந்தது. ஆயினும் படித்து வேலையில்லாத மஹாராஷ்டிர பட்டதாரிகளின் ஆதரவு கொண்டு சிவசேனா 1968ஆம்ஆண்டு நடைபெற்ற மும்பை முனிசிபல் தேர்தலில் 42 இடங்களைக் கைப்பற்றியது. நாடெங்கும் முஸ்லீம்களுக்கும் இந்துக்களுக்கும் 220 இடங்களில் மோதல்கள் நிகழ்ந்தன. அற்பமான காரணங்களை முன்வைத்து இந்த மோதல்கள் நிகழ்ந்தன. மசூதிக்கு முன்பு நாதஸ்வரம் வாசிக்கப் பட்டது என்று முகம்மதியர்களும், இந்துக் கோயில்களுக்கு அண்மையில் பசுவதை செய்யப்பட்டது என்றும் ஒருவர் மேல் ஒருவர் குற்றம் சுமற்றிக்கொண்டு இருதரப்பினரும் மதக்கல வரங்களில் ஈடுபட்டிருந்தனர். முகம்மதியர்களை நோக்கி, ''பாகிஸ்தானுக்குக் குடி பெயர்ந்து செல்லுங்கள், இல்லையேல் உங்களைப் புதைகுழியில் சமாதி வைத்திடுவோம்'' என்ற கோஷம் இந்தக் கலவரங்களின் போது நாடெங்கும் ஒலித்தது.

**இந்தியன் ஆயில் மேற்கொண்ட முதல் பெட்ரோலியப் பொருள் ஏற்றுமதி**

விசாகப்பட்டினம் தாபா கார்டன் பகுதியில் நாங்கள் குடி யிருந்தோம். காலையில் 8 மணிக்கு அலுவலகத்தில் இருக்க

வேண்டும். அதற்கு இல்லத்தைவிட்டு காலை 7மணியளவில் கிளம்பினால்தான் சென்றடையமுடியும். மதிய உணவு கேரியரில் இதற்கென அமர்த்தப்பட்ட ஒரு பெண்மணி மூலம் அலுவலகத்தை வந்து அடையும். வீடு திரும்புவதற்கு இரவு 7 மணியாகிவிடும். அந்த ஊரில் அமைந்துள்ள மிகப்பெரிய கேளிக்கை சாதனம் திரை அரங்குகள்தான். சில சமயம் மொழி மாற்றம் செய்யப்பட்ட தமிழ்ப் படங்களைக் கண்டுகளிக்கலாம். ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிக்குத் திரையிடப்படும் தமிழ்த்திரைப்படத்தைக் காண அனைத்துத் தமிழர்களும் ஒன்று கூடுவர்.

விசாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து இலங்கை பெட் ரோலியம் கார்ப்பரேஷனுக்கு 1968ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16,000 டன் பெட்ரோல் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த ஏற்றுமதி தான் இந்தியன் ஆயில் நிறுவனம் மேற்கொண்ட முதல் ஏற்று மதியாகும். Product Exchange எனப்படும் ஒப்பந்தத்தின்படி ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு சாலையிலிருந்து வேறொரு எண்ணெய்க் கம்பெனி தனக்குத் தேவையான எண்ணெய் வகைகளைப் பெற்றுக் கொண்டு, வாங்கும் எண்ணெய்க்கம்பெனிக்குச் சொந்தமான இடத்திலிருந்து அந்த எண்ணைய்க் கம்பெனிக்கு தேவைப்பட்ட எண்ணெயைத் திருப்பிக் கொடுக்கும். இந்தக் கொடுக்கல் வாங்கல் ஆண்டு முழுவதும் நடைபெறும். நிதியாண்டின் இறுதியில் அதாவது மார்ச் மாதத்தின் இறுதியில் நிலுவையில் திருப்பித் தர வேண்டிய எண்ணெய்க்குப் பணம் செலுத்தி அந்த கணக்கு முடிவிற்கு கொண்டு வரப்படும்.

இதன் அடிப்படையில் Gunnar Brovig என்னும் கப்பலில் 16,000 டன் பெட்ரோல் CORILலிருந்து நிரப்பப்பட்டது. இந்தியன் ஆயில் நிறுவனத்தில் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஏற்றுமதி தொடர்பான செயல்பாடுகளை யாரும் தெளிவாக எங்களுக்குத் தெரிவிக்கவில்லை. பல அலுவலகங்களை நாடி நானும் என் மேலதிகாரியான திரு. ஸ்ரீனிவாசனும் அறிந்து கொண்டு இந்தக் கப்பலில் எண்ணெய் நிரப்பும் வேலையை மேற் கொண்டோம். இந்தக் கப்பலில் பெட்ரோல் நிரப்புவதற்கு 3 நாட்கள் ஆகின.

(தொடரும்)

# ஹிந்துக்களின் வாக்கு வங்கி-ஏன் எதற்கு எவ்வாறு உருவாக்குவது?

## அரசியலாகும் மத விழாக்கள்!

(தினமணி, 2011, ஜனவரி 11 தேதியிட்ட நாளிதழில் வெளிவந்த கட்டுரை. )

**கட்டுரையாசிரியர்: திரு. அர்ஜுன் சம்பத், கோயம்புத்தூர்.**

தமிழகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவப் பெருமக்கள் சமீபத்தில் கிறிஸ்துமஸ் விழாவை மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் கொண்டாடினர். அருமனை வட்டார கிறிஸ்தவ இயக்கம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்ற அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா, அந்த விழா மேடையி லேயே கிறிஸ்தவ இயக்கங்கள் முன்வைத்த மூன்று கோரிக் கைகளையும் ஏற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளார். அதேபோல சென்னையில் ஆளும் கட்சியான தி.மு.க. சார்பு இயக்கம் ஒன்று ஏற்பாடு செய்த கிறிஸ்துமஸ் விழாவில் தி.மு.க. தலைவரும் தமிழக முதல்வருமான மு.கருணாநிதி, துணை முதல்வர் ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்றனர். இவர்கள் விழா மேடையிலேயே, கிறிஸ்தவ இயக்கங்கள் முன்வைத்த அனைத்துக் கோரிக்கை களையும் ஏற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளனர். மேற்படி இரண்டு விழாக்களிலுமே கிறிஸ்தவ மக்கள் முன்வைத்த முக்கியமான கோரிக்கைகள் மூன்றாகும்.

பட்டியல் ஜாதியினரான அரிஜனங்களுக்கான, அதாவது இந்து தலித்துகளுக்கான இடஒதுக்கீடு சலுகைகள் தலித் கிறிஸ்த வர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. இரண்டாவதாக, ஹஜ் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர் களுக்கு வழங்கப்படும் அனைத்து விதமான உதவிகள், சலுகைகள் ஆகியவை ஜெருசலேம், பெத்லேகம் சுற்றுலா செல்லும் தமிழக கிறிஸ்தவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். மூன்றாவதாக பட்டா நிலங்களில் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலம் (சர்ச்) கட்டிக்கொள்ள யாரும் தடை ஏற்படுத்தக் கூடாது

என்பதாகும். இந்த மூன்று கோரிக்கைகளையும் தமிழகத்தின் பிரதான மான இரண்டு கட்சிகளும் ஏற்றுக்கொள்வதாக அறிவித்த தோடு கிறிஸ்துமஸ் விழாவின் பெருமைகள் மற்றும் கிறிஸ்தவ மதத்தின் பெருமைகள், கிறிஸ்தவ இயக்கங்களுடன் தங்களுக்கான நெருக்கம் ஆகியவை குறித்தும் சிலாகித்துப் பேசியுள்ளார்கள். யார் கிறிஸ்தவ மக்களுக்கு அதிகமான சலுகைகளை அறிவித்துள்ளனர் என்பதிலேயே இருவரும் கடுமையாகப் போட்டியிட்டுள்ளனர். இதேபோல, அனைத்து அரசியல் கட்சிகளும் கிறிஸ்துமஸ் விழாவை நேரடியாகக் கொண்டாடியுள்ளதோடு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி யுள்ளனர். கிறிஸ்துமஸ் விழாவில், கிறிஸ்தவ மத இயக்கங்களால் முன்வைக்கப் பட்டு தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கோரிக்கைகள் அனைத்துமே பெரும்பான்மை இந்து தமிழ் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளன.

இந்து மதத்தில் மட்டுமே தீண்டாமைக் கொடுமையும், ஜாதி ஏற்றத்தாழ்வுகளும் இருக்கிறது என்கிற காரணத்தால் மட்டுமே இந்து தலித் மக்களுக்குப் பட்டியல் ஜாதியினர் என்கிற அடிப்படையில் இடஒதுக்கீடு சலுகைகளை நமது அரசியல் சாசன சிற்பிகள் வழங்கினர். இந்திய அரசியல் சாசனத்தை உருவாக்கியதில் முக்கியப் பங்கு வகித்த இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் அம்பேத்கர், இந்து மதம் மற்றும் இந்து மதம் சார்ந்த சீக்கிய, பௌத்த, ஜைன மதங்களுக்கு உள்பட்ட பட்டியல் ஜாதியினருக்கு மட்டுமே இட ஒதுக்கீடு சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்றும், தலித் ஒருவர் இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களுக்குச் சென்றுவிட்டால் அவர் பட்டியல் ஜாதியினருக்கான இடஒதுக்கீடு சலுகை களை அனுபவிக்க முடியாது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஏனென்றால், இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ மதங்கள் தங்கள் மதக் கோட்பாடுகளில் ஜாதி மற்றும் தீண்டாமை ஏற்றத் தாழ்வுகளுக்கு இடமில்லை என்று பிரகடனம் செய்து மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இந்து மதத்தில் தீண்டாமைக் கொடுமைகள், ஜாதி ஏற்றத்தாழ்வுகள் உள்ள காரணத்தாலேயே நாங்கள் இந்து மதத்தை விட்டு வெளியேறிச் செல்கிறோம் என மதம் மாறுபவர்களும் சொல் கின்றனர். இந்நிலையில், ஒருவர் மதம் மாறி விட்டால் அவனது ஜாதி அடையாளம் மறைகிறது. மதம் மாறிச் செல்வதனால் சில சலுகை களையும், பலன்களையும் பெறுகின்றனர். ஆனால், ஆண்டாண்டு

காலமாக மதம் மாறிச் செல்லாமல் இந்து மதத்திலேயே இருந்து போராடிக் கொண்டிருக்கும் தலித்துகளுக்கென்று உருவாக்கப்பட்ட இடஒதுக்கீடு சலுகைகளை மதம் மாறிகளுக்குக் கொடுத்தால் உண்மையான தலித்துகள் தங்களுக் கான வாய்ப்புகளை இழந்து நிற்பார்கள் என்பதே நிதர்சனம்.

மதம் மாறிச் சென்று கல்வி, வேலைவாய்ப்புகளில் முன் னேற்றம் கண்டவர்களோடு இன்றும் இந்து மதத்திலேயே நீடித்து இருக்கும் தலித்துகளால் போட்டிபோட முடியாது. இந்தக் கோரிக்கை மூலம் இந்து தலித்துகளின் சலுகைகளை அபகரிக்க மதம் மாறிகளுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கும் வழியாகிறது. இது இந்து தலித் மக்களுக்குச் செய்யும் துரோகமாகும் என்பதால் இந்திய அரசியல் சாசனத்துக்கு விரோதமானதாகும். எனவேதான், உச்ச நீதிமன்றம் பல நேரங்களில் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. இது அரசியல் சட்டத்துக்குப் புறம்பானது என உச்ச நீதிமன்றம் தெளிவுப்படுத்தி யுள்ளது.

இதை மாற்றி அமைக்கத்தான் முதல்வர் கருணாநிதி தெருவில் இறங்கிப் போராடுவதாக அறிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா இதற்காக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவித்துள்ளார். இதிலிருந்து இரண்டு அரசியல் கட்சிகளுமே இந்து தலித்துகளுக்குத் துரோகம் செய்வதற்குப் போட்டி போடுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. கிறிஸ்தவ மக்களின் ஓட்டுகளைப் பெறவேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட வாக்குறுதி களைத் துணிந்து வெளிப்படுத்து கின்றனர். கிறிஸ்தவ மதத் தலைவர்கள் கிறிஸ்தவ மதத்திலும் ஜாதிக் கொடுமைகள், தீண்டா மைகள் உண்டு என்பதை ஒப்புக் கொண்டு இந்தக் கோரிக்கையை முன்வைத்து அரசியல் கட்சி களுக்கு நிர்ப்பந்தங்களை ஏற்படுத்து கின்றனர். அனைவரும் கடவுளின் குழந்தைகள், ஏற்றத்தாழ்வுகள் கிடையாது என்று போதித்த ஏசுபிரான் பிறந்த நாளான, கிறிஸ்துமஸ் விழாவிலேயே ஏசுவின் கொள்கைகளை இன்னொருமுறை சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.

இரண்டாவது, கோரிக்கையான இஸ்லாமியர்கள் மேற்கொள்ளும் ஹஜ் யாத்திரைக்கு வழங்கப்படும் சலுகைகளும், உதவிகளும் தமிழகத்தில் இருந்து ஜெருசலேம் செல்கிற கிறிஸ்தவ மக்களுக்கு

வழங்க வேண்டும் என்பதை முன் வைத்துள்ளனர். இதையும் அரசியல் கட்சிகள் ஏற்றுக் கொண்டுள்ளன. ஹஜ் யாத்திரை என்பது இஸ்லாமியர்களுக்கென அறிவிக்கப்பட்ட ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகும். ஹஜ் பயணத்தைப் புனிதப் பயணமாக உலகெங்கும் இருக்கக்கூடிய இஸ்லாமியர்கள் மேற்கொள்கிறார்கள். ஆனால், ஜெருசலேம், பெத்லஹேம் ஆகியவற்றுக்கு சுற்றுலா செல்வது கிறிஸ்தவர்களின் புனிதக் கடமைகளில் ஒன்றானது அல்ல. ஒரு சுற்றுலா செல்வதைப் போலத்தான் ஜெருசலேம், பெத்லஹேம் ஆகிய பகுதிகளுக்கு கிறிஸ்தவர்கள் சென்று வருகிறார்கள். ஆனாலும்கூட, கிறிஸ்தவ இயக்கங்கள் இப்படியொரு கோரிக் கையை முன்வைத்து அதையும் அரசியல் கட்சிகள் ஏற்றுக் கொண்டுள்ளன என்பது நடுநிலையாளர்களுக்கு வேதனையளிக்கிறது.

ஏற்கெனவே, கிறிஸ்தவ மதம் சார்ந்த சாமுவேல் ராஜசேகர ரெட்டி ஆந்திர முதல்வராக பதவி வகித்தபோது ஜெருசலேம், பெத்லேகம் செல்லும் ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கு 25 ஆயிரம் நிதியுதவி செய்துள்ளார். காசி யாத்திரை, கயிலாய யாத்திரை, ஜோதிர் லிங்க யாத்திரை, 108 திவ்யதேச யாத்திரை ஆகிய புனித யாத்திரைகளை மதக் கடமையாக மேற்கொள்ளும் இந்துக்களுக்கும் நிதி உதவி செய்ய வேண்டும் என்கிற கோரிக்கையை இந்து இயக்கங்கள் பலமுறை முன்வைத்துள்ளன. ஹஜ் யாத்திரையுடன் இந்தப் பயணங்களை ஒப்பிடுவதோ, அதற்கு அளிப்பது போன்ற சலுகைகளைக் கோருவதோ அரசியல் லாபத்துக்குப் பயன்படுமே தவிர, நியாயமான கோரிக்கைகளாக இருக்காது.

மூன்றாவதாக, பட்டா நிலத்தில் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலம் கட்டிக் கொள்ளலாம் அதற்கு யாரும் தடை ஏற்படுத்தக்கூடாது என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு அதுவும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் திடீர் சர்ச்சுகளால் மதநல்லிணக்கம் சீர்குலைகிற காரணத்தால் மண்டைக்காடு கலவரத்துக்குப் பிறகு, மத்திய அரசால் அமைக்கப்பட்ட நீதிபதி வேணுகோபால் கமிஷன் பரிந்துரையின்படி புதிதாக மதவழிபாட்டுத்தலம் அமைக்க அரசு அனுமதி பெற வேண்டும் என்ற நடைமுறை உள்ளது. தனக்குரிய பட்டாநிலம் என்ற காரணத்தால் அந்த இடத்தில் அதன் உரிமையாளர் என்ன வேண்டுமானாலும் செய்யமுடியாது. முறையான சட்ட

விதிகளின்படிதான் வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்பட வேண்டும். விதிமுறைகளை மீறி வழிபாட்டுத் தலங்களை அமைத்துக் கொள்வது பொது அமைதி யையும், மத நல்லிணக்கத்தையும் சீர்குலைத்துவிடும். ஆகையால் இந்த மூன்று கோரிக்கைகளுமே பெரும்பான்மை இந்து தமிழர் களுக்குப் பாதகம் ஏற்படுத்துபவை ஆகும். யார் எக்கேடு கெட்டால் என்ன? எங்களுக்கு ஓட்டுகள்தான் தேவை என்று எண்ணியே ஆளும்கட்சி, எதிர்க்கட்சி இரண்டும் கிறிஸ்துமஸ் விழாவை அரசியல் விழாவாக மாற்றியுள்ளன.

காமராஜின் சீடரான பெரியவர் தாணுலிங்க நாடார், அரசியல்வாதிகளுக்கு ஆறுமுகசாமிதான் தெய்வமென்று சொல் வார். ஏனென்றால், ஓட்டுப்பெட்டிகள் ஆறுமுகங்கள் கொண்ட வையாக இருந்தன. எனவே கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களின் மீது அரசியல் கட்சிகளுக்கு ஆர்வமோ அக்கறையோ ஈடுபாடோ கிடையாது. கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்களின் ஓட்டுகள் மீதே ஆர்வம் என்பது மட்டுமே உண்மை. இதை நடுநிலையான கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அண்டை மாநிலம் கேரளத்தின் முதல்வராக இருந்து இப்போது ராணுவ அமைச்சராக உள்ள ஏ.கே. அந்தோணி கேரள முதல்வராக இருந்தபோது, மராடு நகரத்தில் நிகழ்ந்த படுகொலைச் சம்பவங்களைத் தொடர்ந்து ஒரு முக்கியமான கருத்தை வெளிப் படுத்தினார்.

கேரளத்தில் சிறுபான்மை இன மக்களாகிய இஸ்லாமியர் களும், கிறிஸ்தவர்களும் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்று வதற்குத் தங்களது மத ஒற்றுமையைப் பயன்படுத்துகின்றனர். அரசியல் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி காரியத்தைச் சாதித்துக் கொள்கின்றனர். இத்தகைய நிலை நீடித்தால் அது இந்தத் தேசத்துக்குப் பேராபத்தை ஏற்படுத்தும். சிறுபான்மை மதத்தினரின் இத்ததைய போக்கு மதநல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் என்ற உண்மையைப் பட்ட வர்த்தனமாக வெளிப்படுத்தினார். அந்தோணியின் இந்தக் கருத்தை இஸ்லாமிய, கிறிஸ்தவ மத இயக்கங்கள் புரிந்து கொள்ள வேண்டும். தங்களது மத விழாக் களுக்கு அரசியல்வாதிகளை அழைக்க வேண்டிய அவசியமென்ன? கோரிக்கைகளை எழுப்புவதற்கு மத விழா மேடைகள் ஏன் பயன்படுத்தப்பட வேண்டும்? இவை யெல்லாம் புனிதமான மதவிழாக்களின் மகத்துவத்தைச் சீர்குலைக்கும் செயல் என்பதை ஏனோ

இவர்கள் புரிந்துகொள்ள மறுக்கின்றனர். மத விழாக்களை அரசியல் ஆக்குவது மத நிறுவனங்களுக்கும் நல்லதல்ல; அரசியல் கட்சிகளுக்கும் நல்லதல்ல.

## இந்து ஓட்டு வங்கிஏன்? எதற்கு?

1967ஆம் ஆண்டு தொடங்கி திராவிடக் கட்சிகள் ஆட்சிக்கு வந்தபிறகு சமுதாய முன்னேற்றத்திற்குப் பல்வகையிலும் பாடு பட்டு வந்த இந்துக்கள், குறிப்பாக அந்தணர்கள் நசுக்கப்பட்டு வருகிறார்கள். கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் முற்படுத்தப் பட்ட இனத்தவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். சென்ற 2010 நவம்பர் மாதம், அந்தணர்கள் கருவறையிலிருந்து கணினி வரை ஆதிக்கம் செலுத்துவதாக மதுரை உயர்நீதிமன்றத்தில் நாத்திக அமைப்புகள் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டுள்ளனர். முயற்சி திருவினையாக்கும் என்ற எண்ணம் கொண்டவர்கள் அந்தணர்கள். இதற்கு இவர்கள் ஏன் ஒப்பாரி வைக்க வேண்டும்? அரசு இட ஒதுக்கீடு ஜாதிகளின் அடிப்படையில் அமைந்து உள்ளன. ஜாதிகள் ஒழிக்கப்படவேண்டும் என்று ஒருபக்கம் முழக்கமிடும் அரசியல் கட்சிகள் முடிந்தால் 100 சதவிகித இடஒதுக்கீடையும் பிற்படுத்தப் பட்டோருக்கு அளித்திட முயற்சிப்பார்கள். ஜாதிகள் ஒழிய வேண்டும் என்பதற்குப் பொருள் உயர்சாதியினரை நசுக்க வேண்டும் என்பதாகும்.

சாதிகள் ஒழிக்கப்பட்டால் அதன் அடிப்படையில் இட ஒதுக்கீடு பெறுவது எப்படி? இட ஒதுக்கீடு சாதி அடிப்படையில் ஏன் அமைய வேண்டும்? அனைத்து சாதியினரிலும் செல் வந்தர்களும் ஏழைகளும் இருக்கின்றனர். ஆகவே பொருளாதார அடிப்படையில்தான் இடஒதுக்கீடு அமைய வேண்டுமே ஒழிய சாதி அடிப்படையில் அல்ல. சென்ற 60 ஆண்டுகளாய் இட ஒதுக்கீடு சாதி அடிப்படையில் இருந்து வருகிறதே. அதன் பலனாக பிற்படுத்தப்பட்டோரோ அல்லது மலைவாழ்மக்களோ முன்னேற்றமே அடைய வில்லையா? இதைப் பற்றியெல்லாம் எந்த அரசியல் கட்சித் தலைவர்களும் பேசமாட்டார்கள். இடஒதுக்கீடு ஒரு பக்கம் இருக் கட்டும். முற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் எந்தப் பிரச்சனையையும் எதிர்கொள்ளவில்லையா? அவர்கள் சார்பில் சட்ட சபையில் பேசுவதற்கு குரல் கொடுப்பதற்கு யாருமே இல்லையே? தாம் வாழ்ந்து வரும் வீட்டை இடிப்பதற்கு கோடரி மற்றும் கடப்பாரையை கொடுத்து உதவுவதுபோல், தன் குலத்தை வேரறுக்க விரும்பும் தி.க.

தி.மு.க. அ.தி.மு.க. கட்சியினருக்கு அவ்வப்போது ஆலோசனைகளைக் கூறிவருவது இந்த முற்படுத்தப்பட்ட இனத்தவரின் அறிவு ஜீவிகளே. இந்து சமுதாயம் ஒன்று சேர்ந்து போராடத் தெரியாத கோழைகள் நிறைந்த ஒரு கூட்டம். ஆகவே மற்றைய சமுதாயத்தினர் பெறும் பல நன்மைகளை இந்து சமுதாயம் பெறுவதற்கு இயலாது போகிறது. திராவிட கலாசாரத்தில் இழவு கொண்டாடப்படும் வீட்டிலும், கல்யாண வீட்டிலும் முக்கியமான அரசியல் முடிவுகள் வெளி யிடப்படுகின்றன.

இதற்கு உதாரணம் 24.1.2011 அன்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் வீட்டில் நடந்த திருமணவிழாவில் முத்தமிழ்க்காவலர், இராமானுசரை விஞ்சிய சமூக சீர்திருத்தவாதி கருணாநிதி தான் அரசியலில் இருந்து ஓய்வு பெற்று கட்சிப் பணிகளில் ஈடுபடப்போவதாகக் கூறிய நிகழ்ச்சி யாகும். கல்யாண வீட்டிற்குப் போனோமா? பார்ப்பனப் புரோஹி தர்களை விட அதிக அளவு கட்டாய நிதி வசூல் செய்தோமா? உணவு உட் கொண்டோமா? வந்தோமா? என்று இல்லாமல் அங்கே போய் அரசியல் பேசுவானேன்? யார் வரிப்பணத்தில் ஜெருசலம், பெத்தலகேம் யாத்திரைக்கும், ஹஜ் யாத்திரைக்கும் பணத்தை விரயம் செய்வது? ஏன் அந்த நிதியுதவி முக்திநாத் செல்வோர்க்கும் திருக்கைலாய யாத்திரை செல்வோருக்கும் வழங்கக்கூடாது? இதுதான் இந்தியா Brand செக்குலரிசம்.

இந்து சமய அறநிலையத்துறையின் அத்துமீறல்களையும் அடாவடித்தனத்தையும் இன்று நாம் கண்டு கொள்ளாது இருந்துவிட்டால் நாளை நம் கோயில்கள் இவர்களால் சூறையாடப்படும். திருக்கோயில் உண்டியல்களிலிருந்து பெறப்படும் பணம் அரசியல் வாதிகளின் அவ்வப்போது இடும் ஆணைகளுக்கேற்ப செலவிடப் படுகிறது. அண்ணா இறந்தநாளன்று திருக்கோயில் பணத்தைச் செலவழித்து சமபந்தி போஜனம் மேற்கொள்ளப்படுகிறது. இராமாநுசர் காலம் தொடங்கி 1000 ஆண்டுகளாக வைணவத்திருக்கோயில்களிலே நாளும் சமபந்தி போஜனம் நடைபெற்று வருவதை இவர்கள் அறிவார்களா? திருக் கோயில்களை இந்துசமய அற நிலையத்துறை என்னும் அரக்கனின் பிடியிலிருந்து விடிவித்திட இந்துக்களிடையே ஒற்றுமை தேவை.

சில ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற ஆந்திர மாநிலத் தேர்தலில் இந்து சமய அறநிலையத் துறைக்கு மேல் அதிகாரமுள்ள ''ஹிந்து பரிக்ஷத்''தினை ஏற்படுத்திக் கொடுப்போருக்கே நாங்கள் வாக்களிப்போம் என்று ஆந்திராவில் குறிப்பாக திருக்கோயில் உள்துறைப் பணியாளர்கள் மற்றும் இந்து சமூக நல ஆர்வலர்கள் தம் கருத்தை வெளியிட்டனர். இந்தக் கோரிக்கையை தேர்தலில் வெற்றி பெற்றால் நாங்கள் ஏற்றுக் கொள்வோம். அதற்குரிய சட்டத்தை இயற்றிடுவோம் என்று மறைந்த ராஜசேகர் ரெட்டியின் தலைமையிலான காங்கிரஸ் கட்சி வாக்களித்தது. அவ்வாறே தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சி அதற்குரிய மசோதாவைத் தாக்கல் செய்து சட்டமாக்கி அமுல் படுத்திடவும் செய்தது. அமுல்படுத்திடும் பணியை அவர் இறந்த பின் பதவி யேற்ற திரு. ரோசய்யா மேற்கொண்டார். ஒன்று திரண்டால் வாழ்ச்சியேயுண்டாகும், வீழ்ச்சி என்பதே கிடையாது என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு உதாரணமாகும்.

அண்மையில் திருவரங்கம் பெரியகோயிலில் அரங் கேற்றப்பட்ட பிரும்மரத மரியாதை ஒழிப்பு என்னும் சட்டத்திற்குப் புறம்பான செயலை திருவரங்கம் கோயில் இணைஆணையரும் அறநிலையக்குழு தலைவரும் முறையற்ற வழிகளைக் கையாண்டு தற்காலிக வெற்றி பெற்றுள்ளனர். இந்த அத்துமீறல்கள் நடந்த போது நம்மிடையே உள்ள பிரபலங்கள் வேண்டிய அளவிற்கு எதிர்க்குரல் கொடுக்க முன்வரவில்லை. அரசியல்வாதிகளை நம்பி மோசம் போயினர். பிரபலங்கள் தங்கள் சேவை அமைப்புகளின் 500 அல்லது 1000 அங்கத்தினர்களைக் கொண்டு திருவரங்கத்தில் அமைதியான முறையில் ஓர் வீதிப் பிரதக்ஷிணம் நடத்தி அதிகாரி களைப் பணிய வைத்திருக்கலாம். சமுதாயப் பொதுப் பிரச் சனையாக இதைக் கருதாமல் ஏதோ இது ஒரு தனி நபர் மரியாதைக் கான போராட்டம் என்று இவர்கள் எண்ணங் கொண்டதால், இதுபோன்ற முயற்சிகளில் இறங்கவில்லை. பட்டர்களும் தம் சிஷ்யர்களைக் கொண்டு வீதிகளில் அமைதியான முறையில் வலம் வந்திருந்தால் மக்களிடையே எழுச்சி ஏற்பட்டிருக்கும்.

மேலும் கைசிக மாஹாத்மியம் வாசிக்கப்பட்ட 17.11.2010 இரவு தம்முடைய கோரிக்கைகளை முன்வைத்து ஒரு மணி நேர தாமதமாக அன்றைய முறைகார வேதவ்யாஸ பட்டர் தம்முடைய கைங்கர்யத்தைத் தொடங்கியிருக்கலாம். அதேபோல் திருநெடுந்தாண்டக தொடக்கத்

தன்று (6.12.2010) முறைகார அரையர்கள் தங்கள் வருகையை ஒரு மணிநேரம் தாமதப்படுத்தியிருந்தால் அந்தச் செய்தி உலகம் முழுவதும் பரவியிருக்கும். திருமார்பு லக்ஷ்மி பெரியபெருமாள் திருமார்பில் மீண்டும் பிரதிஷ்டை செய்யப் படுவதற்கு அப்போது மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தை இவர்கள் நினைவில் கொண்டிருந்தால் பெரும் கிளர்ச்சியை அதிகாரிகள் மனத்தில் உண்டுபண்ணியிருக்கலாம். அதே போல் வைகுண்ட ஏகாதசியன்று வேதபாராயண முறைகார பட்டர் தம் செயலைத் தாமதப்படுத்தியிருக்கலாம். ''பூனைக்கும் தோழன் பாலுக்கும் காவலன்'' என்ற பழமொழிக்கு இணங்க கைங்கர்யம் விட்டுப் போய்விடும், கைங்கர்யம்தான் பிரதானம் என்று போலியான வாதத்தை முன்வைத்து தங்கள் மீது தூசி ஒட்டிக் கொள்ளாமல் விழாவினை நடத்திக் கொடுத்தனர்.

வேதவ்யாஸ லக்ஷ்மிநரஸிம்ஹ பட்டர் 18.11.2010 அன்று தனக்கு உரிய மரியாதை எதையும் தேவஸ்தானத்திலிருந்து பெறாமல் தாயார் ஸந்நிதி வழியாகத் அவர் திருமாளிகையைச் சென்றடைந்தார். 26.12.2010 அன்று பராசர திருவேங்கடபட்டர் பிரம்மரத மரியாதையைப் பெறாமல் ஆயிரங்கால் மண்டபத்தை விட்டு அகலுவதற்கில்லை என்று நிர்வாக அதிகாரியிடம் முறையிட்டார். பொது மக்களும் பிரம்மரத மரியாதை கொடுக்கப் படாததை எதிர்த்து கோஷமிட்டனர். அவர் தெற்கு கோபுர வாசல் வழியாக திருமாளிகையைச் சென்றடைந்தார். ஆனால் 27.12.2010 அன்று ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான நடைமுறைக்கு மாறாக அனைத்து தேவஸ்தான மரியாதைகளுடன் தெற்கு உத்தரவீதி, மேலை உத்தர வீதி, வடக்கு உத்தர வீதி, கீழை உத்தர வீதி வழியாக அலுவலக ஊழியர்கள் புடைசூழ கால்நடையாக ஊர்வலம் வந்தார் அரையர். இவர் இந்தப் போலி மரியாதைகளைத் துறந்து 200 அடி தூரத்தில் உள்ள தமது திருமாளிகையைச் சென்றடைந்திருக்கலாம். இந்தச் செயல் மூலம் தமக்குரிய மரியாதையை முறையற்ற வழியில் தடுத்து நிறுத்தியதற்காக தங்களது மனக்குமுறலை வெளிப் படுத்தியிருக்கலாம்.

But every body except a few wants to be Goodie-Goodie with the E.O./C.B.T. driven by some unknown fear. அதன் விளைவுதான் ''அரையர் கால்நடை பிரம்மரதம்''. பிரம்மரத மரியாதையை இவர்கள் மனம் போனபடி பெற்றுக் கொள்ள முடியாது.

ஏனெனில் இது சம்ப்ரதாயம் சார்ந்த மரியாதை. அரையர்களை மையப்படுத்தித்தான் திருஅத்யயன உத்ஸவம் நடைபெறுகிறது. தங்கள் கௌரவத்தை இப்படி காற்றில் பறக்க விட்டிருக்கவேண்டாம். அரையர்களின்/ பட்டர்களின் பங்கு இல்லாமல் எப்படி அத்யயன உத்ஸவம் நடைபெற்றிருக்கக்கூடும்? ஆகவே இனிவரும் காலங்களில் என்ன அவமரியாதை அளிக்கப் பட்டாலும் /அநீதி இழைக்கப் பட்டடாலும் எதிர்க்குரல் கொடுக்க இவர்கள் முன்வருவார்களா என்பது ஒரு கேள்விக்குறியே!

இதில் இணைஆணையருக்கு அவ்வப்போது தூபம் போடும் செயலை நம் இனத்தவர்களே செய்து வந்தார்கள். தனி நபர் விரோதம் பாராட்டி சமுதாய மரபுகளை அகற்றிட ஊக்குவித்து வந்தார்கள். தினந்தோறும் இந்த கிச்சன் கேபினட், எல்லைப்புறத்தில் போரில் ஈடுபட்டிருந்தால் அதைக் கண்காணிப்பதற்கு எப்படி 24 மணிநேரமும் வேலை செய்வார்களோ அதைப் போல் இதன் உறுப் பினர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். இயற்கை நீதி வழங்குதல் என்னும் சமூகத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கை களுக்கு முரணாக அதிகாரிகள் செயல்பட்டு வந்தனர். இதற்கு நீதியை நிலைநாட்ட வேண்டிய அறநிலையத்துறை ஆணையரும் இந்த மரபுமீறலைப் பற்றிக் கண்டு கொள்ளவில்லை. நாத்திக அமைப்புகளைத் தூண்டிவிட்டு அதில் குளிர் காய்ந்து வந்தனர் திருக்கோயில் அதிகாரிகள். ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் ''ராமானுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்'' என்று சாற்றுமுறையின் போது ஸேவித்து வருகின்றார்கள். கோயில் பழக்க வழக்கங்கள் என்பது அதன் ஆணிவேராகும். அதை அதிகாரிகள் வெட்டி எறிய முற்படும்போது அனைவரும் ஒன்றுகூடி எதிர்த் திருக்க வேண்டும். அல்லது உலகத்தின் மூலைமுடுக்கில் உள்ளோர் கவனத்திற்கு இட்டுச் சென்றிருக்க வேண்டும்.

இதில் எதையும் நாம் செய்யவில்லை. ''கலிகாலத்தின் கொடுமைகளைப் பற்றி ஸ்ரீமத் பாகவதத்தில் சொல்லப்பட்டுள்ளது. இது எல்லாம் எம்பெருமான் சங்கல்பம். இதைப்பற்றி நாம் கவலைப் படுவானேன்? நடப்பது நடந்தே தீரும்'' என்று வறட்டு வேதாந்தம் பேசிக்கொண்டு அனைவரும் உத்ஸவத்தை நடத்தித் தந்தனர். வயிற்றுவலியின் கொடுமை அவனவனுக்கு வந்தால்தான் தெரியும். தன்

எதிரிக்குச் சொந்தமான அடுத்த வீடு பற்றி எரிவதைப் பார்த்து அதன் பக்கத்து வீட்டுக்காரன் மகிழ்ச்சியுற்றானாம். ஆனால் அவன் வீடு, பக்கத்து வீட்டில் ஏற்பட்ட தீயின் காரணமாய் பற்றியெரிய ஆரம்பித்தபோதுதான் தன் தவற்றை உணர்ந்தானாம். தனிப்பட்ட முறையில் இந்தத் திருக்கோயிலில் ஒருவருக்கொருவர் புறம் சொல்லிக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். ஸ்ரீவசனபூஷணத்தில் சொல்லப்பட்ட ஒரு ஸ்ரீவைஷ்ணவனுக்கு அமைந்திருக்க வேண்டிய நற்பண்புகள் இப்போது காணப்படவில்லை. பிறர் துன்பங்கண்டு ஐயோ! என்று இரங்குதல் ஸ்ரீவைஷ்ணவ லட்சணம் என்று நஞ்சீயர் கூறியதாகச் சொற் பொழிவாளர்கள் கண்ணீர் மல்க, நாத்தழுதழுக்க மேடையிலே கூறிடுவர். ஆனால் பிறர் துன்பங் கண்டு மகிழ்ச்சி கொள்ளும் ஸ்ரீவைஷ்ணவர்களே எல்லா இடங் களிலும் நிறைந்திருக்கின்றனர் என்றபோதும் ஸ்ரீவைஷ்ணவத் தலைநகரான ஸ்ரீரங்கத்தில் அவர்கள் அதிக அளவில் காணப் படுகின்றனர் என்ற உண்மையை உள்ளத்திலே கொள்வது சற்றுக் கடினம்.

காவிரியின் குறுக்கே மேட்டூரில் அணைக்கட்டு இருக்கும் வரைதான் அது காவிரி. அந்த அணை உடைக்கப்பட்டால் அது காட்டாறுதான். அதற்குக்காவிரி என்ற பெயர் இருக்காது. இதை ஒத்ததுதான் அறங்காவலர் குழுவின் 27.9.2010 தேதியிட்ட தீர்மானம். இந்தத் தீர்மானம் மத நம்பிக்கை, மரபுகளில் குறுக்கீடு செய்யும் ஓர் தீர்மானமாகும். இதுபோன்று இன்னும் சில நாட்களில் பல பழக்க வழக்கங்களுக்கு இந்த அ(ம)றங்காவலர் குழு முற்றுப் புள்ளி வைக்க முற்படலாம். இன்று நாம் போராடாவிட்டால் என்றுமே நீதி கிடைக்காது. இவற்றிற்கெல்லாம் ஒரே வழி தனிப் பட்ட விருப்பு வெறுப்புகளைத் தள்ளிவைத்துவிட்டு சமுதாயப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஒன்று திரண்டு போராடவேண்டும்.

எல்லாத் தொகுதிகளிலும் 5000 இந்துக்கள் அவர்களுடைய சில அடிப்படைக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டால்தான் அந்தக் கட்சிக்கு வாக்களிப்பர் என்று அரசியல் கட்சிகளுக்குச் செய்தி போகக் கூடு மானால் அதற்காக அதன் தலைவரைச் சுற்றிச்சுற்றி கும்பிடு போடு வார்கள் அரசியல்வாதிகள். அதை நோக்கித்தான் இந்த வாக்கு வங்கி என்னும் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்கள் தங்களின் ஒற்றுமை காரணமாக

மதத்தலைமையின் வேண்டுகோளை ஏற்று வாக் களிக்கின்ற தன்மை இயல்பாகவே அவர்களிடம் உள்ளது. இதன் காரணமாக அனைத்து அரசியல் கட்சிகளும், அரசியல் வாதி களும், ஒட்டு மொத்த சிறுபான்மை இனத்தவர்களின் ஓட்டுக்களைப் பெறுவதற்காக அவர்களின் அனைத்துக் கோரிக்கை களையும் நிறைவேற்றி வைக்கின்றனர். பெரும்பான்மை இந்து மக்களாகிய நாம் ஜாதி, சினிமா கவர்ச்சி, அரசியல் கட்சி என்கிற அடிப்படையில் பிரிந்து நின்றும், இலவசத் திட்டங்களில் மயங்கியும் வாக்களிக் கின்றோம். தற்போது இந்துக்களின் ஓட்டை விலை கொடுத்து வாங்கிட முடியும் என்கிற நிலைமையும் உள்ளது.

இதன் காரணமாக எந்தவொரு அரசியல் கட்சியும், அரசாங்கமும் இந்துக்களின் நலன் குறித்துக் கவலைப்படுவதில்லை. இந்துக்களின் முன்னேற்றத் திற்காக எந்தவொரு செயலையும் செய்வதில்லை. ஏன்? இந்து என்று சொல்லிக் கொள்ளவே தயங்கும் சூழ்நிலை உள்ளது. தற்போது மதச்சார் பற்ற தன்மை என்கிற வார்த்தைக்கு அர்த்தமே இந்துக்களுக்கு விரோதமாக செயல்படுவது என்றாகிவிட்டது.

இந்நிலையில் இந்துக்கள் ஒன்றுபட்டு ஹிந்து தர்மத்திற் காகவும், தேச நலனுக்காகவும் வாக்களிக்க வேண்டிய கட்டாய நிலை தோன்றியுள்ளது. இன்னும் ஒரு வருடத்திற்குள்ளாக தமிழகம் சட்ட மன்றத் தேர்தலைச் சந்திக்கக்கூடிய சூழ்நிலையில் இந்த இந்து ஓட்டு வங்கியை இந்து சமுதாய நலன் கருதி துவங்கியுள்ளோம். இது இந்து மக்கள் கட்சிக்கான அல்லது பாரதீய ஜனதா கட்சிக்கான ஓட்டு வங்கி அல்ல. இந்து மக்கள் கட்சி இந்த ஓட்டு வங்கியைத் துவங்கியிருந்தாலும் இந்து சமுதாயத்தின் நலன் பெரிதா? கட்சி நலன் பெரிதா? என்று வரும்போது நாங்கள் இந்து சமுதாய நலனுக்கே முக்கியத்துவம் கொடுப்போம் என்கிற உறுதியை உங்களுக்குத் தருகிறோம். தமிழகத்தில் இந்துக்களின் ஜனத்தொகை வெகு வேகமாகக் குறைந்து வருகிறது.

இதன் காரணமாக தமிழர் கலாசாரம் பண்பாடு ஆகியவை அழிந்து வருகிறது. இந்துக் கோயில்களின் நிர்வாகம் அரசு மற்றும் அரசியல் வாதி களின் பிடியில் சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கிறது. திருக்கோயில் வருமானத்தை மட்டும் அரசு அபகரித்துக் கொள்கிறது. இஸ்லாமிய பயங்கர வாதம், கிறிஸ்தவ மோசடி மத மாற்றம் ஆகிய

வற்றின் காரணமாக தமிழக இந்துக்கள் அஞ்சி வாழும் சூழ்நிலை. தமிழர்கள் கல்வி நிறுவனங்கள் துவங்கி நடத்துவதற்கு அரசு மூலம் பல்வேறு தடைகள். இஸ்லாமியர், கிறிஸ்துவர் கல்வி நிறுவனங்கள் துவக்கினால் அரசு சலுகைகள். கல்வி உதவித் தொகை வழங்கு வதில்கூட இந்து மாணவர்களுக்கு அநீதி. பொது இடங்களில் இந்துக் கோயில் ஊர்வலங்கள், திருவிழாக்கள் நடத்துவதற்குப் பல்வேறு விதமான தடைகள், இந்து இயக்கங்களின்மீது அடக்குமுறை நடவடிக்கைகள். இந்து துறவிகள், மடாதிபதிகள் மற்றும் இந்து சமய நம்பிக்கை களை இழித்தும், பழித்தும் அவமதித்தும் நாள்தோறும் செய்திகள். தமிழர்கள் தெய்வமாக வணங்கும் பசுமாட்டை வெட்டி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அவல நிலை.

அரசு மதுபானக் கடைகளின் வியாபாரப் பெருக்கம் காரணமாகக் குடிப்பழக்கத்தினால் தமிழ்ச் சமுதாயம் சீரழிந்து வரும் சூழ்நிலை. இலங்கை, மலேஷியா உள்ளிட்ட வெளிநாடுகளில் இந்துத் தமிழர்கள் அடித்துத் விரட்டியடிக்கப்படும் அவலநிலை. இந்த இழிவுநிலை மாறிட! இந்துக்களின் உரிமையை மீட்டிட! தாய்நாடு, தாய்மதம், தாய்மொழி காத்திட! இந்து ஓட்டு வங்கியில் நம்மையும் நம் குடும்பத்தாரையும் பதிவு செய்து கொள்வோம். நமது ஓட்டை அரசியல்வாதிகள் கொடுக்கும் நோட்டுக்கு விற்பது பெற்ற தாயை விற்பதற்குச் சமமாகும். ஜனநாயக நாட்டின் மிக வலிமையான ஆயுதம் ‘ஓட்டு’. அந்த ஓட்டைக் கையில் வைத்துள்ள நாம் தேச பக்தியோடும், தெய்வ பக்தி யோடும் இந்து ஓட்டு வங்கியில் பதிவு செய்து நாட்டு நலன் காத்திடுவோம். வாசகர்கள் இந்த இதழில் இணைக்கப்பட்டிருக்கும் படிவத்தை நகல் எடுத்து தங்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களை இந்த ஓட்டு வங்கியில் இணைத்துக் கொள்ள உதவவேண்டும். இந்த ஓட்டு வங்கி அன்பர்கள் அர்ஜுன் சம்பத்திற்கோ, அல்லது அவரால் முன் நிறுத்தப்படும் நபருக்கோ ஓட்டளிக்க வேண்டிய தேவையில்லை. அந்தந்த பகுதியில் இந்துக்கள் ஓட்டின் கணக்கை அறிந்து கொள்வதற்கு தான் இது உபயோகப்படுத்தப்படும். நம்முடைய பெரும்பாலான கோரிக்கைகளை கவனத்தில் கொள்வோருக்கே நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

**வாக்காளர் தெரிவிக்க விரும்பும் கருத்துக்களையும், ஆலோச னைகளையும் ஒரு வெள்ளைத் தாளில் எழுதி எங்களிடம் தபால் / அல்லது நேரில் ஒப்படைக்கலாம்.**

## இந்து ஓட்டு வங்கி
## விண்ணப்பப் படிவம்.

**பெயர் :** **வயது :**

**முகவரி :**

☎:

**மின் அஞ்சல் :**

**தொழில் :**

**வாக்கு எண்:** **வார்டு:**

**சட்ட மன்றத் தொகுதி:**

**நாடாளு மன்றத் தொகுதி:**

உறுதி மொழி:

**மேற்கண்ட நான் எனது குல தெய்வத்தின் பேரிலும், இஷ்ட தெய்வத்தின் பேரிலும் சத்யம் செய்து ரூபாய் 10 மட்டும் காணிக்கையாய்க் கொடுத்து எனது ஓட்டை இந்த வாக்கு வங்கியில் பதிவு செய்கிறேன். நாட்டு நலனின் அடிப்படையில் வாக்கு வங்கியின் நிர்வாகிகள் கொடுக்கும் குறிப்பின்படி நான் வாக்களிப்பேன்.**



**திரு. அர்ஜுன் சம்பத்,**
**நிறுவனர், இந்து ஓட்டு வங்கி,**
**தலைவர், இந்து மக்கள் கட்சி,**
**130, வீர கணேச நகர்,**
**கெம்பட்டி காலனி,**
**கோயம்புத்தூர்-641 001.**

**தொலைபேசி : 0422-2394877. தொலைநகல் : 0422-2349922 கைப்பேசி : 098422-44833, 094421-54833. மின் அஞ்சல் : imkarjunsampath@yahoo.co.in இணையதளம் : imk hindu.com**

பாஞ்சஜன்யம் ஆசிரியரின் 3ஆவது குமாரர் சிரஞ்சீவி பரகாலனுக்கு தென்கலை வகுப்பைச் சேர்ந்த தகுந்த வரன் தேவை.

**Bio Data of the Prospective groom Parakalan:**

**K.Parakalan, B.Tech. M.S., Ph.D.(Polymer Science)**
**youngest son of Sri Vaishnava Sri A.Krishnamachari**
**Born on 2/5/1979,**
**Thenkalai Iyengar. Nithininthya Gothram**
**currently employed as a Research Scientist in MASDAR**
**M.I.T. University in Abu Dhabi,U.A.E. Reserch Scientist.**

**Salary Rs. 2.5. lakhs per month.**

**Trying to relocate to U.S. or India contact parents at krishvasu19@gmail.com,**
**reach srivaishnavasri@gmail.com**
**contact the groom at krish park01 @ gmail. com, krishpark@yahoo.com**

**Address -**

**Sri Vaishnava Sri A.Krishnamachari,**
**214, East Uthara St., Srirangam, Trichy - 620006.**
**Ph : 0431 2434398, 98842 89887, 90424 53934.**

**Siblings - 2 elder brothers and 1 elder sister, all married and well settled.**


ஸ்ரீ ராம ஜெயம்
2.5.1979
63X11
46X36
16X35
2.5.1979